# கிராமநலம்

அக்டோபர் - '64



‘வாழ்க நீ எம்மான்



# "நான் காண விரும்பும் கிராமம்"

ஒரு லட்சிய கிராமம், துப்புரவில் மிகச் சிறந்து விளங்கவேண்டும். அங்குள்ள வீடுகள், போதுமான வெளிச்சமும், காற்றோட்டமும் உள்ளவையாய் இருக்கும். ஐந்து மைல் சுற்றளவுக்குள் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்டே, இந்த வீடுகள் கட்டப்பட்டிருக்கும். இந்த வீடுகளில் வாழ்வோர், தங்கள் உபயோகத்திற்காகக் காய்கறிகள் பயிரிடவும், தங்களுடைய கால்நடைகளைக் கட்டிக் கொள்ளவும், போதுமான அளவு முற்றங்கள் இருக்கும். கிராமச் சந்துகளிலும் தெருக்களிலும், கூடியவரை தூசி இருக்காது. கிராமத்தின் தேவைக்கு ஏற்ற அளவு, அங்குள்ள கிணறுகள் இருக்கும். இந்தக் கிணறுகளின் நீரை, எல்லோரும் எடுக்க அனுமதிக்கப்படுவர். எல்லோருக்கும் பொதுவாகக் கூடும் இடமும், கால்நடைகள் மேய்வதற்கான பொது இடமும், கூட்டுறவுப் பால் பண்ணையும், தொழிற் கல்வியை மையமாகக் கொண்ட அடிப்படை, உயர் நிலைப்பள்ளிகளும், இருக்கும். * * * * *

தனக்குத் தேவையான தான்யங்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவைகளையும், கத்ரையும், அந்தக் கிராமம் உற்பத்தி செய்து கொள்ளும். * * * * *

— மகாத்மா காந்தி —



# கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தால், பின், நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்

மாடி 10 | அக்டோபர் 1964 | படி 1


## அண்ணலாரின் அடிச்சுவட்டில்...

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது நம் ஆன்றோர் கடைப்பிடித்த வாழ்க்கை நெறி. பாரதப் பண்பாட்டின் உயிர் நிலையாய் உள்ள இந்தக் குறிக்கோளின் திருவுருவமாக, நம்மிடையே வாழ்ந்தவர், மகாத்மா காந்தியடிகள். அவருடைய பிறந்த நாள், ஆக்கச் சக்திகள் அனைத்தும் மறு மலர்ச்சி பெற்ற பொன்னாளாகும்.

1955-ம் ஆண்டு காந்தி ஜெயந்தி நன்னாளில், நவ பாரதத்தின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருஜியின் திருக்கரங்களால், சென்னை கோட்டையில், "கிராம நலம்" முதல் இதழ் வெளியிடப் பெற்றது. சமுதாய நலத்திட்டம், தேசீய வளர்ச்சித்திட்டம் முதலான கிராம நல வேலைகள் நாடெங்கும் நடைபெறத் தொடங்கிய காலம் அது. அச்சமயம் மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வை ஓங்கச் செய்து, உற்சாகத்தை ஒருமுகப்படுத்தும் ஒரு சிறு சாதனமாக, "கிராமநலம்" பணியாற்றத் தொடங்கியது.

எளிய முறையில் ஆரம்பமான இந்தப்பணி, இந்த ஒன்பது ஆண்டுகளில், பல்கிப் பெருகியிருக்கிறது. குறிப்பாக, கிராமங்களில் புதிய பஞ்சாயத்து ஆட்சிமுறை ஏற்பட்டதைத் தொடர்ந்து, பஞ்சாயத்து செய்திகளுக்கு, 'கிராம நலம்' சிறப்பிடம் தந்து வருகிறது. கிராமங்களில் நடைபெறும் பொதுநல வேலைகளைப்பற்றி, பலரும் அறியச் செய்வதே, இதன் முக்கிய நோக்கமாகும். மேலும், பஞ்சாயத்து ஆட்சிக்கும்—அரசாங்கத்திற்குமிடையே, இருவழிப்பாலமாக அமைய "கிராமநலம்" முயன்று வந்திருக்கிறது. பஞ்சாயத்து ஆட்சி சிறக்க, அதன் ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள் தங்கள் கடமை, பொறுப்புகளை உரிய முறையில் அறிந்து செயல்பட, துணைபுரியும் வகையில், அவ்வப்போது, அரசாங்கக் கொள்கைகளை விளக்கியும், ஆணைகளை அறிவித்தும் வருகிறோம். அதே போல், பஞ்சாயத்துத் தலைவர்கள், மற்றும் பஞ்சாயத்து அலுவல்களில் ஈடுபட்டுள்ள ஊழியர் அனைவரின், அன்றாட நடைமுறையில் காணும் அனுபவங்களை எடுத்துக்கூறும் செய்திகளையும் வெளியிட்டு வருகிறோம்.

இந்த வகையில், கடந்தகால நடப்புகளை ஆராய்ந்து பார்க்கும்போது, ஓர் அடிப்படையான கொள்கையை வற்புறுத்த வேண்டி வருகிறது. அதாவது, கிராம நல வேலைகள் அனைத்தும், மக்களின் உற்சாக ஒத்துழைப்பால்தான் நடைபெற வேண்டும்; அரசாங்கம் அதற்கு ஒரு தூண்டுகோலாக நின்று

**அட்டைப்பட விளக்கம்:**

மகாத்மா காந்தியடிகள், நம் நாட்டிற்கு அரசியல் சுதந்திரம் வாங்கித் தந்தவர் மட்டுமல்ல. நம் மக்கள், எல்லா வகையிலும், "வாழ வாங்கு வாழ", வழி வகுத்துத் தந்தவர் அவர். அதனால்தான், அவரைத் தேசப்பிதா என்றழைக்கிறோம். அடிகளார் வலியுறுத்தி வந்த உயரிய கொள்கைகளில் ஒன்று, மக்கள் அனைவரும், தம் இல்லமும் சுற்றுப்புறமும் தூய்மையுடன் துலங்க, அவரவரே துப்புரவு செய்ய வேண்டும் என்பது. இதில், மகாத்மா அவர்களே மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாக நடந்து காட்டினார். புறத்தில் மட்டுமின்றி, அகத்திலும் தூய்மை வேண்டும் என்பதே அண்ணலின் எண்ணம். அவர் எண்ணம் ஈடேற பாடுபடுவோமாக!

# " அண்ணல் காந்தியே ! அணையா ஒளிவிளக்கே ! "

(திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்)

முப்பது ஆண்டுகளாக இந்திய வானத்தில் ஒளி வீசிய பேரொளி ; பலருக்கும் வழிகாட்டிய அன்பொளி ; நாற்பது கோடி மக்களுக்கும் புத்துயிர் அளித்துத் தன் மதிப்பும் தன்னம்பிக்கையும் கொடுத்துத் தட்டி எழுப்பிய தாய் ஒளி; தன்னரசு கேட்க வாயும் தந்த வீர ஒளி; உரிமை வாழ்வினை வாங்கித்தந்த அருள் ஒளி ; பகைத்துக்கிடந்தோரை உடன் பிறந்தார் என உணர முயன்ற ஒற்றுமை ஒளி ; அடக்குமுறையாலும், வழக்க ஒழுக்கத்தாலும் தயங்கிப் புழுங்கிக் கிடந்தாரைத் தன்னைப்போல எண்ணி நடந்த தனி ஒளி ; அந்தநீநடத்தையின் பயனாகத் தீண்டாமைப் பேயை ஓட்டிய மந்திர ஒளி ; கோயில்கள் எல்லாம், அனைவருக்கும் தந்தையாம் இறையவன் நிலையமாய் எல்லோருக்கும் இடந்தருமாறு செய்த அமர ஒளி ; பெண்ணின் பெருமையைத் தாய்மையின் சீராகப் பாராட்டி உலகப் பெருமணிகளாக வாழ வைத்த தியாக ஒளி; "உழைப்பின் பெருமையை உணர்வதே கல்வி", என்ற உண்மை ஒளி ; செயல் வழியே அறிவு வளரும் என்று காட்டிய கல்வி ஒளி ; இப்படிச் சிறுவருக்கும் விடுதலை காட்டிய தந்தை ஒளி ; உலக முழுதினையும் குடும்பமாகக் கொண்டு வாழ்ந்த சமரச சத்திய ஞானப் பேர் ஒளி !

ஆ ! அது மறைந்தது. அழியுமா அந்த ஒளி ? கதிரவன் மறைவான். ஆனால், அழியான். அன்றாடம் நாம் அறியும் உண்மை இது. புற இருளை ஓட்டுகின்ற இந்தக் கதிரவன் ஒளியே மறையவில்லை என்றால், அவனிலும் பல வகையில் சிறந்து, நம் மன இருட்டையெல்லாம் போக்கிப் புத்துயிரும் புத்துணர்வும் தந்த இந்தக் கடவுட்பேரொளியா மறையும் ?

---

(முதல் பக்கத் தொடர்ச்சி.)

துணை புரியுமே தவிர, எல்லாவற்றையும் அதிகாரிகள் மூலமே செய்து விடமுடியாது.

இந்த முக்கிய கருத்தை, நமது முதலமைச்சர், அண்மையில் நடைபெற்ற பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுவில், வற்புறுத்தியுள்ளார் :—

''சுமார் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, கிராம நல வேலைகளில் மக்கள் காட்டிய உற்சாகம் இப்போது எங்கே போயிற்று ? அந்த ஆர்வமும், ஒத்துழைப்பும் வளர்வதற்காகவே, புதிய பஞ்சாயத்து ஆட்சியில், பொதுஜனத்தலைவர்களுக்கு அதிகபொறுப்பும், நிதி வசதியும், அளித்துள்ளோம். இருந்தும், எல்லா வேலைகளையும் அரசாங்க நிதியைக் கொண்டே செய்து விட வேண்டும் என்ற எண்ணம், பஞ்சாயத்துத் தலைவர்களிடையே வளர்ந்து வருவது, மிகவும் வருந்தத் தக்கதாகும். இந்த நிலை மாறியாக வேண்டும்.''

முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ள இந்தப்போக்கு, நீங்குவதற்குரிய வகையில், பஞ்சாயத்துக்கள் பணி புரியும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்குள்ள ஒரே வழி, பஞ்சாயத்துக்குரிய நிதி ஆதாரங்களை பெருக்குவதில் அதிக கவனம் செலுத்துவதும், மக்களைப் பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்டங்களில் மேலும் தீவிரமாக ஈடுபட ஊக்குவிப்பதுமே ஆகும். அப்போது தான், பஞ்சாயத்து ஆட்சி, உண்மையில், மக்கள் இயக்கமாக, உயிராற்றலோடு, சிறந்த பணி செய்ய முடியும்.

கிராமங்களில் புது வாழ்வு மலர, காலமெல்லாம் பாடுபட்டு வந்த காந்தியடிகள் காட்டிய நெறியை ஊன்றி ஆராய்ந்தால், இதற்கான வழிவகைகள் ஒவ்வொருவருக்கும், அவரவர் நிலைக்கு ஏற்ப, நன்கு தெரிய வரும்.

—o—

# சுதந்திரச் சூத்திரம்

பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு,
கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் அவர்கள்
காந்தி ஜெயந்தியின்போது விடுத்த வேண்டுகோள்.

அன்புள்ள நண்பர் அவர்களுக்கு,

நம்மை மனிதராக்கி, உலக அரங்கிலே இந்தியாவிற்கு உயர்ந்ததோர் இடம் பெற்றுத் தந்த காந்தியடிகளின் நினைவிற்கு அஞ்சலி செலுத்தும் முறையில், அடுத்த மாதத் தொடக்கத்தில் காந்தி ஜெயந்தி விழா நாடெங்கும் கொண்டாடப்படவிருக்கிறது. எந்த இலட்சியங்களுக்காக அண்ணல் காந்தி தமது வாழ்வையும், இறுதியில் தமது உயிரையும், அர்ப்பணம் செய்தாரோ, அந்த இலட்சியங்கள் நாட்டில் நிலைபெற்று ஓங்கச் செய்வதே, அவருக்கு நாம் செலுத்தக்கூடிய சிறந்த மரியாதையாகும். காந்தியடிகள் கனவு கண்ட கிராமராஜ்யத்தை நனவாக்கும் மாபெரும் பொறுப்பு உங்களுக்குக் கிட்டியுள்ளது உங்களுக்குச் சிறந்ததொரு வாய்ப்பு என்பது மட்டும் அல்ல, நாட்டு மக்களின் நற்பேரும் ஆகும் என்று நம்புகிறேன்.

காந்தி ஜெயந்தி கொண்டாட்டத்தின்போது, அண்ணலின் கருத்துக்களை மக்களுக்கு நினைவூட்டுவதோடு, நாட்டு மக்களுக்கு அவர் அளித்த சுதந்திரச் சூத்திரமாகிய கதர், மக்களிடையே பரவச் செய்ய நீங்கள் முழு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவே, உங்களுக்கு இக்கடிதம் வரைகின்றேன்.

அரசியல் சர்ச்சைகளுக்கும், பொருளாதாரத் தத்துவ வியாக்கியானங்களுக்கும் அப்பாற்பட்டது, கதர். சுய மரியாதைக்கும் சுதந்திர உணர்விற்கும் அது சின்னமாக விளங்குகின்றது என்பது மட்டுமல்ல; கிராமங்களில் வாழும் ஏழை மக்களுடன் நாம் என்றும் உறவு கொண்டு ஒன்றி வாழ்வோம் என்ற உறுதிமொழியுமாகும். கிராம மக்களின் நல்வாழ்வை உருவாக்கும் பெரும் பொறுப்பை மேற்கொண்டுள்ள நீங்கள் இதுவரையில் காட்டி வந்தது போலவே, இனியும் கதர் இயக்கத்தில் அக்கறை காட்டி ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் மட்டுமல்ல, உங்களைச் சார்ந்தோரும், நீங்கள் காட்டும் வழியைப் பின்பற்றக் காத்து நிற்கும் நூற்றுக்கணக்கான மக்களும், கதர் அணிந்து கிராம முன்னேற்றத் தொண்டர் படையைச் சார்ந்தவர் என்று பெருமிதத்துடன் அறிவிக்க வேண்டும். குறிப்பாக, அடுத்த இரண்டு திங்களில்—காந்தியடிகளின் பிறந்த நாள் கொண்டாடப்படும் அக்டோபர் மாதத்திலும், தீபாவளியை ஒட்டி நீங்கள் புத்தாடை வாங்கும் நவம்பர் மாதத்திலும்—கதரையே வாங்கி, எண்ணற்ற ஏழை மக்களின் உழைப்புக்கு உரிய மதிப்பு அளிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

சென்னை அரசாங்க கதர்த்துறை, இவ்வாரங்களில் கதர் விற்பனைக்காக விசேஷ ஏற்பாடுகள் செய்து வருகின்றது. விற்பனைச் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. அரசாங்க கதர்த்துறை மட்டும் அல்ல, அதிகாரச் சார்பற்ற பொதுச் சங்கங்களும், அமைப்புகளும் கதரைப் பரப்பும் நற்பணியில் ஈடுபட்டு வருகின்றன. அவை அளிக்கும் வாய்ப்புகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வதுடன், உங்களுடன் பணியாற்றும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆர்வமுடன் இதில் ஈடுபட ஆலோசனை கூறி, ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
**கா. திரவியம்.**

**சென்னை-9,**
**29—9—1964.**

---

*திருச்சி வானொலி நிலயத்திலே, சிறப்பு நிகழ்ச்சியாக, இந்த வேண்டுகோள், அக்டோபர் 9, 13 தேதிகளில் மாலை 6-40-மணிக்கு ஒலிபரப்பாகியது.*

**G.N.—1எ**

# ஆக்கப் பணிபுரியும் தொண்டர்கள்

## "ஜப்பானிய முறை சாகுபடியில் என் அனுபவம்"

—திரு ஏ. காளத்தியப்பன், சோழவந்தான் பேட்டை

"முயற்சி திருவினை ஆக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு. உண்மையான உழைப்பு என்றுமே வீண் போவதில்லை. நல்ல வேலைத் திட்டம் எதுவும் பயனளிக்காமல் போகாது. நம்பிக்கையுடனும் உறுதியுடனும் பணியாற்றி, சிறு விவசாயப் பண்ணையை வளம் கொழிக்கும் பண்ணையாக மாற்றியமைத்துள்ளார், இக்கட்டுரை ஆசிரியர். அவருடைய அனுபவத்தை, ரசமாக, அவரே கூறுவதைக் கேளுங்கள்:

—ஆசிரியர்.

நிலக்கோட்டைத் தாலூகா, சோழவந்தான் பேட்டை கிராமத்தில், திரு எஸ். கோபிநாத் அவர்கள் பண்ணையில் நான் சுமார் ஐந்து வருஷங்களாக விவசாயம் செய்து வருகிறேன். இந்தப் பண்ணையை, சோழவந்தான் பக்கத்தில் ''பெரிய பண்ணை'' என்று அழைப்பது வழக்கம். எங்கள் பண்ணைக்கு இக் கிராமத்தில் சுமார் 30 ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளது. இவை யாவும் இருபோக சாகுபடி செய்யக்கூடியவை. இவற்றை எங்கள் சொந்த பண்ணையாக வைத்து நடத்தி வருகிறோம்.

நான் இந்தப் பண்ணையில் ஜப்பானிய முறையிலேயே நெல் சாகுபடி செய்து வருகிறேன். இத் துறையில் எனக்கேற்பட்ட அனுபவங்களை எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

இந்த முப்பது ஏக்கர் நஞ்சை நிலங்களிலும் வருடத்திற்கு இருமுறை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. முதலில் மே, ஜூன் மாதங்களில் மழை கிடைக்கும் போது நாற்றங்காலுக்காக உள்ள இடத்தை நன்றாக உழுது புழுதியாக்குவேன். ஆட்டுக் கிடை வைப்பேன். ஏக்கருக்கு 10 வண்டி மக்கிய எரு அடிப்பேன். நாற்றங்கால் தயாராக வைத்திருப்பேன். ஜூன் மாதம் கடைசி வாரத்தில் பரவ வேண்டிய விதையை (கோ. 29), ஒரு படி உப்பை 30 படி தண்ணீரில் கரைத்து வைத்துக் கொண்டு அதில் விதையைப் போட்டு மேலே மிதக்கக்கூடிய பதர்களை அப்புறப்படுத்திவிட்டு அடியில் தங்கிய விதையை நல்ல தண்ணீரில் போட்டு தண்ணீரை வடித்துவிட்டு அந்த நெல் விதையை நிழலில் உலரவிடுவேன். அது நன்றாக உலர்ந்த பிறகு அதில் மூட்டை 1க்கு 1/3 கிலோ அக்ரசான் பவுடர் போட்டு கலக்கி சாக்கில் எடுத்து வைத்து தொட்டிகளில் அல்லது வாய்க்காலில் ஊறவைப்பேன். ஊறவைத்த 24 மணி நேரம் கழித்து அதை எடுத்து மூட்டையாக தண்ணீர் வடிய வைப்பேன். இதற்குள், மேலே சொன்ன புழுதி நாற்றங்காலில் 4 அடி அகலத்தில் அந்தந்த வயல்களின் நீளத்திற்குத் தகுந்தாற்போல் பாத்திகள் மேட்டுப்பாங்காக அமையும்படி போடுவேன். ஒரு ஏக்கருக்கு பொறுக்கு வித்து 12 படி வீதம் நாற்றங்காலில் விதைப்பேன். விதைத்த பிறகு அந்த விதைகள் மூடும் அளவுக்கு மண் தூசி அல்லது பொடி மணல் போடுவேன். பிறகு தண்ணீர் பாய்ச்சுவேன். நாற்றுப்பாவி 20 தினங்களில் அதில் களைகள் இருந்தால் அவைகளை அப்புறப்படுத்தி விட்டு என்டிரின் ஒரு அவுன்சுக்கு 40 படி தண்ணீரில் கலந்து ஸ்ப்ரேயர் மூலம் அடிப்பேன்; அல்லது பி. எச். 10% செண்டு 2க்கு 1 பவுண்டு வீதம் ஆர்மேடாட்சில்டர் மூலம் அடிப்பேன். இவ்வாறு செய்வதால் பல நன்மைகள் உண்டு. அவையாவன:—(1) நாற்றங்காலில் தண்ணீர் வடியவும், காய்ச்சல் ஏற்படவும் உதவுகிறது. (2) நாற்றங்காலில் களைகள் ஏற்பட்டு பரவாமல் தடுப்பதற்கும் உதவுகிறது. (3) நோய்கள் அணுகாமல் இருக்கிறது. (4) நாற்றுகள் பறிப்பதற்கும் வேர்கள் அறுந்து போகாமல் இருக்கவும் பிடுங்க சுலபமாகவும் இருக்கிறது. நீர் நாற்றங்களும் இதே மாதிரி 4 அடி அகலத்தில் மேடான பாத்திகள் போட்டு விதை பரவுகிறேன். அதிலும் மேலே கண்ட நன்மைகள் இருக்கின்றன.

### முறையோடு செய்ய வேண்டியவை.

வயல்களில் முதல் போகத்திற்கு (சஸ்பேனியா அல்லது டெஞ்சா அல்லது கொளுஞ்சி) போன்ற குழை விதைகளை முன் வருஷ இரண்டாம் போக அறுவடைக்கு முன் 1 வாரத்தில் விதைத்து விடுவேன். அது நன்றாக வளர்ந்திருக்கும். அதை தண்ணீர்வந்ததும் டிராக்டர் மூலம் இரண்டு உழவு உழுது நான்கு நாள் தண்ணீர் கட்டி விடுவேன். பிறகு (Burmese Sattun) பர்மீஸ் சட்டன் உதவியால் அதை அமுக்குவேன். மறுநாள் ஏக்கர் 1க்கு 36 கிலோ கொண்ட சூப்பர்பாஸ்பேட்மூட்டைகளில் 2மூட்டை வீதம் போட்டு 'puddler' என்ற யந்திரம் மூலம் சேர் கலக்கி மாடுகள் பூட்டிய பரம்பு தடவி சமப்படுத்துவேன். நாற்றுகளைப் போட்டு கயிறுகள் மூலம் லையன் நடவு போடுவேன். ஒரு லையனுக்கும் மற்றொரு லையனுக்கும் குறுகியகாலப்பயிர்களுக்கு 6 அங்குலம் இடைவெளியும், நீண்டகாலப் பயிர்களுக்கு 8 அல்லது 9 அங்குலம் இடைவெளியும் விட்டு, ஒன்று அல்லது 2 நாற்றுகளுக்குக் கூடாமல், நிமிர்ந்து நிற்

(அடுத்த பக்கம் பார்க்க)

# பஞ்சாயத்து முயற்சியில் மாந்தோட்டம்

சி. முருகேசன், உர உற்பத்தி ஆய்வாளர், நூத்தலாபுரம்.

நாட்டின் தனி மனிதர்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கினுல் மட்டும், வளர்ந்து வரும் நமது சமூகத்திற்கு அது போதாது. ஆகையால் ஒவ்வொரு பஞ்சாயத்தும் தங்கள் பஞ்சாயத்தில் அமைந்துள்ள புறம்போக்கு நிலத்தில் மா, தென்னை, புளி, கருவேல் போன்ற மரங்களை உண்டாக்கி அதன் மூலம் பஞ்சாயத்திற்கு வருவாயைப் பெருக்குவதுடன், நாட்டின் சுயதேவைப் பூர்த்திக்கும் வழி செய்யவேண்டும் என்று, அரசினர் ஒரு திட்டம் வகுத்து, அதை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் செயல்படுத்த வேண்டுமென்று கூறியுள்ளனர். அந்த ஆணையின் கீழ் நடைபெறுவதுதான், நூத்தலாபுரம் பஞ்சாயத்து மாந்தோட்டம்.

இந்தத் தோட்டம் 4 ஏக்கர் 25 செண்ட் விஸ்தீரணம் கொண்டது. இதில் 140 மாங்கன்றுகளும் 70 தென்னங்கன்றுகளும் 1962-ம் ஆண்டு மார்ச்சு மாதம் நடப்பட்டன. இந்தத் தோட்டம் அமைக்கும் செலவிலும், பின்னர் அதற்குத் தண்ணீர் விட்டு பராமரிக்கும் செலவிலும், 2/3 பங்கு தொகையை சர்க்கார் மானியமாகக் கொடுக்கின்றது. 1/3 பங்கை அந்தப் பஞ்சாயத்தே ஏற்றுக் கொள்கின்றது. இதுவரை இந்தத் தோட்டத்திற்காக ரூ. 2,385.45 மொத்தம் செலவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாண்டில் பலன்......

மாந்தோட்டத்தை கவனிப்பதுடன், அதன் இடையில் சுமார் 1,500 கிளிரிசிடியா கொப்பும் 3,000 ஐபோனியா கொப்பும் நட்டு வைத்துள்ளனர். அவைகள் நன்கு செழித்து வளர்ந்துள்ளன. மாங்கன்றுகள் இன்னும் இரண்டாண்டுகளில் பலன் தருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படி பலன்தரும்பொழுது, இப் பஞ்சாயத்து சில வருடத்தில் நல்ல நிதி நிலைமையிலுள்ள பஞ்சாயத்தாக மாறிவிடும்.

இன்னும் பல திட்டங்களை அந்தப் பஞ்சாயத்து மக்களுக்கு செய்ய வேண்டிய வாய்ப்பும் வசதியும் பெற்றுவிடும். இந்த மாந்தோட்டம் தண்ணீர் வசதியற்ற இடத்தில் இருந்துங்கூட, நல்ல முறையில் வளர்ந்து வருகின்றது என்றுல் அதற்கு முழுக் காரணம் இப்பஞ்சாயத்துத் தலைவர் திரு. பெருமாள் அவர்கள்தான்.

தன் தோட்டத்தில் இன்னும் ஒரு மாதத்தில் அறுவடையாகவிருக்கும் நெல் பயிருக்குத் தண்ணீர் விடாமல், பஞ்சாயத்து தோட்டத்திற்கு தண்ணீர்விடும் பெருந்தன்மையும், மனப்பாங்கும் பொதுநலத்தொண்டும் வேறு யாருக்கு வரும். திரு. பெருமாள் அவர்கள் தன் பதவியின் பொறுப்பையுணர்ந்து, ஒரு பொதுநலவாதியாக மாறி, மக்களுக்குத் தொண்டு செய்கின்றுர். அவர் சேவையின் பலனைப் பெற்ற மாந்தோட்டம் பச்சிளந்தளிர்விட்டு செழித்தோங்கி வளர்கிறது.

---

[4ம் பக்கத் தொடர்ச்சி]

கும்படி நடுவேன். நடுகை நட்ட அன்று வயலைத் தண்ணீர் இல்லாமல் உலரவிடுவேன். மறுநாள் 1 அங்குலம் தண்ணீர் கட்டுவேன். நட்ட பயிர் தழைத்து கறுப்பாகும் வரை தண்ணீர் சீராகக் கட்டுவேன். பிறகு தண்ணீர் அதிகமாக, அதாவது 3 அங்குலம் தண்ணீர் கட்டுவேன், நட்டு 20 தினங்களுக்குப் பிறகு இன்டர் கல்டிவேட்டர் மூலம் களையெடுப்பேன். தண்ணீர் குறைவாக வைத்துக்கொண்டு (1½ அங்குலம் தண்ணீர்) பாலிடால் 10 அவுன்சுக்கு 60 படி தண்ணீர் கலந்து 1ஏக்கர் நிலத்தில் அடிப்பேன். இரண்டு, மூன்று தினங்கள் கழித்து அமோனியம் சல்பேட் ஏக்கர் 1க்கு 1/6 மூடை, அதாவது 17 பவுண்டு வீதம் தூவுவேன். நிரவலாக விழுவதற்காக அதனுடன் தூள் மணல் சேர்த்துக்கொள்ளுவேன். இவ்வாருக கதிர் படவதற்கு 2 தினங்களுக்கு முன்பும் செய்வேன். இவ்வாறு செய்வதால் நடுகை நட்டது முதல் அறுவடைவரை பயிரின் கறுப்பு நிறம் மாறுவதில்லை. கதிர்களும் முன்பாகப் பரிவதில்லை. அதனுல் அறுவடையாகும்போது நெல்லில் காய்கள் இருப்பதில்லை.

இவ்வாறு செய்து வருவதால் உரச்செலவு, விதை செலவு குறைகிறது. மகசூலும், கூட கிடைக்கிறது. அதாவது சராசரி ஏக்கர் 1க்கு 25 முதல் 30 மூட்டை (48 படி கொண்டது) கிடைக்கிறது. இவ்வாறு செய்வதினுல், அதிக விளைச்சல் ஒரு ஏக்கருக்கு 300 முதல் 400 ராத்தல் வரை எவ்வளவு உரம் போட்டாலும் பயிர்கள் நிறைய வளர்ந்து சாய்ந்து பதராவதில்லை நெல் தூர்களில் நிறைய பக்க சிம்புகளும் வெடிக்கிறது. அதனுல் மகசூல் அதிகம் கிடைக்கிறது, தேவைப்படும்போது பூச்சி மருந்துகள், பசுந்தாள் உரவிதைகள், நெல் பொறுக்குவித்து ஆகியவற்றை வாடிப்பட்டி பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் சகாய விலையில் பெற்றுக்கொள்கிறேன். அவ்வப்போது தகுந்த சந்தர்ப்பங்களில் கிராமநல ஊழியர்வட்டார விவசாய வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் போன்றவர்களின் உதவியும் எங்கள் பெரிய பண்ணைக்கு மிகுந்த உதவியாக இருக்கிறது.

# வளரும் சமுதாயம்

## உழவுத் தொழிலுக்கு ஓர் உதாரணம்—திரு பந்தார்கார்

மகாராஷ்டிரா மாநிலத்தின் திரிரோரா பஞ்சாயத்து சமிதியின் துணைத்தலைவரும், முற்போக்கு எண்ணம் கொண்டவருமான திரு. கிஸான் நாராயண் பந்தர்கார் என்பவர், நவீன விவசாய முறைகளைத் தழுவி, விளைச்சலை பன்மடங்காகப் பெருக்கி, தன் கிராமத்திலுள்ள மற்ற விவசாயிகளுக்கும் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறார். இவருக்கு வயது முப்பத்து நான்கு.

பஞ்சாயத்து ஆட்சி துவக்கப்பட்டவுடனே இவர் 1961-ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு திரிரோரா என்ற ஊரின் பஞ்சாயத்து சமிதியின் துணைத் தலைவரானார். அவர் ஒரு சுறுசுறுப்பான உழைப்பாளி; தேவையானோர்க்கு மனதார உதவும் உள்ளம் படைத்தவருங்கூட. கிராம மக்கள் அவரிடம் அதிக மரியாதை வைத்திருந்தனர்.

தன் தந்தை இறந்ததும், அவரது நிலத்தில் சாகுபடி செய்ய ஆரம்பித்தார். அவர் தந்தைக்கு 16 ஏக்கர் நிலமிருந்தது; அதில் பாதியே விவசாயத்திற்கு தகுந்ததாக இருந்தது. 1954-ம் ஆண்டு, அவர், விளைவில்லாத 4 ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டு அந்த பணத்தில், நவீன முறைப்படி விவசாயம் செய்ய தேவையான விவசாயக் கருவிகளையும், ஒரு ஜோடி மாடுகளையும் வாங்கினார். நல்ல விவசாய முறைகளினால், ஒவ்வொரு ஏக்கரும் நல்ல மகசூலைத் தரும் என்று திரு பந்தர்கார் கண்டு கொண்டார். இந்த சமயத்தில் அவருக்கு கிராம சேவக்கின் தெளிந்த அறிவுரைகளும், உதவிகளும், பூரணமாகக் கிடைத்தன.

தீவிர சாகுபடித் திட்டம், 1963-64-ம் ஆண்டுகளில் அம்மாவட்டத்தில் துவக்கப்பட்டது. நெல் சாகுபடியில் இந்த திட்டத்தினைக் கடைப்பிடித்தால், அதிக அளவில் மகசூல் செய்யலாம் என்று அரசாங்க அலுவலர்களால் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்களை ஆணித்தரமாக நம்பினார். இந்த திட்டத்தில் தன் ஊக்கத்தினை செலுத்தி, 8 ஏக்கர் நிலத்தில் தீவிர சாகுபடி திட்டத்தின் மூலம் எப்படி விளைச்சலை அதிகப்படுத்தமுடியும் என்பதற்கு மற்ற கிராமவாசிகளுக்கு, ஓர் உதாரணமாக விளங்கினார்.

திரு. பந்தர்கார் நவீன கருவியின் உதவிகொண்டு நிலத்தை பண்படுத்துதலை கிராமத்திலுள்ள எல்லா விவசாயிகளும் பார்வையிட்டனர். சாதாரண கலப்பையைக் கொண்டு உழுவதைவிட, இக்கருவியினைக் கொண்டு உழுவதில், சிக்கனத்தையும், நன்மையையும் காண்பதாக அவர் கூறுகிறார். இதைக் கண்ணுற்ற மற்ற விவசாயிகளும், இந்த கருவியின் அனுகூலங்களைக் கண்டறிந்தனர். திரு பந்தர்கார் எடுத்துக்கொண்ட இந்த முயற்சி நல்ல பயனை அளித்ததோடு மட்டுமல்லாமல்,அந்த கிராமத்திலும் அதைச் சுற்றியுமுள்ள இடங்களிலும் இக்கருவி மிக வேகமாக பரவலாயிற்று. திரு. பந்தர்காரின் மொத்த நெல வயல் 8 ஏக்கர்களானாலும், அவர் ஒரு ஜோடி மாடுகளைக் கொண்டே சமாளித்தார். அவருடைய நிலம் சராசரி செழுமையைக் கொண்டதே. எனினும் நல்ல மகசூலைப் பெறமுடிந்தது.

### உரங்களின் உபயோகம்

சாகுபடியை அதிகரிக்க மிகவும் தேவையான வற்றில் தலைமையானது, உரங்களை தகுந்தபடி இடுதலேயாகும். தீவிர சாகுபடித் திட்டத்தில் இது வலியுறுத்தப்படுகிறது. நீர்ப்பாசனம், நீர்ப்பாசனம் இல்லாத நிலங்களுக்கு ஏற்றபடி, பலவித உர அட்டவணைகள் இம்மாவட்டத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ளன. நிலத்தை பண்படுத்தும்போது, ஒரு ஏக்கருக்கு 50 பவுண்டு அம்மோனியம் சல்பேட்டையும், 125 பவுண்டு சூபர் பாஸ்பேட்டையும் திரு. பந்தர்கார் நிலத்தில் இட்டார். நாற்றுக்கள் 9 அங்குல வரிசையிலும், 6 அங்குலங்கள் இடையிடையிலேயும் நடப்பட்டன.

நடவு நட்டு முடிந்த ஒரு மாதத்திற்கு பிறகு, ஒரு ஏக்கருக்கு 50 பவுண்டு அம்மோனியம் சல்பேட்டு வீதம் உரம் இடப்பட்டது. கதிர் காணும் சமயத்தில் மூன்றும் தடவையாக 25 பவுண்டு அம்மோனியம் சல்பேட்டும் போடப்பட்டது. இதற்குப் பிறகு விவசாயிகள் விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் எப்படி உரங்களை ஒழுங்காக இட்டும், தீவிர சாகுபடி திட்டத்தின் முறைகளை கையாண்டும் அதிக விளைச்சலை பெறமுடியும் என்று அவர்களுக்கு காண்பிக்கப்பட்டது. அப்போதும் விவசாயிகள் உரங்களின் உபயோகங்களை சரிவர புரிந்ததாகத் தெரியவில்லை. ஆனால் உரமிட்ட பயிரையும் உரமிடாத பயிரையும் கண்டவுடன், உரத்தின் மகிமையை இப்போது நன்குணர்ந்து, உரங்களின் நன்மையை நன்கு புரிந்தவர்களாகிவிட்டார்கள்.

### ஒரு ஏக்கருக்கு 32 மணு நெல் சாகுபடி

திரு. பந்தர்காரின் வயல் 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் தேதியில் அறுவடை செய்யப்பட்டது. சாதாரணமாக, ஏக்கருக்கு கிடைக்கும் 20 மணுவுக்குப் பதில் திரு பந்தர்கார் ஏக்கருக்கு 32மணு சராசரியாக அறுவடை செய்தார். இதனுல் அவருக்கு கிடைத்து வந்த ரூ. 115-க்கு பதில் இப்போது ரூ. 190 சராசரியாக நிகர வருமானம் கிடைக்கலாயிற்று. நல்ல விவசாய முறைகளையும், உரங்களையும் கையாண்டு எவ்வாறு அதிக விளைச்சலை பெறலாம் என்பதை தீவிர சாகுபடித் திட்டம் எடுத்துக் காண்பிக்கிறது. இன்னும் தீவிரமாக விவசாயம் செய்தால், ஏக்கருக்கு 40 மணு நெல் அறுவடை செய்யும் வாய்ப்பும் இருக்கிறது.

ஆரம்பத்தில், பக்கத்தில் உள்ள விவசாயிகளின் கவனம் பெருமளவில் இதில் செல்லவில்லை. ஆனுல் நேரில் கண்டதை நம்பாமல் இருக்கமுடியுமா? ஆகவே அவர்களும் தீவிர சாகுபடி திட்டத்தின் துணைக்கொண்டு, தங்களுடைய விளைச்சலையும் அதிகரிக்கலாம் என்ற நம்பிக்கையை வளர்த்து வருகின்றனர்.

## மத்தியப் பிரதேசம்:

### முன்னேற்றப் பாதையில் ஒரு மலைவாசிக் கிராமம்

மத்தியப் பிரதேசத்திலுள்ள சுட்ராத்தி என்ற மலைவாசி கிராமத்தின் மக்கள் தொகை 344. அம்மக்கள் எல்லா வளர்ச்சித் திட்டங்களிலும் மகத்தான சாதனைகள் செய்துள்ளனர். அங்குள்ள 45 விவசாய குடும்பங்களும், நவீன விவசாய சாதனங்கள், வழி முறைகளைக் கொண்டும், தேர்ச்சியடைந்த விதைகள், உரங்களைக் கொண்டும் விவசாயத்தை செய்ய ஆரம்பித்துவிட்டனர். எல்லா குடும்பங்களும் கூட்டுறவு ஏற்பாட்டின் கீழ் வந்துவிட்டன. பள்ளிக்கூடக் கட்டிடத்தைக் கட்டுவதற்காக அவர்கள் ரூ. 1,000 நன்கொடை அளித்துள்ளார்கள். மேலும் ரூ. 825 கோழி வளர்ப்பு பண்ணைக்காகவும், மற்றும் வானெலி பெட்டி, கை பம்புக்காக ஒவ்வொன்றுக்கு ரூ. 100-ம் அளித்துள்ளார்கள். சென்ற ஆண்டு மாநில அளவில் நடந்த போட்டியில், அக்கிராமம் மிகச் சிறந்த கிராமமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், அங்கு பல்வேறு துறைகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சியே ஆகும்.

## மகாராஷ்டிரம்:

### முன்னேற்றப் பாதையில் கொல்வாட்

கடந்த 10 ஆண்டுகளாக மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள கொல்வாட் என்ற கிராமம் பல முற்போக்குக் காரியங்களைச் செய்திருக்கிறது. இங்கு படித்தவர் சதவீதம் 72 ஆக உள்ளது. புல்தானு என்ற நகரத்திற்கு அருகில் இக்கிராமம் இருப்பதால், ஒரு நிலையான மார்க்கெட் வசதி இதற்கு ஏற்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி, மிகப் பெரிய அளவில் காய்கறிகள் இங்கு பயிரிடப்படுகின்றன. புல்தானுவில் கூடும் வாரச் சந்தைக்கு ஒவ்வொரு வாரம் ஞாயிற்றுக்கிழமை தோறும் 10 முதல் 12 வண்டிகள் நிறைய புதிய காய்கறிகள் இக்கிராமத்திலிருந்து அனுப்பப்படுகின்றன. இதற்கு மேல், ஒவ்வொரு நாளும் 200 சேர் காய்கறிகளும் அனுப்பப்படுகின்றன. இக் கிராமத்திலுள்ள ஒரு விவசாயி ¼ ஏக்கர் நிலத்தில் ரூ. 1,100 மதிப்புள்ள காலிபிளவர்களை விளைவித்துள்ளார். இங்குள்ள 2200 ஏக்கர் சாகுபடி நிலத்தில், 265 ஏக்கர் நிலம் 48 கிணறுகளால் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. இதில் 21 கிணறுகளில் மின்சார பம்புகளும், 4 கிணறுகளில் எண்ணெய் இன்ஜின்களும் வேலை செய்கின்றன. மேலும் 272 குடும்பங்கள் ஒவ்வொன்றும், குறைந்தது ஒரு கம்போஸ்ட் குழியை பெற்றிருக்கின்றன. 113 குடும்பங்கள் கம்போஸ்ட் குழிகளை கூட்டாக அமைத்துள்ளன. கொல்வாட் கிராமம் சுமார் ரூ. 22,000 தேசீய பாதுகாப்பு பத்திரத்திற்கும், ரூ. 14,200 சிறு சேமிப்பு திட்டத்திற்கும் அளித்திருப்பதோடுமட்டுமல்லாமல், ரூ. 1,400 தேசீய பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாகவும் அளித்துள்ளது.

### நூற்றுக்கு நூறு எழுத்தறிவு

மஹாராஷ்டிரா மாநிலத்திலுள்ள பாவ்டா என்ற கிராமம் 1,300 பேர்களைக் கொண்டது. இங்கு எல்லோரும் படித்தவர்களே. இங்குள்ள 700 பெரியவர்களுக்கு கல்வி புகட்டுவதில் 6 பெண்கள், 8 ஆசிரியர்கள் உள்பட 24 தொண்டர்கள் பங்கெடுத்துக்கொண்டார்கள். ஒவ்வொருவரும் 30 பெரியவர்களை சேர்த்துக்கொண்டு, மூன்று மாதத்திற்கு ஒவ்வொரு நாளும் கல்வி புகட்டினர்கள். போதனைக்கு உதவும் புத்தகங்களையும், பிரசுரங்களையும் இத்தொண்டர்களுக்கு கல்வித்துறை அளித்தது. கிராமப் பஞ்சாயத்து விளக்குக்கான மண்ணெண்ணையும், வட்டார சமிதி புத்தகங்களையும் அளித்தன. கிராமவாசிகளிடமிருந்து நிதியும் திரட்டப்பட்டது. பள்ளிக்கூடம் செல்லும் வயதடைந்துள்ள குழந்தைகளில் 90 சதவீதத்தினர் பள்ளிக்கூடத்திற்கு செல்கின்றனர்.

**உத்தரப் பிரதேசம் :**

### நூற்றுக்கு நூறு வரி வசூல்

சென்ற நிதி ஆண்டில், உத்தரப் பிரதேச பஞ்சாயத்துக்கள் ரூ. 1,33,98,101-க்கு வரி வசூல் செய்துள்ளது. பழைய பாக்கியும் இதில் அடங்கியுள்ளன. சென்ற ஆண்டின் வரி மதிப்பீடு ரூ. 90,36,922. ரோஷல்கண்டு, கோரக்பூரி லுள்ள கோவன் பஞ்சாயத்துக்கள் வசூலித்த வரித் தொகைகள் முறையே ரூ. 21,47,448ம், ரூ. 19,31,503ம் மிகப் பெரியதாகும். இதை அடுத்து, மீரட், ரோஹல்கண்டு பகுதிகளுக்கான வரி மதிப்பீடு முறையே ரூ. 12,41,648ம், ரூ. 12,15,171-ம் மிக அதிகமானதாகும். வட்டாரங்கள் இடையே வாரணசியும், ஜான்சியும், வரிவசூலிப்பில் முறையே 82·04, 81·34 போன்ற அதிக சதவீதங்களைப் பெற்றுள்ளன. மாவட்டங்களிடையே, ஜான்பூரும், ஹமீர்பூரும் பஞ்சாயத்து வரிகளை நூற்றுக்கு நூறு வசூல் செய்து விட்டன.

**மத்தியப் பிரதேசம் :**

### அன்னை நாட்டின் கண்ணின் மணிகள்—

**எழுச்சி மிக்க இளம் தலைவர்**

மத்தியப் பிரதேசத்திலுள்ள, ரிங்னுட் பஞ்சாயத்துத் தலைவரான பிக்கு ராம் ஜெயின் என்ற இளைஞர், திட்டத் துறைகளிலும், கூட்டுறவுத் துறைகளிலும் பயன்தரும் பணிகளை ஆற்றியுள்ளார். பஞ்சாயத்துத் தலைவராக அவர் பணியாற்றிய குறுகிய காலத்தில், கிராம மக்களை ஊக்குவித்து, அவர்களின் உதவிகளைக் கொண்டே, ஒரு லட்ச ரூபாய் மதிப்பீடுள்ள பல காரியங்களை அவர் நிறைவேற்றியுள்ளார். நான்கு மைல் நீளம் கொண்ட ரஸ்தாவை அவர்கள் அமைத்ததோடு, ஐந்து கிணறுகள், இரண்டு ஆசிரியைகள் குடியிருப்புகள், ஒரு பஞ்சாயத்து அலுவலகம், தெருக்களுக்கு நடைபாதைகள் ஆகியவற்றையும் அவர்கள் செய்து முடித்துள்ளார்கள். அவருடைய எழுச்சி மிக்க தலைமையின் கீழ், 62 சேவைக் கூட்டுறவுகள் இருந்த இடத்தில் இப்போது 131 சேவைக் கூட்டுறவுகள் இயங்குகின்றன. மேலும் இதில் சேமிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 1,000-த்திலிருந்து ரூ. 8,000-த்துக்கு பெருகியுள்ளது. அங்கத்தினர்களுக்கு தேவையான உரங்கள், தேர்ச்சிமிக்க விதைகள், கிருமி நாசினிகள் எல்லாவற்றையும் இக்கூட்டுறவுகளே பெற்றுத் தந்தன. இக்கிராம மக்கள் தங்கள் கைகளாலேயே 600 ஏக்கர்களுக்கு வரப்பு கட்டியது, அவர்களின் பெருஞ்சாதனையாகும்.

## தலைநகரிலிருந்து :

**கிராமங்களில் ஒளிமயம் :**

கிராம மின்சாரத் திட்டத்தின்கீழ், இவ்வருட ஜனவரியுடன் 37,457 கிராமங்களுக்கு மின்சாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கிராமங்களுக்கு அளிக்கப்பட்ட மின்சாரத்தில் சுமார் 42 சதவீதம் தொழில்களுக்காகவும், சுமார் 40 சதவீதம் விவசாயத்திற்காகவும், பயன்படுத்தப்படுகிறது.

**திரு எஸ். கே. டே—யின் சொற்பொழிவு :**

புது டில்லியில் கூடிய கூட்டுறவு மற்றும் பின் தங்கிய வகுப்பினர்களுக்கான மாநில அமைச்சர்கள் மகாநாட்டில், மத்திய சமுதாய வளர்ச்சி கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். கே. டே பேசும் போது "நம்முடைய மக்களாட்சி, சோஷலிஸம் ஆகியவற்றின் வெற்றியை நிர்ணயிக்கும் உண்மையான சோதனையானது, பல நூற்றுண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்து வரும் பின் தங்கிய வகுப்பினர்களுக்கு உதவி செய்வதில் நாம் அடையும் வெற்றியின் அளவேயாகும்" என்ருர். நம் நாட்டு தொகையில் மூன்றில் ஒன்ருக உள்ள பின்தங்கிய வகுப்பினர்களை முன்னுக்குக் கொண்டு வர, ஒரே வழி, கூட்டுறவு சாதனமாகத்தான் இருக்க முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மேலும் திரு. டே பேசுகையில் சுதந்திரத்திற்குப் பிறகு, கூட்டுறவு மற்றும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கான மாநில அமைச்சர்களும், மத்திய, மாநில அரசாங்கங்களின் உயர்தர அதிகாரிகளும் ஒருங்கே கூடி, இந்த பிரச்னைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, தீர்வு காண முயல்வது ஒரு முக்கிய நிகழ்ச்சியேயாகும் என்று கூறினர்.

இம்மக்கள் தன்னம்பிக்கைப் பெற்று எழ, புதுத் தலைவர்கள் தோற்றுவிக்கப்படவேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினர். 'அமைப்பு ரீதியான உதவிகள் பின்தங்கிய வகுப்பினர்களுக்கே தேவைப்படுகிறது, அதற்கேற்றதொரு அமைப்பையும் தாமே முன் வந்து காரியங்கள் செய்யும் தலைவர்களையும் நாம் கண்டு பிடித்து, அவர்கள் இந்த பின்தங்கிய வகுப்பினர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை பயன் படுத்தச் செய்து அவ்வகுப்பினர் முன்னேற, தக்கதொரு பொருளாதார அடிப்படையை அமைக்க முன்வரவேண்டும்.

பழம்போக்கு வாதிகள் கூட்டுறவு இயக்கத்தோடு அதன் புதிய பாதையில் ஒத்துழைக்க மறுப்பதோடு, இந்த இயக்கத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாகவும் இருக்கிருர்கள். இந்தப் போக்கினை அகற்றி, பின்தங்கிய வகுப்பினர்களுக்கு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் நல்ல உதவிகளை அளிக்க, ஏதாவது செய்யப்படவேண்டும் என்ருர் அவர்."



# மனிதனும் மிருகமும்

[திரு தயானந்த ராவ், வனவள பயனீட்டு அலுவலர் (Forest Utilisation Officer), சென்னை].

ஆண்டுதோறும், அக்டோபர் மாதத்தில், வனவிலங்கு வாரம் கொண்டாடப்படுகிறது. அதன் நோக்கம், அவசியத்தை விளக்குகிறது, இக்கட்டுரை.

—ஆசிரியர்.

பல்வண்ண இசைபாடும் புள்ளினமாயினும், கானகம் வாழ் கொடிய விலங்குகளாயினும், பொதுவாகப் பிராணிகள் பால் அன்பு செலுத்தும் பண்பு, நம் மக்களிடையே பண்டைக் காலத்தில் மிகுந்திருந்தது. கொல்லாமையை ஒரு வாழ்வு நெறியாகக் கொண்டு ஒழுகினர். நம் சமயக் கருத்துக்களும், இவ்வழியில் துணை நின்றன. எனவே, இயற்கை அன்னை அளித்த அரவணைப்பில் பிராணிகள் யாவும், தம் இச்சையாய் வாழ்ந்து வந்தன.

காலம் மாறிற்று. மக்கள் மனப்பான்மையும் மெல்ல மெல்ல மாறிற்று. மிருகங்களை வேட்டையாடுவது—துரத்தியடித்துக் கொல்லுவது—ஒரு சிலருக்குப் பொழுதுபோக்காக ஆகியது. குறிப்பாக, இந்தியாவில் ஆட்சி செலுத்த வந்த வெள்ளையர்கள், நம் நாட்டில் செழித்து அடர்ந்த காடுகளையும், அங்கு திரிந்து உலாவும் மிருகங்களையும் கண்டபோது, அவர்களது வேட்டையாடும் இச்சை இறக்கை கட்டிப் பறந்தது. மனம் கொண்ட மட்டும் வேட்டையாடினர். அதிலும் எவ்வாறு? முன் காலத்தில் போல், நடுக்காட்டிற்குள் துணிவோடு நடந்து சென்று, திடீரென எதிர்ப்படும் கொடிய விலங்குகளிடம் நேருக்கு நேர் நின்று ஈடுகொடுக்கும் அத்தன்மையதா? அல்ல, மோட்டார் வாகனங்களில் பத்திரமாக அமர்ந்து, சக்தி மிகுந்த விளக்குகள் மூலம் ஒளியைப் பாய்ச்சி, மிருகங்கள் கண் கூசி, திசை தெரியாமல் திண்டாடி அயர்ந்து நிற்கும்போது, துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவதுதான், இவர்கள் வேட்டை முறை! இந்த அட்டகாசத்தால், கோர விளையாட்டால், இந்தியாவுக்கே சிறப்பான சில விலங்கு, பறவை இனங்கள் பூண்டற்றுப் போயின.

### யார் காரணம்?

விலங்கினங்கள் அழிந்துபடும் அவல நிலை, இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஆரம்பமாயிற்று. அதிகாரிகளாகவும், ஊழியர்களாகவும், தேயிலைத் தோட்ட முதலாளிகளாகவும் இங்கு வந்த பிரிட்டிஷ்காரர்கள்தான் இதற்கு முக்கிய காரணம் ஆவர். இவ்வகையில் சில எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். கத்தியவாரில் குதிரைப் படை அதிகாரி ஒருவர், 80 சிங்கங்களைச் சுட்டுத் தள்ளினார். உத்திரப் பிரதேசத்தில் உள்ள 'கிர்' காடுகளில், பத்தே நாட்களில் 14 சிங்கங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. மத்தியப் பிரதேசத்தில் பிரிட்டிஷ்காரர் ஒருவர், இந்தியாவில் தங்கிய 21 ஆண்டுகளில் 500 புலிகளை வேட்டையாடி சுட்டார். ராஜபுதனத்தில் ஒரு ரயில்வே அதிகாரி, ரயில்வே மூலம் தமக்குக் கிடைத்த வசதிகளைப் பயன்படுத்தி, 1850-க்கும். 1854-க்கு மிடையே 100 புலிகளைச் சுட்டுக் கொன்றார். பிரிட்டிஷார்தான் என்பதில்லை, சுதேச மன்னர்களும் இவ்வகையில் சளைக்கவில்லை. ஒரு மன்னர் தமது வாழ்நாளில் 616 புலிகளைச் சுட்டதாகக் கூறப்படுகிறது. இன்னொருவர் 1,100 புலிகளைச் சுட்டு, ஒரு சாதனையே செய்து காட்டிவிட்டார். காஷ்மீரில் ஒரு வேட்டைக்காரர் 12 ஆண்டு காலத்தில் 58,613 காட்டுப் பறவைகளை, சுட்டுப் பொசுக்கினார்.

ஒரு காலத்தில். 'அகிம்சை' ஒரு வாழ்வு நெறியாக இருந்த நம் நாட்டில், எப்படிப் பின்னர் வன விலங்குகள் கொன்று குவிக்கப்பட்டன என்பதை மேற்சொன்ன தகவல்கள் நன்கு புலப்படுத்துகின்றன.

இம்முறையில், கம்பீரமான வேங்கைப் புலியும், தலையில் இளஞ்சிவப்பு நிறத்துடன்; கவர்ச்சி மிக்க தோற்றமுடைய வாத்தும் அந்த இனங்களே அழிந்துபோகும் அளவுக்குச் சுட்டு வீழ்த்தப்பட்டன. ஆசிய சிங்கமும், பெருமைக்குரிய இந்திய காண்டா மிருகமும் இன்றும் உயிர் வாழ்கின்றன என்றாலும், அவை முன்போல் வளர்ந்து பெருகும் இனமாக அல்லாமல், பண்டைக் காலத்தை நினைவூட்டும் அடையாளச் சின்னங்கள் போல் அங்குமிங்குமாக சிற்சிலவே காணப்படுகின்றன. அதே போல் இந்திய காட்டு எருமையும் கஸ்தூரி மான், கருமான், சதுப்பு மான் ஆகியவை இனியும் தப்ப வேண்டுமானால் அவற்றிற்குச் சிறப்பான பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

### தடுப்பு நடவடிக்கைகள்

ஆக, வன விலங்குகளைப் பாதுகாக்கவும், அவை விருத்தியடையவும் இப்போது என்ன செய்யப்படுகின்றன? இவ்வகையில், ஆரம்ப காலத்திலேயே நடவடிக்கை எடுத்த ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. 1882-ம் ஆண்டு தமிழ்நாடு வனச் சட்டத்தின்படி, மாநிலத்தில் உள்ள ரிசர்வ்

காடுகளில் வேட்டையாடுதல் ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

அதற்கு முன்பே கூட, கம்பீரமிக்க நமது யானைகள், எண்ணிக்கையில் வேகமாகக் குறைந்து வருவதை அறிந்து, 1878-ம் ஆண்டு தமிழ்நாடு காட்டு யானைகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி, அவற்றிற்குப் பாதுகாப்பு தரப்பட்டது. இதன் பலனாக, யானைகளின் எண்ணிக்கை மறுபடி அதிகரிக்கத் தொடங்கின.

வேட்டை மூலம் விலங்கினம் அழிந்து படுவதைத் தடுக்க, பரிசளிப்பு முறையொன்றும் 1937-லேயே ஏற்படுத்தப்பட்டது. கொல்லப்படும் செந் நாய் ஒவ்வொன்றுக்கும் கணிசமான சன்மானம் வழங்கப்படுகிறது. அதோடு, இன்னொரு நடவடிக்கையும் உண்டு. அதாவது காடுகளில் வேட்டையாடுவதற்குரிய காலமும் வரையறுக்கப்படுகிறது. ஆண்—பெண் சேர்க்கை காலத்தில் விலங்குகளுக்கும் குட்டிகளுக்கும் பாதுகாப்பாக, அந்தக் காலத்தில் வேட்டையாட அனுமதிப்பதில்லை. வேட்டை அனுமதிக்கப்படும் காலத்திலும், ரிசர்வ் காடுகளில் துப்பாக்கியால் சுட்டு வேட்டையாட, பெரும் கட்டணம் செலுத்தி லைசென்ஸ் பெற்றாகவேண்டும். அப்படி லைசென்ஸ் பெறுபவரும் காடு முழுவதும் வேட்டையாட முடியாது. ஒரு குறிப்பிட்ட பிரதேசம் மட்டும் அவருக்கு ஒதுக்கப்படும். ஆகையால் அவருடைய வேட்டை 'மாசூல்' ஒரு அளவுக்கு உட்பட்டதாகத்தான் இருக்கும். இரவில் அதிக வெளிச்சமுள்ள விளக்குகளை உபயோகித்து, விலங்குகளைச் சுடுவது தடை செய்யப்படுகிறது. இத்தனை கட்டுப்பாடுகள் இருந்தும்கூட, விலங்குகளைச் சாகடிப்பது பெரும் அளவில் நடக்கத்தான் செய்கிறது—எந்தச் சட்டந்தான் மீறப்படாமல் இருக்கிறது?

அண்மையில், கம்பம் பள்ளத்தாக்கு கீழ் முகாமில், செந் நாய்கள் கூட்டம் ஒன்றினால் துரத்தப்பட்ட ஒரு கடமானுக்கு நேரிட்ட கதி பற்றி கேள்வியுற்று, துணுக்குற்றேன். தன்னைத் துரத்தி வருகின்ற கொடிய எதிரியினின்றும் தப்பமுடியாத நிலையில், மிகவும் சோர்ந்து களைத்துப்போனகடமான் முகாம் பகுதிக்குள் ஓடிவந்தது—பாதுகாப்பும் ஓய்வும் அங்கு கிடைக்கும் என்ற எண்ணத்தில் போலும்! ஆனால் நடந்தது என்ன? களைத்திருந்தாலும், உயிருடன் இருந்த அந்த கடமான் மீது அங்கிருந்த மூர்க்கர்கள் சிலர் பாய்ந்து அதை அடித்துக் கொன்று, தசை வேறு நார் வேறாகப் பிய்த்து விட்டனர். அடைக்கலம் நாடிவந்த பிராணியை அடித்துக் கொல்லும் இந்த அருவருக்கத் தக்க வன்செயலை என்னென்பது?

### மனிதன் மாறவேண்டும்

இத்தகைய இழிதன்மையும், மிருகங்களைக் கொல்வதில் ஒரு இன்பம் காணும் வெறி உணர்வும் ஒழிய வேண்டும்.

இயற்கையின் படைப்பில், வாழும் உரிமையைப் பொருத்தவரை, மனிதனும் மிருகமும் சமம். ஒருவர் வாழ்வில் இன்னொருவர் தலையிடுதல் தருமமாகாது. தான் வாழ்வதைப் போல் பிறரையும்—பிற இனங்களையும்—வாழவிடும் சகவாழ்வுக் கொள்கை வேண்டும். ஆனால் இதை யார், எப்படிச் செய்வது? ஆறறிவு படைத்த மனிதன்தான் திருந்த வேண்டும். உயிரினங்கள் சிலவற்றை மடியச் செய்து, அதில் மகிழ்ச்சி காணும் மனப்பான்மை மாறவேண்டும். ஆசை, வரைமுறை இல்லாமல், உருவெடுக்கக் கூடும். ஆனால் மனக் குதிரையை லகான் பிடித்து ஓட்டுவதில்தான் மனிதனது மாண்பு இருக்கின்றது. இன்றேல், மனிதனும் 'மிருக'மாகிறான்!

---

## எழுவனம்பட்டி பஞ்சாயத்தில் கால்நடைச் செல்வம்

மதுரை மாவட்டம் வத்தலக்குண்டு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த மாதிரிப் பஞ்சாயத்தான எழுவனம்பட்டி பஞ்சாயத்து, தரமான உயர் ரக கால் நடைகளை உற்பத்தி செய்ய பாடுபட்டு வருகிறது. கேந்திர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் எல்லைக்குள் இன்னும் இப் பஞ்சாயத்து வரவில்லை. எனினும், உயர்தரமான கன்றுகளைப் பெருக்க இப் பஞ்சாயத்து ஆர்வத்துடன் முடிவு செய்தது. அதன் பயனாக, வத்தலக்குண்டு வட்டார வளர்ச்சித் திட்டத்தின் மூலம் சர்க்காரின் மான்யத் திட்டத்தின்கீழ் 1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ந் தேதியில் ரூ. 1,000 மதிப்புள்ள உயர்தர காங்கேயம் பொலிகாளையொன்று, இப் பஞ்சாயத்துக்கு வழங்கப்பட்டது.

எழுவனம்பட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்த திரு பி. ரெங்கசாமி நாயக்கர் அவர்கள் பாதித் தொகையை செலுத்தி, அப்பொலி காளையைப் பெற்று நன்முறையில் பராமரிப்பு செய்து வருகிறார். பஞ்சாயத்தைச் சேர்ந்த கிராமக் கால்நடைகள் இப் பொலிக்காளையின் பயனால், நல்ல தரமுள்ள உயர் ஜாதி கன்றுகளை ஏராளமாக ஈன்றுள்ளன. விவசாயிகள் தம் கால்நடை செல்வத்தை இதன் மூலம் பெரும் அளவில் பெருக்கிக் கொண்டுள்ளனர். இதற்கு வாய்ப்பளித்து வரும் திரு பி. ரெங்கசாமி நாயக்கரின் பணி போற்றுதற்குரியது. இப்பொலிக்காளைப்பராமரிப்புக்காக நமது அரசினர் வருடந்தோறும் ரூ. 200 மான்யமளித்து வருகின்றனர். இத்தொகை நன்முறையில் செலவழிக்கப்பட்டு பலனளித்து வருவதுடன், விரைவில் இப் பஞ்சாயத்தில் கவர்ச்சி மிக்க உயர்ஜாதி பசுக்களும் எருதுகளும் நிறைந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

# அகஸ்தீஸ்வரம் யூனியனில் ஆக்கப்பணிகள்



**கன்யாகுமரி மாவட்டம், பாரத தமிழ்த்தாயின் சிலம்பு போன்றது. கலை நயமும், தொண்டார்வமும் இணைந்து செயலாற்றும் அப்பகுதி மக்களின் வாழ்வு வளம் பெற, தமிழ்நாடு அரசாங்கம் முழு மூச்சுடன் பாடுபட்டு வருகிறது. பஞ்சாயத்து வளர்ச்சித் துறையில், அந்த மாவட்டத்தில், பாராட்டத்தக்க பணிகள் பல நடந்துள்ளன. அம்மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரம் யூனியனில் நடைபெற்று வரும் ஆக்கப் பணிகள் பற்றி விளக்கும் இக்கட்டுரை, மற்ற யூனியன்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கும் என நம்புகிறோம்.**

**—ஆசிரியர்**

பாரதத் தாயின் பாத மலர்கள் எனச் சிறப்பிக்கப்படும் முக்கடல் சூழ்ந்த புனித பூமியாம் கன்னியாகுமரியை உள்ளடக்கியது அகஸ்தீஸ்வரம் பஞ்சாயத்து யூனியன். சுமார் 53 சதுர மைல் பரப்புள்ள இவ்வட்டாரம் திரு-கொச்சி அரசாங்கத்தால் 1953 அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி தேசிய வளர்ச்சித் திட்டமாகத் துவக்கப்பட்டது. 223 குக்கிராமங்களைக் கொண்ட எட்டு ரெவின்யூ கிராமங்களின் முழுப்பரப்பும் இரண்டு ரெவின்யூ கிராமங்களின் சிறிய பகுதிகளும் இவ்வட்டாரத்தின் பரப்பில் அடங்கியுள்ளன. 1961-ம் ஆண்டு ஜனத்தொகை கணக்கின்படி இவ்வட்டார மக்களின் எண்ணிக்கை 85,853. இப்பஞ்சாயத்து யூனியனில் இணைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்துக்கள் ஆறும் டவுன் பஞ்சாயத்துக்களே யாகும். 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் தேதி அகஸ்தீஸ்வரம் சமுதாய நலத் திட்ட அபிவிருத்தி வட்டாரத்தில் பஞ்சாயத்து ஆட்சிமுறை அமுலாக்கப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் மன்றமும் அமைக்கப்பட்டது. ஏனைய மாவட்டங்களின் அமைப்பு முறைக்கும் இம்மாவட்ட அமைப்பு முறைக்கும் சின்னஞ் சிறிய வித்தியாசங்கள் உள்ளன. ஆறு பஞ்சாயத்துக்களின் உறுப்பினரும் மன்றத்தில் இடம் பெறுகின்றனர். மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 53. பெண் உறுப்பினர் ஆறு பேராவர்.

1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதியில் யூனியன் மன்றம் துவக்கப்பட்டபோது கன்னியாகுமரி பஞ்சாயத்து தலைவரான திரு. அ. பார்வதி சுப்பிரமணிய ஐயர் அவர்கள் துவக்க விழாவில் கௌரவ அக்கிராசனராக நியமிக்கப்பட்டார். பின்னர் கன்னியாகுமரி மாவட்டத்தில், தியாகத்தால் புகழ்பெற்ற திரு. ஆர். எஸ். நாடார் அவர்களின் தவப்புதல்வர் திரு. ஆர். எஸ். ராமசுவாமி அவர்கள் இந்தப் பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் முதல் அக்கிராசனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றி வருகிறார். மன்றம், நியமனக்குழு, பொது நோக்கக் குழு, கல்விக்குழு, மாதர் நலக்குழு ஆகிய 4 குழுக்களாக அமைக்கப்பட்டு செயல் புரிகின்றது. மன்றத்தின் தீர்மானங்கள் இதுவரையிலும் ஏகமனதாகவே முடிவு எடுக்கப்பட்டு செயல் படுத்தபடுடுகின்றன.

## கிராம வேலைத் திட்டம்

கிராம வேலைத் திட்டத்தின் கீழ் எல்லா கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பெரிய கிராமங்கள் எல்லாவற்றிற்கும் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 1962-63-ம் ஆண்டில் கிராம வேலைத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.80,000. ஆனால் அவ்வருட செலவு ரூ. 85,000. 1963-க்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 68,000. செலவிடப்பட்ட தொகை ரூ. 1,00,000.

## விவசாயத் திட்டம்

விவசாயத் திட்டத்தின் கீழ் 1962-1963-ம் ஆண்டில் ரூ. 34,000-மும் 63-64-ம் ஆண்டில் ரூ. 45,000-மும் செலவிடப்பட்டுள்ளது. பயனற்றுக் கிடந்த புறம்போக்கு நிலங்களில் சுமார் 35 ஏக்கர் வரையில், தென்னை, மா, கொய்யா, மாதுளை முதலிய மரங்களும் பழச் செடிகளும் நடப்பட்டு பராமரிக்கப்படுகிறது. எட்டு டன் சணப்பு விதைக்கப்பட்டு பசுந்தாள் பயிர் செய்யப்பட்டது. விவசாய இளைஞர் சங்கங்களும், மாதர் சங்கங்களும் பசுந்தாளைப் பயிர் செய்தல், கம்போஸ்ட் தயாரித்தல் ஆகிய வேலைகளில் பஞ்சாயத்துகளுக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றனர். ஒரு கால்நடை உப கேந்திரமும், இரண்டு மீன் வளர்ப்புப்பண்ணைகளும் கட்டப்பட்டுள்ளன. மூன்று ரசாயன உர விழாக்கள் நடத்தப்பட்டு சுமார் 200 விவசாயிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

ஒரு கொல் தச்சுப்பட்டறையும், ஒரு சோப்புத் தொழிற்சாலையும் நடத்தப்படுகின்றன. ஒன்பது தொழில் கூட்டுறவு சங்கங்களும் செயல்படுகின்றன.

95 சத வீத மக்கள் கூட்டுறவு இயக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். 41 சங்கங்கள் அமைக்கப்பட்டுச் செயல்படுகின்றன. முழுக்கடனுதவித் திட்டம் அமுலாக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க பழ ஆராய்ச்சிப் பண்ணை

திரு-கொச்சி அரசாங்கத்தால் துவக்கப்பட்டது இப்பண்ணை. தமிழ்நாடு அரசாங்கம் இப்பண்ணையை விஸ்தரிக்கும் பொருட்டு நில ஆர்ஜிதம் செய்ய ஏற்பாடு செய்துள்ளது. பழச்செடிகள் பல்வேறு முறையில் ஒட்டப் பட்டு வினியோகம் செய்யப்படுவதுடன், பழச்செடிகளின் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சியும் நடைபெறுகிறது. ஆண்டு முழுவதும் காலம் தவறாது மாம்பழம் கிடைப்பது இங்குள்ள

ஆராய்ச்சியின் ஒரு முக்கிய அம்சம். குறைந்த அளவில் காய்கறி, திராட்சை, சிக்காரி மாதுளை, கொய்யா ஆகியனவும் பயிரிடப்படுகின்றன.

#### சத்தங்காடு, தாமரைக்குளம் வயல் வரப்புகளில் காய்கறிப் பயிர்.

பஞ்சாயத்து யூனியன் மூலம் அரை விலைக்குக் கொடுக்கும் காய்கறி விதைகளைக்கொண்டு வயல் வரப்புகளில் காய்கறிப் பயிர் செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலும் வெண்டைச் செடியே வளர்க்கப் படுகிறது. நெல்லும், தென்னையும் சாகுபடி செய் வதால் காய்கறிகளுக்கென பிரத்தியேகமான இடம் இல்லை. ஆகவே நெல் வயல்களுக்கிடையே உள்ள வரப்புகள் காய்கறிப் பயிர் செய்யப் பயன் படுத்தப்படுகின்றன.

#### அச்சங்குளம் இளைஞர் மன்றம்

இச்சங்கம் அகஸ்தீஸ்வரம் பஞ்சாயத்து யூனியன் விவசாய இளைஞர் சங்கத்துடன் இணைக்கப்பட் டுள்ளது. கன்னியாகுமரியிலிருந்து 3-வது மைலில் நாகர்கோவில் செல்லும் வழியில் அமைந் துள்ளது. '' தென்திலக அறிவகம்'' என்ற பெயரால் விளங்குகிறது. இதற்கான கட்டிடம் கிராம மக்களின் நன்கொடையால் கட்டப்பட்டது. வானொலிப் பெட்டியும் இலவசமாய் அளிக்கப் பட்டது. வானொலி கேட்போர் சங்கம் ஒன்று நல்ல முறையில் செயல்படுகிறது.

பக்கத்திலுள்ள குளம் ஆறு கரைகளில் பஞ்சா யத்து அமைத்துள்ள பழத்தோட்டத்தில் சிரம தானம் மூலம் இவ்விளைஞர் சங்கம் பசுந்தளைப் பயிர் வளர்ப்பதுடன், தோட்டத்தையும் பராமரித்து வருகிறது.

#### தாமரைகுளம் பஞ்சாயத்து திட்டம்

தாமரைகுளம் களிமார் புறம்போக்கில் சுமார் ஆறு ஏக்கரில் தாமரைகுளம் பஞ்சாயத்து ஒரு தென்னந்தோப்பு அமைத்துள்ளது. இத்தோப்பு 1963 ஜனவரியில் அமைக்கப்பட்டபோது சுமார் 100 கிராமத் தொண்டர்கள் ஒரு நாள் இலவச வேலை செய்தனர். 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதியிலும் 120 கிராமத் தொண்டர்கள் இலவச வேலை செய்தனர். அன்று 200 தென்னைக் கன்றுகள் நடப்பட்டன. இத்தோட்டம் இன்னும் ஆறு ஆண்டுகளில் பலன் தர ஆரம்பிக்கும். அப்போது, சுமார் $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் பெறுமான ஒரு சொத்தாக மாறும்.

#### புளியங்குளம் மாதர் சங்க பசுந்தளைத் தோட்டம்

புளியங்குளம் குளக்கரையில் சுமார் 200 கிளிரி சிடியா பசுந்தளைச் செடி நட்டிருப்பதன் மூலம் இம்மாதர் சங்கம் ஆண்டொன்றுக்கு ரூ. 100 வருமானம் பெறுகிறது. இம்மாதர் சங்கம் ஒரு காய்கறித் தோட்டமும் ஒரு இளைஞர் பூங்காவும், கம்போஸ்ட் உரக்குழிகளும் அமைத்துள்ளது.

### பட்டிவீரன்பட்டி உயர் ஜாதிக் கோழிப் பண்ணை

வத்தலக்குண்டு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பட்டிவீரன்பட்டியில் திரு டி.வி.எஸ். நடராஜன் அவர்களால் நடத்தப்படும் கோழிப்பண்ணை கருத்துக்கு விருந்தளிக்கும் ஒரு காட்சிப் பண்ணை யென்றேகூறலாம், இங்கே வெள்ளை, கருப்பு மைனூ, சிவப்பு ஜாதிச் சேவல்கள், கோழிகள் முதலியன அவரது தேர்ந்தகண்காணிப்பிலும், பராமரிப்பிலும் வளர்க்கப்படுகின்றன. வத்தலக்குண்டு பஞ் சாயத்து யூனியனில் ரூ. 400 மான்யம் பெற்றும், யூனியன் கால்நடை வளர்ச்சி அலுவலர்களின் சிறந்த ஆலோசனைகள், நோய்த்தடுப்பு மருந்துகள் இதர உதவிகள் முதலியன பெற்றும், இப் பண்ணை ஒரு எடுத்துக்காட்டாக வளர்ச்சி பெற்று வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் ரூ, 5,000 பெறுமான முள்ள உயர்ஜாதிக் கோழிகளை உற்பத்தி செய்துள் ளது. ஜாதிக் கோழி சேவல்கள் 500 வரை மாற்று முறையில் கிராம மக்களுக்கு இப்பண்ணையிலிருந்து வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்,

நவீன முறைகளை உடனுக்குடன் பயன்படுத்தி பெரிய அளவும் அதிக சத்துமுள்ள முட்டைகளையும் ஜாதிக் கோழிகளையும் பெருமளவில் உற்பத்தி செய்து வரும் திரு டி.வி.எஸ். நடராஜன் அவர் களின் கோழிப்பண்ணை தேச வளர்ச்சிப் பணியின் முக்கியதோர் அம்சமெனப் பாராட்டத்தக்கதாகும்.

#### மைலாடி கல் தச்சுத் தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

மைலாடி என்னும் கிராமத்தில் கல் தச்சுத் தொழில் ஒரு முக்கிய தொழிலாகும். கலை நுணுக் கத்தில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் தொழிலில் அபிவிருத்தியடைய ஏதுவாகக் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டது. தேவையான பல தரப்பட்ட கற்கள் பல்வேறு இடங்களிலிருந்து தருவிக்கப்பட்டு சிற்ப வேலைகள் செய்யப்படுகின்றன. மகாபலிபுரம் முதலிய ஆலயங்களுக்குரிய சிற்ப வேலைகள் இங்கு செய்யப்படுகின்றன. சுமார் ரூ. 6,000 பெறு மான விவேகானந்தர் சிலை ஒன்று வேலை தீர்க்கப் பட்டுள்ளது. சுமார் 15 தொழிலாளர்கள் நல்ல பயிற்சியுடன் வேலை செய்கின்றனர். இச்சங்கம் நல்ல லாபத்துடன் செயல்படுகிறது. அரசாங்க சலுகைகளுடன், ஒரு கூட்டுறவு இலாகா இன்ஸ் பெக்டரும் இலவசமாய்ப் பணியாற்றுகிறுர்.

அகஸ்தீஸ்வரம் யூனியனில் நிறைவேற்றப்பட் டுள்ள ஆக்கவேலைகள், புதிய பஞ்சாயத்து ஆட்சி, செம்மையான முறையில் நடைபெற்று வருகிறது என்பதற்கு சிறந்த அத்தாட்சியாக விளங்கி வரு கின்றன.

# கூட்டுறவே நாட்டுயர்வு

## நிலோகேரி விவசாயக் கூட்டுறவுச் சேவைச் சங்கம்

பஞ்சாப் மாநிலத்தில், நிலோகேரியைப்பற்றி அறியாதார் உண்டோ? பிரிவினைக்குப்பின் ஏற்பட்டபயங்கர விளைவுகளின் சின்னமே நிலோகேரி என்பது ஒவ்வொரு இந்தியனுக்கும் தெரியும். பிரிவினையால் வீடிழந்து, தூக்கியெறியப்பட்ட மக்களுக்கு புகலிடம் தந்த இடம் நிலோகேரியாகும். பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு தங்க இடம் அமைக்கப்பட்ட பல குடியிருப்புகளில், நிலோகேரி முதலிடத்தைப் பெற்றுள்ளது. இந்த மக்களுக்கு, தங்கள் புகலிடம் ஒரு குடியிருப்பாக மட்டும் அமையாது மனித சமுதாயத்தின் பல்வேறு பிரச்சினைகளும் ஆலோசிக்கப்பட்டு, அவை செயல்படுத்தப் படும் ஒரு ஆராய்ச்சி சாலையாகவும் உள்ளது. இதற்குச் சான்றுகளாக சமுதாய திட்டம், அகதிகள் புனர் வாழ்வு ஆகியவை அடைந்த வெற்றிகளைக் கூறலாம். புதிதாக இப்போது இங்கு நடத்தப் படும் சோதனை, தீவிர கிராம வளர்ச்சித் திட்டமாகும். இது நிலோகேரி குடியிருப்பிலும், அதைச் சார்ந்த ஐந்து அண்டை கிராமங்களிலும் செயல் படுத்த சேர்த்துக்கொள்ளப்பட்டது. இந்தத் திட்டம் *1961–62*-ல் புகுத்தப்பட்டபோது, மத்திய அரசாங்கம் அதை செயல்படுத்தும் வேலையை மேற் கொண்டது.

### தவருன எண்ணம்

கிஸான் பஸ்தி, நிலோகேரியின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. நிலோகேரி புதிதாக நிர்மாண மான ஒரு குடியிருப்பாக இருந்தாலும், அங்குள்ள அநேக சமூக, பொருளாதார பிரச்சினைகள், பக்கத்து கிராமங்களில் உள்ளதைப் போலவே இருக்கின்றன. ஆகவே, மத்திய அரசாங்கம் அங்கு ஒரு மதிப்பீட்டைச் செய்து மக்களின் தேவைகளை ஆராய்ந்து, விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளித்தது. அதன் காரணமாக, கிஸான் பஸ்தியில் ஏற்கெனவே இருந்து வந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு, புத்துயிர் அளிப்பதில் மத்திய அரசாங்கம் அதிக சிரத்தைக் காட்டிற்று. இச்சங்கம் முன்பு, விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டு, தோல்வியடைந்தது. இதன் காரணமாக, அக் கிராம மக்கள் கூட்டுறவைப்பற்றி ஒரு தவருன எண்ணம் கொண்டிருந்தனர். ஆகவே அவர்களை கூட்டுறவு இயக்கத்திற்குள் கொண்டு வருவது பெரும் பாடாகிவிட்டது. கிராமவாசிகளை ஒன்று சேர்க்க, அவர்களை பலவிதமாக கெஞ்சவேண்டியிருந்தது. இறுதியில் மத்திய அரசாங்கத்தின் முயற்சி நல்ல பயனைத் தந்து, இறுதியில் அங்குள்ள மக்கள் விவசாயக் கூட்டுறவுச் சேவைச் சங்கம் ஒன்றை அமைத்தனர்.

இவ்வாருக, கிஸான் பஸ்தியில், நிலோகேரி விவசாய கூட்டுறவுச் சங்கம் *32* அங்கத்தினர்களை (*42* விவசாயக் குடும்பங்கள் உள்ள இடத்தில்) கொண்டு பிறந்தது. இச்சங்கத்திற்கான முதலீட்டுப் பங்கு ரூ. *100*. ஒவ்வொரு அங்கத்தினராலும், தவணைகளாக அல்லது ஓர் ஆண்டிற்குள்ளாக செலுத்தப்பட்டது.

சங்கத்தை அமைப்பது அதன் பின்னுல் மக்களை ஒன்றுபடுத்தும் காரியத்திற்கு ஒரு முதற்படியே யாகும். பல்வேறு கூட்டங்கள், தனிப்பட்ட குழுக்கள், விவாதங்கள் நடத்திய பிறகுதான், இச் சங்கம் நீர்ப்பாசன பிரச்னையைத் தீர்ப்பது என்று தீர்மானித்தது.

கிஸான் பஸ்தியின் கால்வாய்களில் இரண்டரை மாதங்கள் மட்டுமே தண்ணீர் ஓடும். மேலும் இங்கிருந்த இரண்டு குழாய்க் கிணறுகளும், பழுதடைந்ததால், உபயோகமற்று கிடந்தன. அரசாங்கத்திடம் இது சம்பந்தமாக முறையிடப்பட்டு, அவைகள் சரிபார்க்கப்பட்டன. இருப்பினும், அந்த பகுதியில் உள்ள நிலங்கள் இந்த இரண்டு குழாய் கிணறுகளை நம்பியே இருக்க முடியாது. ஆகவே இந்தச் சங்கம் கர்னுலிலுள்ள மத்திய கூட்டுறவு பாங்கை ரூ. *6000* குறுகிய கால கடனுக்காக அணுகியது. அநேக முயற்சிகளுக்குப் பின் கடன் கிடைக்கப்பெற்று, இக்கடன் தொகை ரூபாய் *1,500* வீதம் *4* பங்காக பிரிக்கப்பட்டு, *4* அங்கத்தினர்கள் கூட்டத்திற்கு *4* குழாய் கிணறுகள் என்று வெட்ட, அளிக்கப்பட்டது. இந்தக் குழாய் கிணறுகள் சங்கத்தின் சொத்தாயின. இதற்குப் பின்னும் நீர்ப்பாசனத்தில் பற்றுக்குறை ஏற்பட்டது. மீண்டும் மத்திய கூட்டுறவு பாங்கை அணுகி ரூ. *2,000* மேலும் பெற்று அந்தத் தொகையைக் கொண்டு மற்ருெரு குழாய்க் கிணறு வெட்டப்பட்டது.

இவ்வாறு நிச்சயமாக கிடைக்கும் நீர்ப்பாசன வசதியைக் கொண்டு அங்கத்தினர்கள் இரண்டு மகசூல்கள் செய்தனர்; மேலும், விவசாயத்திலும் மாற்றங்கள் ஏற்பட இந்த நீர்ப்பாசனம் உதவியது முன்பு இங்குள்ளவர்கள் தங்கள் உணவுக்கான முக்கிய பயிர்களையே செய்தனர். ஆனல் இப்போது உருளைக் கிழங்கு, காய்கறிகள் போன்றவைகளையும் விளைவிக்க ஆரம்பித்ததன் பயனுக, தங்கள் வருவாய் உயர்வதை கண்டனர். சென்ற ஆண்டு 75

சதவீதம் வருமானம் உயர்ந்தது. நிச்சயமான நீர்ப்பாசன வசதிகள், முற்போக்கு விவசாய முறைகள் ஆகியவற்றைக் கொண்டு செய்யும்போது இந்த ஆண்டு வருமானம் இரட்டிப்பாகும் என்று நம்பப்படுகிறது. அங்கத்தினர்கள் தங்கள் பங்காக ரூ. 10,000—ஐ குழாய் கிணறுகள் வெட்ட அளித்துள்ளார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### சிறிய நிலங்களை ஒன்று சேர்த்தல்

பொதுவாக இங்கு விவசாயிகளின் நிலங்கள் சிதறிக்கிடந்தன. ஆகவே விவசாயம் செய்வதும் கஷ்டமாகிவிட்டது. இச்சங்கம் ஆரம்பித்தவுடன், அதன் அங்கத்தினர்கள் அடிக்கடி இதைப்பற்றி விவாதங்கள் செய்து தீர்வுகாண வேண்டினர்,

வெளியார் உதவி எதுவும் இல்லாமல், ஓர் ஆண்டில் 600 ஏக்கர் நிலங்கள் ஒன்று சேர்க்கப்பட்டன. இதில் அங்கத்தினர் அல்லாதவர்களின் 400 ஏக்கர் நிலங்களும் அடங்கும். நிலத்தை அளப்பதில் வல்லுநரும், நிலத்திற்கான கணக்குகளை திறம்பட செய்யக்கூடியவருமான ஒரு பட்வாரி இவ்வேலையில் அமர்த்தப்பட்டு அவருக்கு ரூ. 1,500 மொத்த ஊதியமாக அளிக்கப்பட்டது. இவ்வாறு நிலங்கள் தொகுக்கப்பட்டுள்ளது பஞ்சாப் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது, எவ்வாறு கூட்டுறவு சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு நன்மையைத் தரும் என்பதை, தெள்ளத்தெளியக் காட்டுகிறது.

### விதை, உர டிப்போ

விவசாய உற்பத்திக்கான எல்லா வழிவகைகளையும் கையாள, சங்கம் சுறுசுறுப்படைந்தது. பொறுக்கு விதை ஏஜென்ஸி ஒன்றையும், ரசாயன உர டிப்போ ஒன்றையும் தங்கள் இடத்தில் அமைக்க உதவுமாறு பஞ்சாப் மாநில விவசாயத் துறையை, இச்சங்க அங்கத்தினர்கள் அணுகினர்கள். அவர்கள் வேண்டுகோள் பயனைத் தந்தது. 1962-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு விதை ஸ்டோரும், 1963-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உரடிப்போவும், சங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது. 1963-ம் ஆண்டில் 880 மணு பொறுக்கு விதைகளையும், 595 குவிண்டில் ரசாயன உரங்களையும் இச்சங்கம் விநியோகித்தது.

### புதிய திட்டங்கள்

சங்கம் தன் அங்கத்தினர்களுக்காக இயந்திரக் கலப்பைகளையும், டிராக்டர்களையும், வாங்க தீர்மானம் செய்துள்ளது. இது அங்கத்தினர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

சங்கத்தின் அங்கத்தினர்கள் ஆண்டுக்கு 7,000 மணு நெல் உற்பத்தி செய்கின்றனர். ஆகவே அந்தப் பிராந்தியத்தில் நெல் அவித்து அதை அரைக்கும் மிஷினையும் வாங்க தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு செய்வதில், ஏறக்குறைய ஆண்டுக்கு ரூ. 30,000 வருமானம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இச்சங்கம் அடைந்த வெற்றிகள் மற்றவர்களின் ஆவலையும் தூண்டி, இப்போது 80 அங்கத்தினர்களை இச்சங்கம் பெற்றுள்ளது.

---

## பழமை விரும்பியின் பிடிவாதம் எத்தனை நாளைக்கு ?

பழங்கால முறைப்படியே விவசாயம் செய்யப்பட்டு வந்த ஒரு கிராமத்தில், தீவிர சாகுபடித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டபோது ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி மிகவும் ருசிகரமானதாகும்.

ராய்ப்பூர் மாவட்டத்தில் பலோடி என்ற கிராமத்தில், ஐம்பது வயதானவர் திரு. மத்வா என்பவர். தீவிர சாகுபடித் திட்டத்தைப் பற்றி எவ்வளவோ அவருக்கு எடுத்துக் கூறப்பட்ட போதிலும், பிடிவாதமாக மறுத்து, பழங்கால முறைப்படியே விவசாயம் செய்து வந்தார். மற்றவர்கள் தங்கள் நிலத்தில் தீவிர சாகுபடி திட்டப்படி விவசாயம் செய்வதையும் கம்போஸ்ட் குழிகளுக்கான பரீக்ஷார்த்தங்கள் நடைபெறுவதையும் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே, அவர் திருப்தியைக் கண்டார். பழங்கால முறைப்படி விவசாயம் செய்ததில் அவருடைய 12 ஏக்கர் நிலத்தில் 1962—63-ம் ஆண்டில் விளைந்த நெல் 160 மணுக்களே ! மேலும் சேவை—கூட்டுறவு சங்கத்திலும் அவர் அங்கத்தினராகச் சேரவில்லை. ஆனால் தீவிர சாகுபடித் திட்டத்தின் வெற்றிகரமான முடிவுகளை கண்ணுற்ற பின் அவரும் 1963—64-ல் தன்னுடைய 12 ஏக்கர் நிலத்தில், அதைக் கையாண்டார். கிராமத்திலுள்ள சேவைக் கூட்டுறவிலும் அவர் அங்கத்தினராகச் சேர்ந்தார். இவ்வாறு நவீன முறைகளின்படி விவசாயம் செய்ய ஆரம்பித்த அவர், 228 மணுக்கள் நெல் அறுவடை செய்தபோது, பெருத்த ஆச்சரியமடைந்தார். இந்த நல்ல விளைச்சல் அவரை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. தீவிர சாகுபடி திட்டத்தில் கையாளப்படும் எல்லா விவசாய முறைகளையும் தான் பின்பற்றப் போவதாக அவர் தீர்மானித்துள்ளார்!




## கோபாலகிருஷ்ண கோகலே

(திரு கே. இ. பார்த்தசாரதி, சென்னை-1.)

பாரதநாட்டின் நல்லறிஞர்கள் வரிசையிலே வைத்துப் போற்றப்படவேண்டியவர், திரு. கோபால கிருஷ்ண கோகலே. தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் அரசியல் குரு என்று புகழ்மாலை அவருக்கு சூட்டப்பட்டது ஒன்றே, திரு கோகலே அவர்களின் தேசப்பற்றுக்கும், அறிவான்மைக்கும் சான்றாகத் திகழ்கிறது. பாரத அன்னை பெற்றெடுத்த சிறந்த தவப்புதல்வர்களில் ஒருவரான அறிஞர் கோகலேயின் சிறப்பியல்புகளையும், வாழ்க்கை வரலாற்றின் சுருக்கத்தையும், இக் கட்டுரையில் காணலாம் —ஆசிரியர்.

புகழும் பிரதாபமும் படைத்த இந்திய பெரு மக்களில், ஆங்கிலேயரது இலக்கியங்களிலும் தத்துவ ஆராய்ச்சியும் ராஜரீக விஷயத்திலும் நூற் புலமை யிலும் சிறந்த யோக்யதையும் புத்திக் கூர்மையும் பெருந்தன்மைக்குரிய பண்புகளும் கூடப் பொருந்திய பாக்கியம் பெற்றவர், திரு. கோபால கிருஷ்ண கோகலே. இந்தியர்கள் மட்டுமின்றி, ஆங்கிலேயப் பிரமுகர்களும், இவரது அரிய குணங்களைப் பாராட்டியிருக்கின்றனர்.

### பிறப்பும், இளமைப் பருவமும்

கி. பி. 1866-ல், பம்பாய் ராஜதானியிலுள்ள கோலாபூரில், மஹாராஷ்டிர வம்சத்தைச் சேர்ந்த தோர் பிராமண குலத்தில் கோகலே தோன்றினார். மிகவும் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். பள்ளிப் படிப்பையும் கல்லூரி படிப்பில் எப்.ஏ. வரை யிலுமுள்ள கல்வியை உள்ளூரிலேயே கற்று, பின்னர், பம்பாய்ச் சென்று எல்பின்ஸ்டன் கல்லூரி யில் படித்து, 1884-ல் பி.ஏ. பட்டம் பெற்றார்.

### அறிவு விளக்கப் பணி

தம்மைப் பயிலுவித்துப் பட்டதாரியாக்கின போதகர்களைப் போலத் தாமும் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து, அறிவு விள்க்கப்பணியில் ஈடுபட வேண்டுமென்று பேரவாக் கொண்டார். அச் சமயத்தில், தக்காண கல்விச் சங்கம் வெகு திறமை யுடன் நடைபெறுவதைக் கண்டு, தாமும் அதில் சேர்ந்துகொண்டார். பின்னர் பூனாவிலுள்ள பர்க்கு ஸன் கல்லூரியில் சரித்திர போதகாசிரியராக அரசி யல் பொருளாதாரம் பயிலுவிக்கும் போதகாசிரிய ராகவும் அமர்ந்தார். இதுவும் தவிர, ஆங்கிலத் திற்கும் கணிதத்திற்கும் ஆசிரியராகயிருந்தார். பொதுவாக, பட்டதாரிகள் தாம் எடுத்துக் கற்ற பாடத்தை மட்டும் கற்பிப்பார்கள். ஆனால், பேரறி ஞரான கோகலே எல்லாப் பாடங்களையும் தனிப் பட்ட திறமையுடன் கற்பித்தார்.

கலாசாலையில் சேர்ந்த சில ஆண்டுகளுக்குள் கோகலேக்கு தலைமை ஆசிரியர் பதவி கிடைத்தது. அவர் பெற்ற மாதச் சம்பளம் ரூ. 70 தான். இருபது வருஷ காலம் உழைத்து கல்வி முன்னேற் றத்திற்காக தான் செய்துகொண்ட சபதத்தை அவர் நிறைவேற்றினார்,

"தாயைப் போல் பிள்ளை; நூலைப்போல சேலை" என்ற முதுமொழிக்கேற்ப, கோகலே தமக்கு குரு வாகயிருந்த மகாதேவ கோவிந்த ரானடேயின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றி நடந்தார்.

### அரசியல் தொண்டு

பொது நன்மைக்கு உழைக்கும் புண்ணியசாலி யென்ற பெயர் கோகலேக்கு விரைவிலே வந்து விட்டது. 1895-ல் பூனாவில் காங்கிரஸ் மகாசபை கூடியபோது, அதற்கு காரியதரிசியாகயிருந்து சகல காரியங்களையும் குற்றங்குறைவுகளிராமல் செய்து முடித்தார். இவரது சேவையைப் பாராட்டி மக்கள் இவரை தக்ஷிண தேசத்தில் தலை நிமிர்ந்து பிரகாசிக்கும் நட்சத்திர சிகாமணி (Rising Star of the Deccan) என்று அழைக்கலானார்கள்.

1897-ம் ஆண்டில், இந்தியாவின் வரவு செலவுக் கணக்கை ஆராய்ந்தறிவதற்காக, இங்கிலாந்தில் நிறுவப்பட்ட வெல்பி கமிஷனில் கோகலே பொது ஜனங்களால் அனுப்பப்பட்டு வாக்கு மூலங் கொடுத்தார். பிரிட்டிஷ் ஆட்சி முறையிலுள்ள குற்றங்குறைகளையும், செய்யப்படவேண்டிய சீர் திருத்தங்களையும், புள்ளி விவரத்துடன் தெளிவாக விளக்கினார்.

பல்லாண்டுகள் பூனா நகராட்சி மன்றத்திலே உறுப்பினராக இருந்த கோகலே, 1905-ம்ஆண்டிலே அதன் தலைவராக அமர்ந்து, இரண்டாண்டுகள் பணிபுரிந்தார்.

1889-ம் ஆண்டில் பம்பாய் மாநில சட்டசபை உறுப்பினரான கோகலே, அங்கும் இரண்டாண்டு பணியாற்றினார். இவர் காலத்தில் பல மசோதாக்கள்

## தேசிய ஒருமைப்பாடு நாள்

சீன ஆக்ரமிப்பை எதிர்ப்பதில், இந்திய மக்கள், தங்கள் உறுதியை, மீண்டும் தெரிவிக்கும் வகையில், 1964–ஆம் ஆண்டு அக்டோபர் 20–ஆம் தேதி அன்று, "தேசிய ஒருமைப்பாடு நாள்" நாடெங்கும் கொண்டாடப்படுகிறது.

அதேபோல், தமிழ்நாட்டிலுள்ள நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள், சென்னை மாநகராட்சி மன்றம் ஆகியவற்றிலும் இந்த நாள் கொண்டாடப்படவேண்டும். அது சமயம், கீழே கொடுக்கப்பட்டுள்ள உறுதிமொழி வாசிக்கப்பட்டு, சபையில் கூடியுள்ள அனைவரும் நாட்டின் சுதந்திரத்தையும், ஒருமைப்பாட்டையும் காப்பாற்ற சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

### உறுதிமொழி

"தாய்நாட்டின் சுதந்திரத்தையும், ஒருமைப்பாட்டையும் எப்பாடுபட்டாகிலும், என்ன தியாகம் செய்தாகிலும், காக்க மக்கள் மேற்கொண்டுள்ள சங்கற்பத்தில், எனது உறுதியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்."

"நாடு பலம் பெறவும், ஒற்றுமை வலுப் பெறவும், திடசித்தத்துடன் பாடுபட உறுதி கூறுகிறேன்".

---

ஆராயப்பட்டன. நில வருமான சட்டச் சீர்திருத்த மசோதாவைப் பற்றி வாதிக்கையில் அரசாங்கத்தினர் போக்கை யாவரும் மன்முருக மறுத்துப் பேசினர்.

1901-ல், கோகலே இந்திய சட்டசபையின் உறுப்பினரானர். இந்தியாவின் வரவு-செலவு கணக்கு சபையில் விவரிக்கப்பட்ட காலத்தில், கோகலே மதியூகத்துடன் பேசியதைக் கேட்டு ஆச்சரியப்படாதாரிலர். அவருடைய வரவு–செலவுத் திட்டம் (Budget) பற்றிய பிரசங்கங்கள் இன்றைக்கும் வழிகாட்டிகளாக இருக்கின்றன. தாம் சொல்வதொவ்வொன்றையும், கடூரமான வார்த்தை பிரயோகங்களில்லாமல், தெள்ளிய நடையில் மனத்தில் பதியுமாறு விளங்கவைப்பது, கோகலேயின் சிறப்பியல்பாகும்.

காங்கிரஸ் மகாசபையின் தலைவராக....

இவரது தேசப் பற்றையும், அறிவுடைமையையும் கண்டு 1905-ல் காங்கிரஸ் தன் தலைவராகத் இவரைத் தேர்ந்தெடுத்தது. தம் தலைமைச் சொற்பொழிவிலே வங்காளப் பிரிவினை, சுதேசியம், கல்வி ஆகியவற்றைப் பற்றி அவர் கூறிய கருத்துக்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பெறத்தக்கவை.

காங்கிரஸ் தலைவராகயிருந்து பேசிய பேச்சுடன் நில்லாமல், இங்கிலாந்துக்குச் சென்றும் தம் கருத்துக்களை அறிவித்தார். பிரசங்கங்களை மாரிபோல் பொழிந்தார். கோகலேயின் தீவிர உழைப்பின் மூலமாக நம் நாட்டிற்கு சில சீர்திருத்தங்கள் கிடைத்தன. அவற்றிற்கு "மின்டோ மார்லி சீர்திருத்தங்கள்" என்று பெயர்.

இதற்கிணங்க "இந்திய ஊழியர் சங்கம்" அரசாங்க விஷயமாய் ஜனங்களுக்கு சகல விஷயங்களை எடுத்துரைக்கவும், அரசாங்கத்தினரின் குற்றங் குறைகளை யெடுத்துப் பேசவும், ஜனங்களது நன்மைக்கேற்ற விஷயங்களை அரசாங்கத்தாருக்கு தைரியமாகத் தெரிவிக்கவும் உத்தேசித்து, 1905-ல் பூனா நகரத்தில் "இந்திய ஊழியர் சங்கம்" (Servants of India Society) ஒன்றை ஏற்படுத்தி உழைத்து வந்தார். ஆயிரக்கணக்கான பணத்தைச் சேகரித்து ஆசிரமம்போல் பல கட்டிடங்களையும் கட்டினர். தாய்நாட்டின் நலனைப் பெருக்குவதற்கு ஆதாரமாகவுள்ள நூல்களடங்கிய நூல்நிலையமொன்றையும் நிறுவினர். நாட்டில் பல நகரங்களிலும் இச் சங்கத்தின் கிளைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஸ்ரீனிவாச சாஸ்திரியார் முதலானோர் இச் சங்கத்தில் தொண்டர்களாகி அரிய தொண்டாற்றியுள்ளனர். இச்சங்கம் கோகலேயின் ஒப்பற்ற திறமைக்கும், அழியாப் புகழுக்கும் சான்றாக அமைந்திருக்கிறது.

அல்லும் பகலும் இடையறுவுழைப்பினல் கோகலேக்கு உடல் நலம் கெட்டது. 1915-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் பத்தொன்பதாம் நாள் கோகலே அமரரானர். இவரை, லோகமான்ய திலகர், "இந்தியாவின் மாணிக்கம், மகாராட்டிரத்தின் அணிகலன், உழைப்பாளிகளின் தலைவர்" எனப் பாராட்டுரை வழங்கியிருக்கிருர்., திலகர் பெருமானின் பாராட்டுரைக்கு மேல். கோகலே அவர்களுக்கு நாம் என்ன பாராட்டு கூறிவிட முடியும்?

# "தூய்மையான சமுதாயம் அமைப்போம்"

(திரு. ஜி. பூவராகன், செய்தித்துறை அமைச்சர்.)

**நமது நாட்டின் வரலாற்றிலே நாம் வாழ்கின்ற இக்காலம், ஒரு திருப்பு மையம். நாடு முன்னேற, மக்களின் வாழ்க்கைத்தரம் உயர, பல்வேறு துறைகளிலும், பலத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன நாட்டின் சீர்கேடான பொருளாதார அமைப்பையே மாற்றியமைத்து, மக்கள் மனநிறைவுடன் வாழத் திட்டங்கள் பல தீட்டி செயல்படுத்தி வருகிறோம். இந்த மாபெரும் பணியைச் செயல்படுத்தும் பொழுது, அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குறைகள், சில தவறுகள் நடைபெறலாம். குறைகளையே மிகைப்படுத்திக் கொண்டே போவது, எந்த வகையிலும் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழி வகுத்ததாகாது. பண்பில் உயர்திரு நாடு பாரதநாடு—பாரம்பர்யம் பாரம்பர்யமாக நிலவி வரும் அப்பண்பைக் கட்டிக் காக்கவேண்டும் என்ற செய்தித்துறை அமைச்சரின் வேண்டுகோளை, கிராம மக்கள் புரிந்துகொண்டு, செயலாற்றவேண்டும் - ஆசிரியர்.**

பாற்கடலைக் கடைந்தபோது அமுதம் கிடைத்தது. அத்துடன்கூடவே ஆலகால விஷமும் வந்தது. பெரிய நன்மைகள் கருதி, பெரிய காரியங்களை மேற்கொள்ளும்போது சில தீமைகளும் கலந்து வந்துவிடுகின்றன. அந்தச் சமயத்தில் நன்மை தரும் பணிகள் மேலும் பெருக்கப்படவேண்டும். தீமைக்குச் செல்லும் பாதைகள் அடைக்கப்பட வேண்டும். செம்மையான நல்வாழ்வுக்கு அதுவே ஏற்ற வழியாகும்.

லஞ்ச ஊழல் குறித்து இன்று எங்கும பேசப்படுகிறது. உலகில் பல காலமாக இருந்துவரும் சமூகத் தீமைகளில் லஞ்ச ஊழலும் ஒன்று. போர் நெருக்கடி, பற்றாக்குறை மிகுதி, பஞ்ச நிலைமை ஆகிய காலங்களில் இந்தத் தீமை வளர்கின்றது. மக்களின் ஒழுக்க உணர்ச்சி வளர்ந்து ஆக்க வேலைகளும் அமைதியான நிலைமையும் இருக்கும் சமயங்களில், லஞ்ச ஊழல் படர்வதற்குரிய வாய்ப்புகள் குறைந்துவிடுகின்றன.

### நம் முன் உள்ள வேலை

நமது நாடு தற்சமயம் ஒரு புதிய கால கட்டத்தைக் கடந்துகொண்டிருக்கிறது. நாடு விடுதலையடைந்ததைத் தொடர்ந்து வறுமையை ஒழிப்பதற்காக முழு மூச்சுடன் பாடுபட்டு வருகிறோம். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நமது சகல சக்திகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சரித்திரத்தில் என்றுமே கண்டிராத முறையில் அபிவிருத்தி வேலைகள் வேகமாக நடைபெற்றுவருவதைப் பார்க்கிறோம். அரசாங்கத் தரப்பில் மட்டும் திட்ட வேலைகளுக்காக ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. மண்மூடிக் கிடந்த இயற்கைச் செல்வங்கள் பல உபயோகத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. வேலை வாய்ப்புகளும் வாழ்க்கை வசதிகளும் அதிகரித்துள்ளன. மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்து வருகிறது. மக்களின் தேவைகள் நாளுக்கு நாள் வளர்கின்றன. உற்பத்தி பெருகித்தான் வருகிறது என்றாலும், தேவைகள் சிற்சில கட்டங்களில், உற்பத்தி அளவையும் மீறுகின்றன.

### ஊழலுக்கு அடிப்படைக் காரணம்

மக்கள் தத்தம் தேவைகளை எப்படியும் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். தாங்கள் முன்னணியில் இருக்க வேண்டும் என்பதில் போட்டி உணர்ச்சியோடு செயல்படுகிறார்கள். இந்த ஆசை, ஒரு ஒழுங்கைக் கடந்து வரம்பு மீறும்பொழுதுதான், ஊழலுக்கு உரிய சூழ்நிலை தோன்றுகிறது.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார் வள்ளுவப் பெருந்தகை. நமது தேவைகளையும் விருப்பங்களையும் வரம்புக்கு உட்படுத்திக்கொள்ளுவதுதான், ஒழுக்கத்திற்கு அடிப்படையான அறம் ஆகும். ஒன்றைப் பெறுவதற்கான கிரமமான வழியிலிருந்து மாறுவதில்லை என்ற உறுதி வேண்டும். சமூக நலனுக்காக, பிறர் நலத்துக்காக தன்னலத்தைக் குறைத்துக்கொள்ளும் மனப்பாங்கை வளர்க்க வேண்டும். எளிய வாழ்க்கை மூலம் இதற்கான மனப்பண்பினைப் பெறவேண்டும்.

நமது நாட்டின் பாரம்பர்யமே அறத்தையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டது. நமது புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள் யாவும் அற வாழ்வையே வலியுறுத்துகின்றன. சத்தியத்தின் முழு வடிவத்தை ஹரிச்சந்திர புராணத்திலே நாம் பார்க்கிறோம்.

### வறுமையில் செம்மை

நம்மை, சுதந்திர நாட்டின் மக்களாக உருவாக்கிய காந்தியடிகள், எளிய வாழ்க்கையை உபதேசித்த

தோடு நிற்கவில்லை. அதன்படி வாழ்ந்து காட்டினார். அறத்துக்கும் நேர்மையான வழிக்குமே அவர் முதலிடம் கொடுத்தார். நமது தேவைகளைக் குறைத்துக்கொண்டு எளிய வாழ்வு வாழ்வதன்மூலம் பல சமூகத் தீமைகள் தோன்றுவதற்கே இடமில்லாமல் போகின்றது. ''கிட்டாதாயின் வெட்டென மற'' என்று நமது பெரியவர்கள் கூறினார்கள். கிட்டாத பொருட்களை நாம் ஒரே யடியாக மறந்துவிட வேண்டும் என்பதுகூட இல்லை. தற்போதைக்கு, நேரிய வழியில் கிடைக்கும்வரை, அந்த ஆசைகளை நிறுத்தி வைத்தாலும் போதும். 'வறுமையில் செம்மை' என்பது நமது பண்பாடு. சாதாரணமான நிலையிலும் மக்கள் நல்வாழ்வு வாழ முடியும். மனத்தில் அழுக்கோடு ஆடம்பர வாழ்வு வாழ்வதைவிட, தூய மனத்துடன் எளிய வாழ்வு வாழ்வது மேலானதாகும்.

ஊழல்கள் குறித்து ஒவ்வொருவரும் மற்றவர்கள் மீது புகார் சொல்லிக்கொண்டே வந்தால், அதற்கு முடிவே இல்லை. ஒருவரைக் குறை கூறிவிடுவது சுலபம், ஊழல்களை ஒழிப்பதில் நமது பங்கு என்ன, நாம் என்ன செய்தோம் என்பதைத்தான் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் அறநெறிகளை அறிந்திருப்பது மட்டும் போதாது. அறநெறிகளை நம் அளவுக்குச் செயல் படுத்த வேண்டும். எண்ணத்தில் மட்டுமல்ல—செயலிலும் வல்லவர்களாகவேண்டும்.

படித்தவர்களும், வசதியான நிலையில் இருப்பவர்களும் மற்ற மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். எப்படியோ ஒரு காரியத்தைச் சாதித்து விடுகிறோம் என்பது பெரிதல்ல. கிரமமான வழிகளில் நேர்மையான முறைகளில் உரியதை அடைவதே, பெருமைக்குரியதாகும். கல்வியும் வசதியும் படைத்தவர்கள் தவறான வழியில் சென்றால், மற்ற சாமானிய மக்களுக்கும் அதே முறையைப் பின்பற்ற சபலம் ஏற்படும். பின்பு அது அனைவருக்கும், சமூகம் முழுவதற்குமே தீங்காக முடியும். செய்கையில் தவறு கூடாது என்பது மட்டுமல்ல ; மனத்திலும் மாசு இல்லாதவர்களாக இருக்க வேண்டும்.

### பொது வாழ்வில் தூய்மை

பொதுவாழ்வில் ஒழுங்கும் சீலமும் நிலவும் படிச் செய்வதில் பொது மக்கள் கவனம் செலுத்துவது அவசியமாகும். யார் ஊழல் பேர்வழிகள் என்பதை அறிவதில் மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும். குறிப்பாக, சீர்திருத்தக் கருத்து உள்ளவர்கள் இதில் ஒரு முன் மாதிரியாக விளங்கலாம்.

நாடு முழுவதற்குமே பெரும் நன்மை ஏற்படுத்தக்கூடிய ஒரு சீர்திருத்தப் பிரச்னை இன்று முன்னணியில் நிற்கிறது. சட்டமியற்றுவது மூலமோ உத்தரவுகள் மூலமோ நினைத்த மாத்திரத்தில் இதற்குப் பரிகாரம் கண்டுவிட முடியாது. பல்வேறு துறைகளிலும் இணைப்பான இடைவிடாத தீவிர நடவடிக்கைகள் மூலமே, லஞ்ச ஊழல் தீமையை ஒழிக்க முடியும். ஊழல்களை ஒழிப்பதில் வேறு எங்கும் இருப்பதை விட நம் நாட்டில் அனுகூலமான சூழ்நிலை இருக்கிறது. தர்மம், நீதி முதலிய மேலான பண்புகளில் நம் மக்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிக மதிப்பு வைத்திருக்கிறார்கள். மதுவிலக்கு வேறு நாடுகளில் சாத்தியமில்லாமல் இருக்கலாம். ஆனால் நம்நாட்டில் அது சாத்தியமாயிற்று. மக்களின் மனப் பரிபக்குவமும் அதற்கு ஓரளவு துணை புரிந்தது.

பொது மக்கள் ஆடம்பரமாக சமூகச் சடங்குகள் நடத்துவதைத் தவிர்க்க வேண்டும். தான் மட்டும் எப்படியும் நலம் பெற வேண்டும் என்ற மனோபாவத்தை ஒதுக்க வேண்டும். சமூகத்தில் ஒருவராக, உரியதைப் பெற்று, அவசியமானவர்களுக்கு உதவி, நல்வாழ்வு வாழ வேண்டும். மக்களின் ஒழுக்கத்தைப் பொறுத்துத்தான் ஒரு நாட்டின் தராதரம் கவனிக்கப்படும் என்பதை உணர்தல் வேண்டும்.

### ஜனநாயக சோஷலிச நெறி நிற்போம்

நலம் தரும் நம் நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க நாம் எல்லா முயற்சிகளும் செய்து வருகிறோம். மக்கள் அனைவருக்கும் சமூக நீதியும், உழைப்புக்கேற்ற ஊதியமும் கிடைக்கச் செய்வதற்காக, ஜனநாயக சோஷலிச நெறியைச் செயல் படுத்தி வருகிறோம். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் மக்கள் அமைதியாக ஆக்கப்பணியில் முழுமூச்சுடன் ஈடுபடுவது அவசியம். உழைப்புதான் செல்வம். நேர்மையான உழைப்பின் மூலம் பெற முடியாதது எதுவுமே இல்லை. லஞ்ச ஊழல் போன்ற சமூகத் தீமைகளுக்கு இடம் தராத உஷார் உணர்ச்சியை வளர்த்து வர வேண்டும்.

நமது மக்கள் கஷ்ட நஷ்டங்களைக் கண்டவர்கள், தியாகம் செய்யும் பண்பு நிறைந்தவர்கள். மற்ற எதைக்காட்டிலும் தர்மத்துக்கும் நியாயத்துக்கும் முக்கிய ஸ்தானம் அளிப்பவர்கள். அநீதியை எதிர்ப்பதில் முன் நிற்பவர்கள். குற்றத்தைக் குற்றம் என்று சொல்லத் தயங்காதவர்கள். இந்தப் பண்புகளோடு, மக்கள் செயல்படவும் தொடங்கிவிட்டால், ஊழல் ஒழிந்த தூய சமுதாய அமைப்பை விரைவில் காண முடியும்.

[வானொலிப் பேச்சின் சுருக்கம் 9—9—64)

# பஞ்சாயத்து தலைவர்களின் பொறுப்புகள்—ஆலோசனைக் குழு கூட்டத்தில் வலியுறுத்தல்

செப்டம்பர் 23, 24-ம் தேதிகளில், சென்னையில் உற்பத்தித் திட்டங்கள்—சமூக நலப் பணிகள் பற்றிய பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டிகளின் மூன்றாவது கூட்டங்கள் நடைபெற்றன, இக் கூட்டங்களில், கமிட்டிகளின் உறுப்பினர்கள், மாநில அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட அரசாங்கத்துறைத் தலைவர்கள், கிராம நல—தல நிர்வாகத்துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கமிட்டிகளின் தலைவர் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம் அவர்கள், இரண்டு குழுக்களின் கூட்டங்களுக்கும் தலைமை வகித்தார்.

மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அவ்வமயம் அவர் கேட்டறிந்து கொண்டார். அந்தக் கூட்டத்தொடரின் இறுதியில் அவர் வற்புறுத்திக் கூறிய சில அடிப்படைக் கருத்துக்கள் ஆழ்ந்த சிந்தனைக்குரியன. சிறப்பாக பஞ்சாயத்து ஆட்சிப் பொறுப்பும் ஆர்வமும் கொண்டுள்ள அனைவரும் அவற்றை அறியக் கடமைப்பட்டுள்ளனர்.

## பொதுஜனத் தலைவர்களின் கடமை

"ஆட்சிப் பொறுப்பை பல்வேறு நிலையில் உள்ள மக்கள் தலைவர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும்" என்பதே காந்தியடிகள் கண்ட சுயராஜ்யத்தின் லட்சியமாகும். மக்கள் நல் வாழ்வுக்கான பொறுப்பைஅரசாங்கம் மட்டுமே சாதித்துவிட முடியாது. அந்தப் பொறுப்பைப் பகிர்ந்து கொள்வதில்தான், பொதுஜனத் தலைவர்களின் கடமை அமைந்துள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் வரவு—செலவுத் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றும் பொறுப்பு இப்போது அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை நிர்வகிக்கும்போது, எல்லாவற்றையும் அரசாங்கமே செய்துவிடட்டுமே என்ற எண்ணம் வளரத் தொடங்கிவிட்டால், ஜனநாயகப் பொறுப்பின் பரவல் தன்மை அடியோடு அழிந்துவிடும். பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் மனப்பான்மை பொது ஜனத் தலைவர்களிடம் உருவாகவே கூடாது. சிறப்பாக, பொதுநல வசதிகளுக்கான நிதி விஷயங்களை கவனிக்கும்போது, பொறுப்புணர்ச்சியோடு நாம் அனைவரும் பணியாற்ற வேண்டும்.

"அரசாங்கத்திற்குக் கிடைக்கும் நிதியெல்லாம் பொது மக்கள் தரும் வரியிலிருந்துதான் கிடைக்கின்றது. எனவே, அதிக நிதி வேண்டும் என்ற வேண்டுகோளில், ஜனங்களுக்கு அதிக வரி போடுங்கள் என்ற ஆணை தொக்கி நிற்கின்றது. பஞ்சாயத்து ஆட்சியில் பல்வேறு பொதுநல வேலைகள் நடைபெறுவதற்கு, மக்களின் ஒத்துழைப்பும், பஞ்சாயத்துத் தலைவர்களின் விசேஷப் பொறுப்பும் அநேக நற்பயன்களை உண்டாக்கித்தரமுடியும். உதாரணமாக, மதிய உணவுத் திட்டம் ஏதோ ஒரு சில இடங்களில், தனிப்பட்ட கமிட்டிகள் மூலம் நிறைவேறி வந்தது. ஆனால், இப்போது பஞ்சாயத்துத் தலைவர்களின் நேரடி மேற்பார்வையில் இந்த சீரிய தொண்டு நடைபெற அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது. அங்கேயுள்ள கிராம மக்களின் ஒத்துழைப்பைப்பெற்று, இத்திட்டத்தை வெற்றிபெற நடத்துவது, பஞ்சாயத்துத் தலைவர்களின் முக்கிய பொறுப்பாகும். இதைப்போல பள்ளிக்குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டம், படிக்கும் வயதுள்ள குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல ஏற்பாடு செய்தல் ஆகியவற்றில் பஞ்சாயத்துத் தலைவர்கள் மேலும் அதிக சிரத்தை காட்டுவது நலம்."

## பொறுப்பை புறக்கணிக்கக்கூடாது

"எனவே, கிராம ஜனங்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றும் விஷயத்தில் புதிய பஞ்சாயத்து ஆட்சி தனது பொறுப்பைப் புறக்கணிக்க முயலக்கூடாது. அரசாங்கமே எல்லாவற்றையும் செய்துவிடட்டுமே என்று கூறும் வார்த்தைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அனாவசியமான செலவினங்களைக் குறைத்துக்கொண்டு, பஞ்சாயத்து நிதி வசதிகளை பெருக்குவதற்கான ஆக்கத் திட்டங்களில் எல்லாப் பஞ்சாயத்துக்களும் கவனம் செலுத்த வேண்டும். நிர்வாகத் துறையில் ஏற்படும் சிக்கல்களை அந்தந்த இலாகா அதிகாரிகளும் அரசாங்க இலாகாக்களும் தக்கவாறு ஆராய்ந்து பார்த்து ஆவன செய்யும் என்று உறுதி கூறுகிறேன்."

முதலமைச்சர் வற்புறுத்திய மேற்கண்ட அடிப்படைக் கருத்துக்களை, அனைவரும் ஆழ்ந்து சிந்தித்து, அதன்படி பணியாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

[புதிய பஞ்சாயத்து ஆட்சியில் ஏற்படும் நடைமுறை வேலைத்திட்டங்களை ஆராயவும், அத்துறையில் ஏற்படும் அனுபவங்களை அறிந்து பயன்பெறவும், மாநில அளவில் பஞ்சாயத்து அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. உற்பத்திப் பெருக்கம், சமூகநலப்பணிகள், வேலைத் திட்டங்கள் பற்றிய மூன்று குழுக்கள் உள்ளது யாவரும் அறிந்ததே. மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் உள்ள சம்பந்தப்பட்ட நிலைக்குழுக்களின் தலைவர்கள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.]

—:o:—

# "நகரசபைகளுக்கான புதிய சட்டம் விரைவில் இயற்றப்படும்"

## "தல ஆட்சி நிறுவனங்களுக்கென தனி சர்வீஸ் கமிஷன் நிறுவவும் யோசனை"

### நகர மன்றத் தலைவர்களின் மாநாட்டில் முதலமைச்சர் அறிவிப்பு

"தமிழ் நாட்டில் தற்போது அமுலிலுள்ள 1920ம் ஆண்டு ஜில்லா முனிசிபாலிட்டிகள் சட்டத்தை (District Municipalities Act of 1920) எல்லா அம்சங்களிலும் திருத்தி அமைக்கும் யோசனை ஒன்றை, தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. விரைவில் அதை புதிய சட்டமாகக் கொண்டுவர அரசாங்கம் உத்தேசித்துள்ளது" என்று, தமிழ்நாடு நகர மன்றத் தலைவர்களின் மகாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில், முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் அறிவித்தார்.

தமிழ்நாடு நகர மன்றத் தலைவர்களின் 12-வது மகாநாடும், அதையொட்டிய ஐந்தாவது கருத்தரங்கும், செப்டம்பர் 10, 11 தேதிகளில் சென்னை பாலர் அரங்கில், நடைபெற்றன. தமிழ்நாடு அரசாங்க தல நிர்வாகத்துறை அமைச்சர் திரு எஸ். எம். ஏ. மஜீது அவர்கள் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். சம்மேளனத்தின் உபதலைவர் திரு சவுந்திர வேலு, மகாநாட்டிற்கு வந்திருந்தோரை வரவேற்றார்.

#### தனியொரு குழு அமைக்கும் யோசனை

தமது துவக்கவுரையில், முதலமைச்சர், "நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றம், நகர பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றில், வேலைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, தமிழ்நாடு "பப்ளிக் சர்வீஸ் கமிஷன்" போன்ற தனியொரு குழு அமைப்பது குறித்து, அரசாங்கம், தீவிரமாக யோசித்து வருகிறது" என்று தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், "தல ஆட்சி நிறுவனங்களின் வருவாயைப் போதிய அளவு பெருக்கிக் கொள்ள என்னென்ன வழிகள் உள்ளன என்பது பற்றி, இதில் பொறுப்புள்ள அனைவரும் ஒன்றுகூடி ஆராய்ந்து முடிவு செய்யலாம். மத்திய நிதிக் கமிஷன் இன்னும் ஓராண்டில் அதன் சிபாரிசுகளை செய்யக்கூடும். அதன் முடிவுப்படியும், மாநிலத்திற்கு அதிகமாக எவ்வளவு நிதி கிடைக்கும் என்பதும் தெரியும். ஆனால், அதுவரை காத்திராமல், சுயமாக நம் வருமானக் கூறுகளை பெருக்கிக்கொள்ள ஆராயவேண்டியது மிகவும் அவசியம்" என்று கூறினார். அத்துடன், மக்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்கும்படி செய்வதற்கு முதலிடம் அளிக்கும்படி, நகர மன்றங்களை அவர் கேட்டுக்கொண்டார்.

வரிகளை மட்டும் வசூலித்துக் கொண்டு, புதிதாக சேர்க்கப்பட்ட இடங்களுக்கு போதிய வசதிகள் செய்து தராமல், நகரமன்றங்களின் எல்லைகளை இஷ்டம் போல் விஸ்தரித்துக் கொண்டே போவதற்கு, முதலமைச்சர் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்தார். அத்துடன், முனிசிபல் கமிஷனர்கள் நகர மன்றத் தலைவர்கள், ஆகிய இரு சாராரும் சேர்ந்து கூட்டுமகாநாடு நடத்தவேண்டும் என்று முதலமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.

மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், தல நிர்வாகத்துறை அமைச்சர் திரு எஸ். எம். ஏ. மஜீது அவர்கள், "1964 ஏப்ரல் முதல் தேதிக்குப் பிறகு, புதிதாக ஏழு நகர மன்றங்கள் அமைக்கப் பட்டன. இன்னும் சில மன்றங்களை அமைப்பது பற்றியும் ஆலோசனை செய்து வருகிறோம்" என்றார்.

#### தனித்தனியே இயங்கவேண்டியவை

மேலும் அவர் தமது தலைமையுரையில், "நிர்வாக அலுவல்கள், கொள்கையை வகுக்கும் அலுவல்கள் என்பன தனித்தனியே இயங்கவேண்டிய முக்கியப் பொறுப்புகளாகும். இவை ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. அனுபவ ரீதியாக இணைந்து நடைபெறவேண்டியவை. கொள்கையை வகுக்கும் அலுவல்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சபையிடம் அமைந்துள்ளன. அதற்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லவே, நகர மன்றத் தலைவர் இருக்கிறார். நகரமன்றம் நிறைவேற்ற வேண்டிய கொள்கைகளை வகுத்துவிட்டபின், அவற்றைச் செயல் படுத்தி வைக்கவேண்டிய கடமை, நிர்வாக அதிகாரிகளின் பொறுப்பாகி விடுகிறது" என்று அவர் விளக்கினார். அத்துடன் நகரங்களின் புதிய தொழில்கள் ஏற்படுத்தப்படுவதையொட்டி, அங்கே குடியேறும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிப்பது அவசியம் என்றும், இதற்காகத் தக்கமுறையில் திட்டமிட்டுப் பணிபுரிய வேண்டுமென்றும், நகர மன்றத் தலைவர்களை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மகாநாட்டின் இரண்டாவது நாளில் நடைபெற்ற கருத்து அரங்குக்கு, செய்தித்துறை அமைச்சர் திரு ஜி. பூவராகன் தலைமை வகித்தார். அச்சமயம் தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த பல்வேறு நகரமன்றத் தலைவர்கள் தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் எடுத்துக் கூறினர். தனது முடிவுரையில் "பொறுப்புணர்ச்சியைப் பிரதானமாகக் கருதுமாறு" செய்தித்துறை அமைச்சர் வற்புறுத்தினார். "நகரசபைத் தலைவர்கள் கோரியவாறு, சட்டத்தை மாற்றுவதோடு, மக்கள் கண்ணோட்டத்திலும் மாறுதல் ஏற்படச் செய்ய வேண்டும்" என்றார் அவர். நகரமன்ற ஆட்சியில் தலைவருக்கு அதிக அதிகாரமா, ஆணையாளருக்கு அதிக அதிகாரமா என்ற வீண் விவாதத்தில் காலத்தைப் போக்கி, நிர்வாகச் சிக்கல்களைப் பெருக்கு

[25-ம் பக்கம் பார்க்க.]



தமிழ்நாடு நகரமன்றத் தலைவர்கள் மகாநாடு



**1-2. செ**ன்னை நகரில், பாலர் அரங்கிலே, செப்டம்பர் 10,11-ம் தேதிகளில் அமைச்சர் திரு எஸ். எம். ஏ. மஜீது அவர்கள் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டினை, முதலமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம் அவர்கள் துவக்கி வைத்தார்.

**3. ப**ஞ்சாயத்து யூனியன்களில், கிராமத்தொண்டர் படையினர், சீருடை அணிந்து, முறைப்படி கொடி வணக்கம் செய்வதில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

(படம்: சிங்கம்புணரி வட்டாரம்)





# பஞ்சாயத்து யூனியன்களில் நடைபெறும் பல்வேறு ஆக்கப் பணிகள்

**1. வ**ரலாற்றுப் புகழ்படைத்த பறம்பு மலை (பிரான் மலை), கிராமத் தொண்டர் படை சிறந்த பணி புரிகிறது.

படம் : சிங்கம்புணரி வட்டாரம்



**2. ப**ள்ளி வயது அடையாத சிறு குழந்தைகளுக்கு, பாட்டும் விளையாட்டும், பஞ்சாயத்து யூனியன் ஆதரவின் கீழ், சொல்லித் தரப்படுகின்றன.



**3. கி**ராமத் தொழில் வளர்ச்சியில், பஞ்சாயத்து யூனியன்கள் ஈடுபட்டு வருகின்றன. வாழை நாரிலிருந்து கயிறு திரிக்கும் தொழில்.

படம் : கன்னியாகுமரி மாவட்டம்

**4.** பஞ்சாயத்து யூனியன்கள்
மீன் பண்ணை வளர்ச்சியில்,
மிகுந்த அக்கறை
காட்டி வருகின்றன.







**5.** ஹரிஜன மக்களின்
உற்சாக ஒத்துழைப்பால்,
கிராமங்களில்
புதுவாழ்வு மலர்கிறது.

(படம்:
ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்டாரம்)

**6.** பிற்போக்கான
பிரதேசங்களிலும்,
மாதர் நல வேலைகள்
நன்கு நடைபெறுகின்றன.

(படம்:
ஸ்ரீ வைகுண்டம் வட்டாரம்)





**1. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலும், செய்தி நிலையம் அமைந்துள்ளது. இங்குள்ள பத்திரிகைகள், நூல்கள், விளக்கப் படங்கள் முதலியன, பொதுக்கல்வி பரவுவதற்கான சிறந்த சாதனங்களாகும்**

## எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும்...

**2. கிராம நல அமைச்சர் திரு எஸ். எம். ஏ. மஜீது அவர்களின் ஆலோசனையின்படி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலும், பஞ்சாயத்து யூனியனின் பல்வேறு அலுவலர்களின் பயணத் திட்டத்தைப் பற்றிய விவரங்கள், பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக வேண்டி, வைக்கப்பட வேண்டும்.**






**3. கிராமங்களில் கோழிப் பண்ணை வளர்ச்சிக்கு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், தக்க ஆலோசனையோடு, நிதி உதவியும் அளிக்கப்படுகிறது.**

(படம்: மதுரை மாவட்டம்.)

# வத்தலகுண்டு மாதர் சங்கப் பணிகள்

மதுரை மாவட்டம், வத்தலகுண்டு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த வத்தலகுண்டு நகரப் பஞ்சாயத்தில். மாதர் சங்கம் முறையாக இயங்கி, சீரான வளர்ச்சி பெற்றுள்ளது.

நகரின் நடுநாயகமான இடத்தில் அழகுற அமைந்த பூங்காவின் அருகே இந்த மாதர் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இந்தச் சங்கம் 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதியில் துவக்கப்பட்டு, மாதர்கள் மத்தியில் நிலையாக நின்று போற்றுதற்குரிய பல பணிகளை ஆற்றி வந்துள்ளது.

தற்போது இம்மாதர் சங்கத்தில் 40 உறுப்பினர்கள் உள்ளனர். வத்தலகுண்டு நகரப் பஞ்சாயத்தில் உள்ள மாதர்கள் இந்தச் சங்கத்தில் கூட்டங்கள் நடத்தி, அன்றாட உலக பிரச்னைகள், செய்திகள் முதலியவற்றைத்தெரிந்துகொள்வதுடன், அரசினரால் மாதர் முன்னேற்றத்திற்கு வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் பற்றியும் புரிந்து கொண்டு வருகின்றனர். ஓய்வு நேரங்களில் கைத்தொழில்களைக் கற்றுக்கொண்டு பயன் பெற்றுள்ளனர்.

### சிறுதொழில் பயிற்சி

தையல், பூ வேலை, ஊசி பின்னல், சித்திர வேலைகள், இந்த மாதர் சங்கத்தால், பெண்களுக்கு கற்றுத் தரப்படுகின்றன. அரசினர் உதவி மான்யம் பெற்று, தையல் இயந்திரம் ஒன்றும், நூல் நிலையம் ஒன்றும் இதற்கு சொந்தமாயுள்ளன. உயர்ரக காய்கறி விதைகளை சங்கம் உறுப்பினர்களுக்கு விநியோகித்து, வீட்டுக் காய்கறித் தோட்டம் போடுவதற்கு உதவியும் ஆலோசனையும் அளித்து வருகிறது. இம்மாதர் சங்கத்தின் தையல் தொழிற் பயிற்சியளிக்கும் பணியானது, சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தினந்தோறும் மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை, துணி தைத்தல், வெட்டல் ஆகியவற்றில் பயிற்சி வகுப்புக்களைச் சங்கம் நடத்தி வருகிறது. தற்போது 12 பெண்கள், இவ்வகுப்புகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இதுவரை 10 தையல் இயந்திரங்களை இம் மாதர் சங்க உறுப்பினர்கள் சுயமாக வாங்கிக்கொண்டு தையல் வேலைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

மாதர் சங்க உறுப்பினர்கள் கிராம மாதர் தொண்டர் படையிலும் சேர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். வாடிப்பட்டியில் நடந்த பாரதியார் விழாவில் பேச்சு, கட்டுரை, குழு இசைப் போட்டிகளில் கலந்து கொண்டு, இச்சங்க உறுப்பினர்களில் சிலர், பரிசுகளும் பெற்றுள்ளனர். ஆண்டு தோறும் மாதர் சுற்றுலாவிற்கு பஞ்சாயத்து யூனியன் உதவி கொண்டு உறுப்பினர்கள் சென்று வருகின்றனர். பஞ்சாயத்து யூனியன் உதவியால், சமூகக் கல்வி போதனை கருவிகள், முதல் சிகிச்சைக் கருவிகள் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. சங்கம், தனது பங்குத் தொகையாக ரூ. 120-ம், நகரப் பஞ்சாயத்து ரூ. 80-ம், பஞ்சாயத்து யூனியன் ரூ. 200-ம், ஆக மொத்தம் ரூ. 400-க்கு கைத்தொழில் கருவிகளைச் சங்கம் பெற்றுள்ளது. வத்தலகுண்டு நகரப் பெண்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும், ஓய்வு நேர கைத்தொழில் பயிற்சி நிலையமாகவும், மாதர் பொது அறிவை வளர்க்கும் கல்வி நிறுவனமாகவும் இந்த மாதர் சங்கம் திகழ்கிறது.

---

[20-ம் பக்கத் தொடர்ச்சி.]

வதை விட்டுவிட்டு, மக்களின் குறைகளைத் தீர்க்கும் பொறுப்பில் இருசாராரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

நகரமன்ற ஆட்சி சம்பந்தமான முக்கியமான தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேறின. தமிழ் நாட்டிலுள்ள நகரமன்றத் தலைவர்களின் பிரச்னைகளை அறிந்துகொள்வதற்கு, இந்த மகாநாடு மிகவும் உதவி புரிந்தது என்று கூறலாம்.

---

## 1964 வாக்காளர் பட்டியல் : திருத்தம், சேர்க்கை செய்ய வழிமுறைகள்

தமிழ்நாட்டிலுள்ள 206 சட்டசபைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள், 1964-ம் வருடம் செப்டம்பர் மாதம் 15-ம் தேதிக்குள் இறுதியாக பிரசுரிக்கப்பட்டன. இவை இறுதியாகப் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

இறுதிப் பட்டியல்களை, சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்களில் பொது மக்கள் பார்வையிடலாம். சென்னை மாநகராட்சி மன்ற ரெவின்யூ அதிகாரி, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகள், சேலம், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் நகராட்சி மன்றக் கமிஷனர்கள், நீலகிரி கலெக்டரின் உதவியாளர் (பொது) ஆகியோர் வாக்காளர் பதிவு அதிகாரிகள் ஆவர்.

### தவறு இருந்தால் திருத்தலாம்

வாக்காளர் பட்டியலில், ஒரு சில வாக்காளர் விஷயத்தில் தவறான விவரங்கள் இடம் பெற்றிருக்கக் கூடும். இத்தகைய வாக்காளர், தவறான தகவல்களைத் திருத்தக்கோரி, 50 காசு கட்டணத்துடன் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அவர், விசாரித்து அறிந்த பிறகு, தகுந்த திருத்தங்களைச் செய்வார். ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரு நபர், அதே பட்டியலில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தனது பெயரை மாற்றக் கோரியும் விண்ணப்பித்துக்கொள்ளலாம். பட்டியலில், ஏற்கனவே ஒரு நபர் இடம் பெற்றுள்ளதை ஆட்சேபித்தும் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

### புதிதாகச் சேர....

தகுதி பெற்ற ஒரு நபரைப் புதிதாக வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளக் கோரியும், 24-வது பிரிவின்கீழ் 6-வது பாரத்தில் 50 காசு கட்டணத்துடன் இப்பொழுதுகூட வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும் முடியும். புதிதாகப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கு, 1964. வாக்காளர் பட்டியலுக்கு உரிய தேதியான 1964. ஜனவரி 1-ந் தேதி. தகுதியை நிர்ணயிக்கும் நாளாகும். ஒரு அசம்பிளித் தொகுதி, அல்லது அதை அங்கமாகக் கொண்ட பார்லிமெண்டு தொகுதி ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும்படி அறிவிக்கப்பட்ட பிறகும், தேர்தல் முடிவதற்கு முன்பும் விண்ணப்பம் செய்வதானல், மாநில பிரதம வாக்காளர் பதிவு அதிகாரிக்கு, 3 ரூபாய் கட்டணத்துடன் விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும்.

# மனமுண்டானல் மார்க்கமுண்டு

மைசூர் மாநிலத்தின் பெல்காம் மாவட்டத்தில் ஹிரே பேகவாடி என்ற கிராமப் பஞ்சாயத்து செய்துள்ள சாதனைகள் மற்றவர்களுக்கு வழிகாட்டக் கூடியனவாகும்.

இப்பஞ்சாயத்தின் தலைவர் திரு சிவனகௌடா படீல் என்பவர் தமது கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டி முடிக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே இருந்துவந்தார். அதைச் செயல்படுத்த அவர் மாவட்ட பள்ளிக்கூட போர்டின் தலைவரோடு பேச்சு வார்த்தை நடத்தி, இன்னல்களை எடுத்துக் கூறிய பின்பும், இதற்கு ஒரு தீர்வும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஆனல் அவருக்கு ஒரு அருமையான யோசனை உதித்தது. அங்கு ரித்தன்பாவி நீர்ப்பாசன குளம் கட்டும் திட்டம் ஒன்று செயல்பட இருந்தது. இந்தத் திட்டத்தை ஏன் தன்னுடைய பஞ்சாயத்து, மற்ற கண்டிராக்டர்கள் கட்டுவதுபோல், ஏற்று செயல்படுத்தி, அதனல் சிறிது சேமிப்பு செய்து அதைக்கொண்டு பள்ளிக்கூட கட்டிடம் கட்டக்கூடாது என்பதே அவருக்குக் கிடைத்த யோசனையாகும்.

கிராமத்தை அடைந்த அவர், உடனே கிராமச் சபையைக் கூட்டி, அதன்முன் இந்த திட்டத்தை வைத்தார். இந்தப் புதுமையான யோசனையை எல்லோரும் வரவேற்றனர். ஆனல் ஒரு, வயது முதிர்ந்தவர் எழுந்து நின்று, ''எல்லோரும் இப்போது ஒத்துக்கொள்வீர்கள். ஆனல் கண்டிராக்ட் வேலை லாபகரமாகத்தான் முடியும் என்று எப்படி சொல்ல முடியும். நஷ்டம் வந்தால் என்ன செய்வீர்கள், நம்மில் யாருக்கும் இது விஷயத்தில் அனுபவமில்லாததால், நஷ்டம் வரும் என்பது நிச்சயமே'' என்று கூறினர். இதைக் கேட்டவுடன் கூட்டத்தில் மயான அமைதி நிலவியது. அம் முதியவரின் வார்த்தைகளில் காணப்பட்ட அழுத்தம், எல்லோரையும் யோசனையில் ஆழ்த்தியது. ஆனல் திரு சிவனகௌடா படீல் மனம் தளரவில்லை. உடனே கூட்டத்தில் எழுந்து நின்று, சக கிராமத்தவர்களை நோக்கி, "மனமுண்டானல் மார்க்க முண்டு" நமக்கு இம் மாபெரும் திட்டத்தை செயல்படுத்துவதில் அனுபவம் இல்லைதான். ஆனல் உண்மை உழைப்பும், தளராத மனமும் கொண்டெழுந்தால் எல்லா இடையூறுகளையும் வென்றுவிடலாம். ஆகவே நாம் மனம் தளரக்கூடாது. கஷ்டமில்லாமல் லாபம் கிடைக்காது. நமக்குள்ள இரு கைகளையும் வைத்துக்கொண்டு, நாம் சோம்பி நின்ரேமானல், நாம் பள்ளிக்கூடக் கட்டிடத்தை பெறுவது முடியாத கதைதான். அதை நீங்களெல்லாம் விரும்புகிறீர்களா?'' என்று ஆர்வத்தோடு பேசினர். எல்லோரும் ''அது முடியாது; முடியாது'' என்று ஒரே குரலில் ஆமோதிக்கவே தீர்மானம் நிறைவேறியது.

கிராமப் பஞ்சாயத்தின் விசேஷக் கூட்டம் ஒன்று ஜூலை மாதம் 14-ம் தேதி அழைக்கப்பட்டு, இது பற்றி விவாதம் செய்யப்பட்டது. அங்கத்தினர்கள் எல்லோரும் இந்தத் திட்டத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு, பொறுப்பைத் தாங்க முன்வந்ததோடுமல்லாமல், பஞ்சாயத்துத் தலைவருக்கு, அரசாங்கத்தின் அனுமதியைப் பெறவும் அதிகாரம் அளித்தார்கள்.

## பஞ்சாயத்தின் பொன்னுள்

நவம்பர் மாதம் 23-ம் தேதி ஹிரே பேகவாடி பஞ்சாயத்தின் பொன்னுளாகும். அப் பொன்னுளில் தான், மைசூர் அர்சாங்கத்தின் பொதுப் பணிகள் துறை, துணைக் காரியதரிசியிடமிருந்து, ரூ. 3,78,400-க்கு திட்டமிடப்பட்டுள்ள சித்தன் பாவி நீர்ப்பாசன குளம் கட்டும் திட்டத்தைப் பஞ்சாயத்திடம் ஒப்படைப்பதற்கு உரிய கடிதம் அதன் தலைவருக்கு வந்தது.

திரு, சிவனகௌடாவின் சீரிய தலைமையின்கீழ், கிராமப் பஞ்சாயத்து மேற்கண்ட திட்டத்திற்கான வேலைகளில் இறங்கியது. இத் திட்டத்திற்குத் தேவையான வல்லுநர்கள், தொழிலாளர்கள், மற்றும் இதர ஆட்கள், மணல், சிமெண்ட், கற்கள் ஆகிய எல்லாம் தயார் செய்யப்பட்டன. ஜனவரி மாதம் 10-ம் நாள் மைசூர் மாநிலத்தின் முதன் மந்திரி திரு எஸ். நிஜலிங்கப்பாவே இத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிவைத்தார். இதிலிருந்தே, அரசாங்கம் இதற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்துள்ளது என்பது நமக்குத் தெரிகிறது. ஒரு சிறிய பஞ்சாயத்து, இவ்வளவு பெரிய காரியத்தை எடுத்துக்கொண்டு செயல்பட முனைந்துள்ளது, திட்டங்களின் சரித்திரத்திலேயே புதுமையானது. ஆகவே இவ்வளவு பெரிய திட்டத்தை செயல்படுத்த முனைந்துள்ள இந்தப் பஞ்சாயத்தின் தைரியம், நுட்பம், விவேகம் ஆகியவற்றை முதன் மந்திரி வெகுவாக பாராட்டினர். இப் பஞ்சாயத்து, இவ்வளவு பெரிய திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து, வெற்றியடையும் என்று முதன் மந்திரி நம்பிக்கை தெரிவித்தார்.

## ஒளி மயமான எதிர்காலம்

ஒரு சிறிய பஞ்சாயத்து இவ்வளவு பெரிய திட்டத்தைப் பொறுப்பேற்று செயலாக்க முனைந்திருப்பது ஓர் உதாரணச் செயலேயாகும். தனிமை

(31-ம் பக்கம் பார்க்க.)

# மலைவாசிக் கிராமத்தில் மறுமலர்ச்சி

மத்திய பிரதேசத்தின் பஸ்தார் மாவட்டத்தில் பண்டேலி என்றொரு சிறிய மலைவாசிக் கிராமம். அக்கிராமத்திற்கும், பக்கத்திலுள்ள கன்கேர் என்ற அரசாங்க அலுவலகங்கள் உள்ள இடத்திற்கும் உள்ள தூரம் 7 மைல்களே. ஆனால் இவ்விரு இடங்களுக்கும் உள்ள போக்குவரத்து இன்னல்கள் அதன் தூரத்தை 70 மைல்களாகக்கூட ஆக்கிவிடும். காரணம் இந்த 7 மைல்களில் மூன்று ஆறுகளைக் கடக்கவேண்டியுள்ளது. மழைக்காலங்களில் இவ்வாறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது, அக்கிராம மக்கள் படும் போக்குவரத்துத் துன்பம் மிகவும் அதிகம்.

இக்கிராமம் சுமார் 800 பேர்களைக் கொண்டது. அதில் சுமார் 100 குடும்பங்கள் 700 ஏக்கர் நிலங்களை சாகுபடி செய்து வந்தனர். ஆனால் இன்று அக்கிராமத்தைப் பார்த்தால், அது ஒரு மலைவாசிகளின் கிராமமா என்று வியப்படையத் தோன்றும். இருப்பினும் 75 சதவீதத்தினர் மலைவாசி மக்களே.

இம்மறுமலர்ச்சி எட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பித்தது. அங்கு 1956ஆம் ஆண்டு ஒரு வட்டார வளர்ச்சி அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டவுடன், அங்குள்ள மக்களுக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. வட்டார வளர்ச்சி அதிகாரிகள் அவர்களை அணுகி, ''உங்களின் நிலையை உயர்த்த என்ன செய்யப்பட வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

ஆனால் மக்களிடம் போதுமான உற்சாகம் பிறக்கவில்லை. எனவே அவர்கள் வட்டார வளர்ச்சி அதிகாரிகளின்மீது அவ நம்பிக்கை கொண்டு அவர்களோடு சேராமல் ஒதுங்கியே வாழ்ந்தனர். அதிகாரிகளின் எண்ணங்கள், செய்கைகள் எல்லாம் அவர்களுக்கு ஒரு வேடிக்கையாக இருந்துவந்தன. இருப்பினும், அங்கு பழைய வழக்கங்கள், சந்தேகம் ஆகியவற்றை ஒழித்துக்கட்ட முன்வரும் ஆட்கள் இல்லாமல் இல்லை. அவர்கள் மிக உற்சாகத்துடன் முன் வந்து சக கிராமவாசிகளுடைய அவநம்பிக்கையைப் போக்கும் பணியில் உதவிசெய்தார்கள். இவ்வாறு அங்கு ஒரு முக்கிய காரியம் முடிந்தது. இதில் அதிக காலதாமதம் ஏற்படவில்லை.

## கால மாறுதல்

காலச் சக்கரம் மெதுவாக, ஆனால் உறுதியாக சுழன்றது. பண்டேலி கிராமமும், பல நூற்றாண்டு பிற்போக்கு நடவடிக்கைகளை உதறிவிட்டு எழுந்தது. 'விதியின் செய்கை' என்பதை கைவிட்டு, 'முயற்சி திருவினை யாக்கும்' என்பதை கடை பிடிக்க முனைந்தனர்.

நவீன விவசாய முறைகள், ரசாயன உரங்கள், பொறுக்கு விதைகள் கடைப்பிடிக்கப்பட்டன. வயல்கள் ஆழமாக உழப்பட்டன. வயல்களை சமன் செய்யும் 'லெவல்லர்கள்', குழாய்கள், புற்கள் வெட்டும் இயந்திரங்கள் இன்னும் மற்ற விவசாயத்திற்கு தேவையானவைகள் எல்லாவற்றையும் பஞ்சாயத்தே, விவசாயிகளின் பொது உபயோகத்திற்கு வாங்கிவிட்டது. 6 நீர்ப்பாசன கிணறுகள் இங்கு வெட்டப்பட்டன.

## கூட்டுறவு

பண்டேலி மக்களை கூட்டுறவு வெகுவாகக் கவர்ந்தது. விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம் 1959ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஆதிவாசிகளையே அதிகமாகக்கொண்ட இச்சங்கம் தற்போது 119 அங்கத்தினர்களைக் கொண்டுள்ளது. பயிராகும் வயல்களில் பாதி இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ளது. விவசாய முன்னேற்றத்திற்காக ரூ. 12,895 வரை இச்சங்கம் விவசாயிகளுக்கு கடன் வழங்கியுள்ளது. கிராமத்திலுள்ள இரண்டு குளத்திலும் 1,200 மீன் குஞ்சுகள் விடப்பட்டதில் அவை ரூ. 756-ஐப் பெற்றுத் தந்தன.

கிராமத்திலுள்ள பல நோக்குச் சங்கம் 149 அங்கத்தினர்களை பெற்று, ரூ. 1650-ஐப் பங்கு முதலாகப் பெற்றுள்ளது. அரசாங்கம் ரூ. 10,000,ஐ அதற்கு முதலாக அளித்துள்ளது. அரசாங்கம் அளித்த ரூ. 7,500-ல், இச்சங்கம் ஒரு கிடங்கையும் கட்டியுள்ளது.

மேலும் கிணறுகளிலிருந்து, நீரை வடிப்பதற்கான சிமெண்ட் குழாய்கள் இந்த ஆதிவாசிகளால் செய்யப்படுகின்றன. அதற்கான சிமெண்ட் குழாய் கூட்டுறவு சங்கம் 1959-ல் ஏற்படுத்தப்பட்டது. இதுவரை 3 அடி அகலமும் 1·5 அடி விட்டமும் கொண்ட 1,500 குழாய்களை இச்சங்கம் தயாரித்துள்ளது. இச் சங்கம் லாப நோக்குடன் இக்குழாய்களைச் செய்வதில்லை. இக்கிராமத்தின் நடுவில் 2,000 காலன்கள் பிடிக்குமளவுக்கு ஒரு தண்ணீர் தொட்டி கட்டப்பட்டுள்ளது. அதைக் கட்டி முடிக்க ரூ. 50,000 செலவாயிற்று. இதற்காக கிராமத்தினர் 15 சதவீதத் தொகையே அளித்தனர். மீதமுள்ள தொகையை 'குழாய்நீர் விநியோக திட்டத்தின்' கீழ் அரசாங்கம் அளித்தது.

(31-ம் பக்கம் பார்க்க.)



# வீரர்களை உருவாக்கும் கல்விக்கூடம்

[சைனிக் பள்ளி—அமராவதி நகர்]

இந்த நாட்டின் இளஞ்சிறுர்கள், நாட்டின் விலை மதிக்க முடியாத பொக்கிஷங்கள். நாட்டின் எதிர்காலம் அவர்கள் கையில் உள்ளது. மனிதன் நல்லவனுக இருந்தால் மட்டும் போதாது; வல்லவனுகவும் வாழவேண்டும். எத்தனைதான் வளம் பெற்றுலும், வீரம் இல்லாது போனல், நெஞ்சிலே உரம் இல்லாது போனல், உடல் வலிவற்று, திராணியற்ற கூட்டமாய் மக்கள் சமுதாயம் காட்சியளித்தால், அதைவிட பேராபத்து நாட்டிற்கு வேறு எதுவும் இருக்க முடியாது. நாட்டின் சுதந்திரத்தைக் கண்ணே போல் காப்பவர்கள் நம் வீரர்கள். வீரத்தை, இளம் வயதிலேயே ஊட்டி வளர்க்கும் பள்ளிச்சாலைகள் சிலவற்றை பாரத அரசாங்கம் ஆங்காங்கே ஏற்படுத்தியுள்ளது. அப்படிப்பட்ட ராணுவப் பள்ளிகளில் ஒன்றுன, தமிழ் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள 'சைனிக் பள்ளி, அமராவதிநகர்' பற்றிய தகவல்களை, இக்கட்டுரையில் காணலாம். —ஆசிரியர்.

தமிழ் நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டையிலிருந்து சுமார் பன்னிரண்டு மைல் தொலைவில் அமராவதி நகர் என்னும் சிறு நகரில் சைனிக் பள்ளி (Sainik School) அமைந்துள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு சைனிக் பள்ளி இருக்கின்றது. பஞ்சாப் போன்ற சில மாநிலங்களில் இரண்டு சைனிக் பள்ளிகள் இருக்கின்றன.

### குறிக்கோள்

உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, கல்வி வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களை மேன்மையுறச் செய்து அவர்களைத் தேசிய பாதுகாப்புக் கழகத்தின் (National Defence Academy) சார்பில் நடைபெறும் தேர்வுக்குத் தகுதியுடையவர்களாய் ஆக்குவதோடு வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தகுதியுள்ளவர்களாய் ஆக்குவதே இப் பள்ளியின் தலையாய குறிக்கோளாகும். நல்லொழுக்கம், ஒற்றுமையுணர்ச்சி, தியாக மனப்பான்மை, நாட்டுப் பற்று ஆகிய நற்குணங்களை மாணவர்கள் பெறுவதற்கான பயிற்சிகள், அவர்கள் இப்பள்ளியில் பயிலுங் காலத்தில், அளிக்கப்படுகின்றன.

இப்பள்ளியில் சேரும் பிள்ளைகளுக்கு எதிர்காலம் மிகவும் சோபிதமானது. அவர்கள் தேசிய பாதுகாப்புக் கழகத்தின் தேர்வில் தேறி, தரைப் படை, கடற்படை, விமானப் படை ஆகியவற்றில் சேர்ந்து தலைவர்களாகப் (Officers) பணியாற்றும் பொறுப்பை ஏற்று நாட்டுப் பாதுகாப்பில் ஈடுபடும் நல்ல வீரர்கள் ஆவார்கள்.

இப் பள்ளியில் ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடின்றி, யாவரும தங்கள் புதல்வர்களைச் சேர்க்கலாம். தகுதியுடைய எந்த மாணவரும் சேர்த்துக் கொள்ளப்பெறுவர்.

### சேர்க்கை முறை

அனைத்திந்திய அடிப்படையில் ஒரு நுழைவுத் தேர்வும் (Entrance Examination) ஒரு வாய்மொழித் தேர்வும் (Viva-Voce Test) நடைபெறும். இவ்விரண்டிலும் தேர்ச்சி பெறும் மாணவர்கள் இப்பள்ளியில் சேர்த்துக்கொள்ளப் பெறுவார்கள்.

பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு நம்முடைய அரசாங்கம் மிகத்தாராள மனத்துடன் உதவித் தொகை (Scholarship) அளித்து வருகிறது. பெற்றேர்களின் வருமானத்திற்கேற்ப உதவித் தொகை அளிக்கப்படும்.

ஒன்பது வயதிலிருந்து 13 வயது வரை உள்ள மாணவர்கள் நுழைவுத் தேர்வின் மூலம் இப்பள்ளியில் சேர்க்கப் பெறுவார்கள். தமிழ் நாட்டில் சென்னை, சேலம், வேலூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களிலும், எல்லா சைனிக் பள்ளிகளிலும் நுழைவுத் தேர்வு நடைபெறும். தேர்வு நடைபெறும் நாள் முதலிய விவரம், முன்னிலையிலுள்ள எல்லாச் செய்தித்தாள்களிலும் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

பொதுவாக ஐந்து, ஆறு வகுப்புகளில்தான் மாணவர்கள் சேர்க்கப் பெறுவர். அவ்வப்போது ஏற்படும் இடங்களுக்கேற்ப ஏழு, எட்டு வகுப்புக்களிலும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பெறுவர். ஐந்து, ஆறு வகுப்புக்களில் சேர விரும்புபவர்கள் பிராந்திய மொழியில் நுழைவுத் தேர்வு எழுதலாம்; ஏழு, எட்டு வகுப்புக்களில் சேர விரும்புபவர்கள் ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும்.

### பாடத் திட்டம்

மாணவர்களைக் கீழ்க் காணும் தேர்வுகளுக்கு இப் பள்ளி ஆயத்தம் செய்கிறது.

(அ) தேசிய பாதுகாப்புக் கழகத்தில் சேருவதற்கான மத்திய பொதுச் சேவைக் கழகத் தேர்வு; (Union Public Service Commission Examination).

(ஆ) நம் நாட்டிலுள்ள, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத் தேர்வு ஆய்வுக் குழுவினரால் நடத்தப் பெறும் இந்தியப் பள்ளிச் சான்றிதழ்த் தேர்வு. (Indian School Certificate Examination).

இப் பள்ளியில் பயிற்றுமொழி ஆங்கிலம். இந்தி கட்டாய பாடமாகும். மாணவர்கள் விருப்பத்திற் கேற்ப, தமிழ், சமஸ்கிருதம் இரண்டில் ஒன்றைக் கற்க வேண்டும். இத்துடன் ஆங்கிலமொழி, இலக்கியம், கணிதம், பௌதிகம், இரசாயனம், பொது விஞ்ஞானம், சமூக அறிவு நூல் ஆகிய பாடங்களும் இங்கு கற்பிக்கப்படுகின்றன.

மாணவர்களின் பலவிதமான திறமைகளை வளர்க்கவும், அவர்களின் மனத்தின் அடித்தளத்தில் இருக்கும் உயர்ந்த எண்ணங்களை வெளிக்காட்டவும் மாணவர் கழகங்கள் பல உள்ளன.

வாரந்தோறும் நடைபெறும் இக்கழக நிகழ்ச்சி களில் மாணவர்கள் பங்கேற்றுத் தங்கள் திறமையை யும், ஆர்வத்தையும் காட்டுவதோடு புதுப்புது அனுபவங்களையும் பெறுகின்றனர்.

### உடற் பயிற்சி

'சுவரை வைத்தே சித்திரம் எழுத வேண்டும்'. உடல் நல்ல முறையில் இருந்தாலன்றோ கல்வி கற்க இயலும்? 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழியன்றோ? மாணவர் கள் உடல் நலத்தோடு வாழவேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், அவர்கள் தகுந்த உடல் வளர்ச்சி யுடன் திகழ்வார்கள் என்பதற்காகவும், தலைமைப் பதவி, குழு மனப்பான்மை, ஒற்றுமையுணர்ச்சி ஆகிய அனைத்தையும் மாணவர்கள் இவ்வுடற் பயிற்சியினால் பெற்றுத் திகழவேண்டும் என்பதற் காகவும் மற்ற எல்லாப் பள்ளிகளையும்விட உடற் பயிற்சிக்கு இங்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படு கிறது.

இப் பள்ளியிலுள்ள எல்லா மாணவர்களும் மாணவர் தேசிய இயக்கத்தில் (N.C.C.) சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மாணவர்களுக்கு, தேசிய இயக்கப் பயிற்சி பெற்ற அதிகாரிகள் (N.C.C. Officers) பயிற்சியளிக்கின்றனர். தரைப்படை, கடற்படை, விமானப் படை ஆகிய மூன்றிற்குமே பயிற்சி யளிக்கப்படுகின்றது.

### மாணவரில்லங்கள்

மாணவர்கள் உறைவதற்கு இல்லங்கள் உள்ளன. சேரர் இல்லம், சோழர் இல்லம், பாண்டியர் இல்லம், பல்லவர் இல்லம், பாரதி இல்லம் எனப் பல இல்லங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இல்லத் திற்கும் ஒவ்வொரு இல்லத் தலைவரும் (House Master) இல்ல ஆசிரியர்களும் (House Tutors) உள்ளனர். மேலும் சிறு மாணவர்களைக் கவனித்துக் கொள்ளவும், அவர்கள் உடல் நலத்தைப் பேணவும் ஒவ்வொரு இல்லத்திற்கும் ஒரு இல்லத் தாய் மாரும் (Matron) உண்டு. பொதுவாக ஒவ்வோர் இல்லத்திலும் ஐம்பது மாணவர்கள் வரை தங்கு வார்கள். மாணவர் இல்லங்கள் எல்லா வசதிகளை யும் பெற்றுத் திகழ்கின்றன.

### கோவை கிராம வானொலி மன்றக் கருத்தரங்கு விவரம்.

கிராம வானொலி மன்றங்கள் இன்னும் சீரான, முறையில் அமைய வழிவகைகளை ஆராய் வதற்காக, கோவையில் ஆகஸ்ட் 18, 19, 20 ஆகிய தேதிகளில் கருத்தரங்கு நடைபெற்றது. கோவை மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவி யாளர் திரு. மிருத்தியுஞ்ஜயன் தலைமை வகித்தார். கிராம வானொலி மன்றத் தலைமை அமைப்பாளர் திரு. எஸ். வேங்கடசாமி அனைவரையும் வரவேற்று, கருத்தரங்கு நடைபெறுவதற்கான பின்னணியை விளக்கிப் பேசினார். பிறகு கருத்தரங்கைத் துவக்கி வைத்து, அமைச்சர் திரு. எஸ். எம். ஏ. மஜீது பேசிய பேச்சு, ஒலிபரப்பப்பட்டது. அகில இந்திய வானொலி நிலைய நிகழ்ச்சிகள் திட்ட இயக்குநர் திரு. பி. வி. கிருஷ்ணமூர்த்தி, தலைமை வானொலி அதிகாரி திரு. எம். என். பார்த்தசாரதி, தமிழ் நாடு பஞ்சாயத்துத் திட்ட இயக்குநர் திரு. ஆர். ராஜாமணி முதலியோர் உரை நிகழ்த்தினர். மற்றும் பல அதிகாரிகளும், பஞ்சாயத்துத் தலைவர் களும் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில், பல நல்ல யோசனைகள் கூறப்பட் டன. இப்போது அநேக கிராமங்களில் வானொலி மன்றங்கள் சாவடி, பூங்கா போன்ற இடங்களில் கூடுகின்றன. விஷயங்களை அமைதியாக விவாதிக்க மன்றங்களுக்கு எனத் தனி இடம்—கட்டிடங்கள்— கட்ட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. பெண் களுக்கு என்று தனி இடம் ஒதுக்கவேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டது.

இப்பொழுது பஞ்சாயத்துக் கிராமங்களில் மட்டுமே பொது வானொலிப் பெட்டிகள் உள்ளன. அதே போல் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பெட்டி தரவேண்டும் என்றும், 3,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள பெரிய கிராமங்களுக்கு இரண்டு பெட்டிகள் வழங்க வேண்டும் என்றும் கருத்தரங்கில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ஐம்பதுவீடுகளுக்கு அதிகமாயுள்ள ஹரிஜன காலனிகளுக்கு வானொலிப் பெட்டிகள், முழு மானியத்துடன் தரும்படி, அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

சத்துணவுத் திட்டம்:

## ஆந்திரப் பிரதேசக் குழுவினரின் தமிழ் நாட்டு விஜயம்

சத்து உணவு திட்டத்தின்கீழ் ஆங்காங்கே நடை பெறும் வேலைகளைக் கண்டறிய, ஆந்திரப் பிரதேச சத்துணவுத் திட்ட மதிப்பீட்டுக் குழு, அண்மையில் தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தது. இக் குழுவில் ஆந்திரப் பிரதேசப் பஞ்சாயத்து ஆட்சித் துறையின் துணைக் காரியதரிசி, இரண்டு உதவிக் காரியதரிசிகள், ஒரு அபிவிருத்தி அதிகாரி, ஹைதராபாத் உணவு ஆராய்ச்சி நிலைய வல்லநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளர்கள். இக் குழுவினர் இத் திட்டத்தினை நேராகக் கண்டறிய கல்லுப்பட்டி வட்டாரத்திற்கு, அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

இவர்கள் வண்ணிவேலம்பட்டி, குன்னத்தூர், ரெங்கபாளையம், அ. தோட்டியாபட்டி, காரைக் கேணி, நல்லிதேவன்பட்டி, சுப்பளாபுரம், கூவலாபுரம், ஆப்பக்கரை ஆகிய கிராமங்களுக்குச் சென்றனர். ஆங்காங்கே அவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து அங்கத்தினர்கள், மாதர் சங்க அமைப்பாளர்கள், மாதர் சங்க அங்கத்தினர்கள், ஆசிரியர்கள், மற்றும் இத் திட்டத்தினுல் பயனடைபவர்கள் (கருவுற்ற பெண்கள், தாய்மார்கள், பள்ளிக்கூடம் செல்லாத இளங்குழந்தைகள்) ஆகியோருடன் இத்திட்டத்தின் ஆக்கத்தையும், மக்களின் ஒத்துழைப்பையும் பற்றி விவாதங்கள் நடத்தினர்.

சென்னையில், கூட்டு அபிவிருத்திக் கமிஷனருடனும், பஞ்சாயத்து வேலைகளுக்கான துணைக் காரியதரிசியுடனும் பேச்சு வார்த்தை நடத்தினர்.

### மாதர் முன்னேற்றம்

சமுதாயத் தோட்டங்கள், மாதர் சங்கங்கள் ஆகியவற்றின் பணி ஆந்திரப் பிரதேசத்தில் இருப்பதைவிட, தமிழ்நாட்டில் பெருகியுள்ளது என்று அவர்கள் கருத்துத் தெரிவித்தனர். ஆந்திராவில், சமுதாய தோட்டங்கள் இடம் பெறவில்லை; ஆனுல் பள்ளிக்கூடத் தோட்டங்கள் அங்கே உள்ளன. ஆந்திர பெண்மணிகள், இத் திட்டத்திற்கு உற்சாகத்துடன் முன் வருவதில்லை என்றும் இக் குழுவைச் சார்ந்தவர்கள் கூறினர்.

பள்ளிக்கூட ஆசிரியர்கள், மாதர் சங்க அமைப்பாளர்கள், மாதர் நல கமிட்டி ஆகியோரின் மூலமாக வழங்கப்படும் ஒரு அமைப்பை இக் குழுவினர் வெகுவாகப் பாராட்டினர். தமிழ் நாட்டில், ஐக்கிய நாடுகள் குழந்தை நல நிதி (Unicef)யின் மூலம் பால், முட்டைகள், மீன், காய் கறிகள், பழங்கள் ஆகியவைகள் வழங்கப்படுகின்றன. ஆனுல் இந்த நிதியின்கீழ் ஆந்திராவில் பால் வழங்குவது கிடையாது என்று குழுவினர் கூறினர்.

மேலும் தமிழ் நாட்டில் சத்து உணவுத் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வட்டாரங்கள் கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையங்களைச் சுற்றியே அமைந்துள்ளதைக் கண்ட குழுவினர் வெகுவாகப் புகழ்ந்தனர். ஏனென்றுல் ஆந்திராவில் இவ்வாறு வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்படாமல், எல்லா மாவட்டங்களிலுமாக இத் திட்டம் பரவலாக அமுல் செய்யப்பட்டுள்ளது. ஆனுல், ஆந்திராவில் இரண்டாவது கட்டமாக தொடங்கவிருக்கும் இந்த திட்டம், பயிற்சி நிலையங்களைச் சுற்றியே அமையவிருக்கிறது என்று தெரியவருகிறது.

காய்கறிகளை—அதில் இருக்கும் சத்துக்கள் கெடாமல்—சமைப்பதிலும், பழங்களையும், காய்கறிகளையும் காப்பாற்றி வைப்பதிலும், சத்துள்ள உணவுப் பொருள்களைப்பற்றிய மக்களின் தவருன எண்ணத்தைப் போக்குவதிலும், நம் மாதர் சங்கங்களின் பணிகளில், இக் குழுவைச் சார்ந்த வைத்திய அதிகாரி மிகுந்த உற்சாகத்தைக் காட்டினுர்.

### செய்ய வேண்டியவை நிறைய உண்டு

டி. கல்லுப்பட்டியிலுள்ள முதல்வர், அலுவலர்கள், ஆணையாளர், வட்டார அலுவலர்கள் போன்றவர்களின் அனுபவமும் ஆந்திர மாநிலத்தின் மதிப்பீட்டுக் குழுவின் ஆய்வும் பயன்தரத் தக்கதாக அமைந்தன. ஆந்திரப் பிரதேசக் குழுவினர் தமிழ்நாட்டின் சத்து உணவுத்திட்டத்தை வெகுவாகப் பாராட்டினுலும், இந்தத் துறையில் இன்னும் ஏராளமான காரியங்கள் செய்யவேண்டியுள்ளது. எனவே, சத்து உணவு திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் பங்குபெறும் எல்லோரும், அதேபோல் தனிப்பட்டவர்களும், தங்களால் இயன்றவரை உற்பத்தியை அதிகரித்து, மக்களின் உணவுத்தரத்தைப் பெருக்க, அவர்கள் வழிகோலுவார்கள் என்று நம்பப்படுகிறது.

(26-பக்கத் தொடர்ச்சி)

யாக உள்ள சித்தன்பாவி என்ற கிராமத்தில் இத் திட்டம் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டு வருகிறது. இக் கிராமத்தின் அருகில் ''தொட்ட குட்டா'' என்ற சிறிய மலைத் தொடர் புல் பூண்டுகள், புதர்களால் மூடப்பட்டுக் காட்சி யளிக்கிறது. இங்குதான் ''சித்தன்பாவி நல்லா'' என்ற சிறு ஓடை உற்பத்தியாகிறது. இதுநாள் வரையிலும் வீணாகிக்கொண்டுவந்த இந்த ஓடைநீர் இனி இக் குளத்தில் தேக்கிவைக்கப்பட்டு, பாசனத் திற்குப் பயன்படப்போகிறது. இந்தத் திட்டம் 1966-ம் ஆண்டு முடிவடையும்போது, இக் குளம் 61 ஏக்கர்கள் அடித்தளம் கொண்டதாக இருக்கும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 500 ஏக்கர் நிலத் துக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இப்போது இங்கு நிலக்கடலைதான் விளைகிறது. மேலும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 200 வரைதான் வருவாய் கிடைக்கிறது. இந்தத் திட்டம் முடிவடைந்தவுடன், நிலக்கடலை விளைவித்த அதே நிலம் நெல், கரும்பு, காய்கறிகள், பழங்கள் ஆகிய வற்றை விளைவிக்கப்போகின்றது. அப்போது விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 400 முதல் ரூ. 2,000 சராசரி வருமானம் கிடைக்க, இத் திட்டம் மிகவும் உதவும். மேலும் இப் பஞ்சா யத்துத் தலைவர், இக்குளத்தில் மீன் வளர்க்கவும் திட்டமிட்டுள்ளார். இதன் மூலம் பெருத்த வருவாய் கிடைக்க வழி ஏற்படும். அடுத்து, இந்த இடத்தை, ஓர் உல்லாச பிரயாண இடமாக ஆக்கி, உல்லாச பிரயாணிகள் படகு விடவும், நீந்தவும் வழிவகைகள் செய்யப்படவிருக்கின்றன. இவை எல்லாம் ஒருங்குகூடி, கிராமப் பஞ்சாயத்துக்கு, பெருத்த வருமானம் நாளடைவில் கிடைக்கும்.

## பள்ளிக்கூட சோதனையாளர் விவசாயியாக மாறினார்!

இருபது ஆண்டுகளுக்கு முன்பு திரு வாமான்ராவ் ஒரு பள்ளிக்கூட சோதனையாளர். ஓய்வு பெற்ற பின், ஒரு முற்போக்கு விவசாயியாக மாற எண்ணங் கொண்டு, கிராமத்திலுள்ள தன் குடும்பத்தின் மூன்று ஏக்கர் நிலத்தை விற்றார். அந்த பணத்தைக் கொண்டு ஜார் என்ற கிராமத்தில் ஒரு பெரிய தரிசு நிலத்தை விலைக்கு வாங்கினார். அதில் 60 அடி விட்டமும், 40 அடி ஆழமும் கொண்ட ஒரு கிணறு வெட்டி, ஆயில் எஞ்சின் ஒன்றை அதில் அமைத்தார். இப்போது தன் னுடைய 40 ஏக்கர் நிலத்தில் அவர் கரும்பு, கத்தரிக்காய், வெங்காயம், பூண்டு, கோதுமை இதர காய்கறிகளை விளைவித்து, ஆண்டொன்றுக்கு ரூ. 30,000 சம்பாதிக்கிறார்.

---

## மலைவாசிக் கிராமம்:

(27-ம் பக்கத் தொடர்ச்சி.)

மலைவாசி கிராமப் பஞ்சாயத்து தற்போது ஒரு நல்ல கட்டிடத்தில் அமைந்துள்ளது. கிராமத்தார் களின் பொருளும், சிரமதானமும், இதர கட்டிட சாமான்களும் அரசாங்கத்தின் உதவி ரூ. 1,000-ம் சேர்ந்து மேற்கண்ட கட்டிடம் உருவாகியுள்ளது.

### தன் கையே தனக்கு உதவி

உழைப்பாளி மக்களான இவர்கள், ஒருமைல்நீளத் திற்கு ஒரு ரஸ்தா அமைத்துள்ளார்கள். இக்காரியத் திற்கு அரசாங்கம் ரூ. 1,000 தந்து உதவியது.

ரூ. 10,000 மதிக்கக் கூடிய ஒரு பள்ளிக்கூட கட்டிடத்தை இக்கிராமம் தன்னகத்தே கொண்டுள் ளது. இதனைச் சுற்றி, பள்ளிக்கூட மாணவர்கள் பூச் செடிகளையும், காய்கறிகளையும் வளர்த்திருக் கிறார்கள்.

ரூ. 1,500 மதிப்பிடும்படி ''சிரம தானத்தை'' மனமுவந்து அளித்து, ரூ. 6,500 செலவில் ஆன ஒரு ஆஸ்பத்திரியையும் இம் மக்கள் அமைத்துள்ளார்கள். ஒரு பயிற்சி பெற்ற நர்ஸால் இந்த ஆஸ்பத்திரி நடந்து வருகிறது.

'ஆதிவாசி வீடு கட்டும் திட்ட'த்தை இவர்கள் நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு, ரூ. 750 வீதம் பெற்று, 20 வீடுகள் அழகாகவும் வரிசையாகவும் கட்டிக்கொண்டுள்ளனர்.

மலைவாசிக் கிராமமான பண்டேலி, இன்று மாண் புடன் திகழக் காரணம், அக்கிராமத்து மக்களின் சலியாத உழைப்புதான்.

---

"பஞ்சாயத்து ஆட்சி" இதழிலிருந்து இடம் பெறுபவை:
பக்கங்கள்—6, 7, 8: 13, 14: 26, 27, 31, (8 பக்கங்கள்)
Articles reproduced from "Panchayati Raj" on Pages 6, 7, 8; 13, 14; 26, 27 and 31 (8 pages)

# பொது அறிவு வளர்ச்சி — கிராம வானொலி மன்றங்களின் சேவை

—கோவைக் கருத்தரங்கில் தல நிர்வாகத் துறை அமைச்சரின் வேண்டுகோள்—

[1964 ஆகஸ்டு 18, 19, 20 தேதிகளில், கோயம்புத்தூரில் நடைபெற்ற கிராம வானொலி மன்றக் கருத்தரங்கினைத் துவக்கி வைத்து தலநிர்வாகம், பஞ்சாயத்துத் துறை அமைச்சர் திரு எஸ்.எம்.ஏ. மஜீது அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.]

"கிராம வானொலி மன்றம்" மக்களுக்கு மேலும் சிறந்த வகையில் சேவை செய்யும் வழிவகைகளை ஆராயும் நோக்கத்தோடு நடைபெறுகின்ற கருத்தரங்கையும், பயிற்சி முகாமையும் ஆரம்பித்துவைப்பதில், மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். சுமார் 20 மாதங்களுக்கு முன்பு, முதல் முதலாக இது போன்ற கருத்தரங்கை, நமது முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம் அவர்கள், திருச்சியில் ஆரம்பித்துவைத்தது, உங்களுக்கு நினைவிருக்கும். கிராம மக்களுக்கென தயாரிக்கப்படும் சிறப்பு நிகழ்ச்சிகளை, ஒழுங்கான முறையில் கேட்கவும், கேட்டவற்றைக் கலந்து பேசவும், கிராம வானொலி மன்றங்கள் வாய்ப்பளிக்கின்றன.

### மக்கள் தலைவரின் நல்வாழ்த்துடன்......

நமது தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், இந்தத் திட்டம் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் தேதி, திருச்சியில், நமது தலைவர் காமராஜ் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. கிராம மக்களின் அனுபவங்களுக்கு வானொலியில் நல்ல வரவேற்பு இருக்குமென்றும், ஆகவே இத் திட்டத்தால் சிறந்த நன்மை ஏற்படுமென்றும், தலைவர் காமராஜ் இதற்கு நல்வாழ்த்து கூறினார்.

கடந்த சுமார் மூன்று ஆண்டுகளாக, எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் வானொலிப் பெட்டிகளை அளிக்கும் திட்டம், வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில், இன்றைய தினம், சுமார் 12,500 பஞ்சாயத்துக்களிலும் பொதுஜன வசதிக்கான ரேடியோப் பெட்டிகள் இயங்கிவருகின்றன. இவற்றைச் சரிவர பராமரிப்பதற்காக, பஞ்சாயத்து ரேடியோ பராமரிப்பு நிறுவனம் (Panchayat Radio Maintenance Organisation) உருவாகிச் செயல்பட்டுவருகிறது.

### மேலும் முன்னேற்றம் காணவேண்டும்

ஆனால், கிராம ரேடியோ மன்றங்கள் நடைபெறும் விஷயத்தில், நாம் மேலும் முன்னேற வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில், இன்றையதினம், சுமார் 600 கிராம வானொலி மன்றங்கள் இயங்கிவருவதாக அறிகிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்டக் கலெக்டரே, இவற்றின் அமைப்பாளராகச் (District organiser) செயல்புரிந்துவருகிறார். கலெக்டரின் சார்பாக, டெபுடி கலெக்டர்களும், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களும், இவற்றை மேற்பார்வையிட்டு வருகின்றனர். ஆயினும் இம் மன்றங்களின் முக்கிய பொறுப்பு, பஞ்சாயத்து யூனியனிலுள்ள கல்வி வளர்ச்சி அதிகாரிகளைச் சாரும். பஞ்சாயத்துத் தலைவர்களும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், கிராம வானொலி மன்றங்களை நன்கு நடைபெறச் செய்வதில் விசேஷ சிரத்தை காட்ட வேண்டியது மிகவும் அவசியம். ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும், வெள்ளிக்கிழமையிலும், 6-45 மணி முதல் 7-15 மணி வரை நடைபெறும் இந்த விசேஷ நிகழ்ச்சிகளை, கிராம வாசிகள் கேட்டுப் பயனடையுமாறு வழி வகுக்க வேண்டும்.

கிராம வானொலி மன்றங்கள் சரிவர நடைபெறுவதைக் கவனிக்கும் பொறுப்பு தமிழ்நாடு முழுவதுக்கும் பொதுஜனத் தொடர்பு அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை அவரால் மாத்திரம் செய்துவிட முடியாது. கிராமங்களுக்குச் சென்று பல்வேறு அபிவிருத்திகளை மேற்பார்வையிடுகின்ற பல்வேறு இலாக்காக்களின் அதிகாரிகளும் கிராமமன்றங்களின் வேலைகளில் ஓரளவு கவனம் செலுத்தவேண்டும். இதற்காகவே சில முக்கிய இலாகாக்களின் செய்தி விளம்பர அதிகாரிகளும் இந்தக் கருத்தரங்கிற்கு விசேஷமாக அழைக்கப்பட்டுள்ளனர். அந்தந்த இலாகாக்களின் வேலைகளை வானொலி நிகழ்ச்சிகளில் இடம் பெறச் செய்வது மிகவும் முக்கியம். அதைப் போன்றே, கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும் முக்கிய அதிகாரிகள் அனைவரும், சிறப்பாக, மாவட்ட அதிகாரிகள், கிராம வானொலி மன்றங்களைப் பார்வையிடுவது, அங்கேயுள்ள குறிப்பேடுகளில் தமது ஆலோசனைகளைக் குறிப்பிடுவதும், மிகவும் பயனளிக்கும். கிராம வானொலி மன்ற அங்கத்தினர்கள் நிறைவேற்றுகின்ற பொதுநலச் செயல்களை வானொலி நிலையத்தாருக்கும், 'கிராம நல' ஆசிரியருக்கும் அறிவிக்கலாம்.

உங்கள் அனுபவங்களை எடுத்துக்கூறி கிராம வானொலி மன்றங்கள் திறமையோடு பணியாற்றக் கூடிய ஆலோசனைகளைக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன். 'ரேடியோ மன்றம்' என்ற பத்திரிகை மூலம் கடந்த சுமார் ஓராண்டு காலமாக இது பற்றிய குறிப்புகள் பல வெளிவந்திருப்பதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இப் பயிற்சி முகாம், நல்ல முறையில் பணியாற்றி, மாநிலம் முழுவதற்கும் நல்வழி காட்டுமென்று நம்புகிறேன்.

கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART 2
பஞ்சாயத்து அரசிதழ்
PANCHAYAT GAZETTE

பஞ்சாயத்து அபிவிருத்தி பற்றிய அரசாங்க ஆணைகள், விதிகள் முதலியவற்றின் சுருக்கம் இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது.

## 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் பிரிவு 16-ன்கீழ், கிராமத்தையும், நகரத்தையும் வார்டுகளாக பிரிக்க, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளித்தல்.

## Act—Madras Panchayat Act 1958—Section 16—Division of a Village or Town into Wards—Power Delegated to Collectors.

**(Proceedings of the Joint Development Commissioner, No. 101087/Pt Ele/64-3, dated 14th September 1964.)**

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம், பிரிவு 16-ன்கீழ், பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரை பொதுவாக மேற்பார்வையாளரின் (Inspector) அதிகாரங்களை பிரயோகிக்க கூட்டு அபிவிருத்தி கமிஷனர், கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1634-ல் நியமிக்கப்பட்டுள்ளார், பஞ்சாயத்துக்களை அமைக்கும் பணியில், மேற்பார்வையாளரின் அதிகாரங்களை தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களே, மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 16-ன் கீழ், பிரயோகித்து வருவதால், நிர்வாகத்தின் சௌகரியத்தை முன்னிட்டு, அந்த மேற்பார்வையாளருக்கான அதிகாரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கே அளிப்பது உகந்ததாகக் கருதப்படுகிறது. ஆகவே, சென்னை கூட்டு அபிவிருத்தி கமிஷனர், கிராமம் அல்லது நகரத்தை வார்டுகளாகப் பிரிக்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கிறார்.

[சென்னை கூட்டு அபிவிருத்தி கமிஷனரின் 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ம் தேதியிட்ட அறிக்கை (Proceedings) எண் : 101087–ன் சுருக்கம்]

---

## கிராம அபிவிருத்திக் கமிஷனர் பதவி எடுபட்டதின் காரணமாக சில திருத்தங்கள் பிறப்பிக்கப் படுகின்றன.

## Establishment—Post of Additional Development Commissioner—Abolished—Consequential amendments—Ordered.

**(G. O. Ms. No. 1825, R. D. and L. A., dated 4th September 1964.)**

பொதுத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1351-ல், கிராம அபிவிருத்திக் கமிஷனரின் பதவியை 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி மாலையுடன் முடித்து, அந்த இடத்தில் கூட்டு அபிவிருத்தி கமிஷனர் என்ற தற்காலிக பதவி ஒன்றை ஏற்படுத்தி அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

கூட்டு அபிவிருத்தி கமிஷனரும், தன் பதவியின் காரணமாக (ex–officio) கிராம நல-தல நிர்வாகத் துறையின் கூட்டுச் செயலாளரு (Joint Secretary) மான அவர், துறைத் தலைவருக்குண்டான தகுதி, உரிமைகளை தொடர்ந்து பெற்று வருவதுடன், அடிப்படை விதிகள் (Fundamental Rules) துணை விதிகள் (Subsidiary Rules) பொருளாதார, கருவூல விதிகள் ஆகியவற்றின்கீழ், துறைத்தலைவரின் முழு அதிகாரங்களையும் அவர் பிரயோகிப்பார் என்று கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2650-க்கு திருத்தமாக, அரசாங்கம் இப்போது ஆணை பிறப்பிக்கிறது.

[கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1825.]

---

## தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1958—கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களில் மாறுதல்கள்.

## Act—Madras Panchayat Act, 1958—Appointment of Additional Development Commissioner to exercise the powers and perform the duties of Inspector and delegation of powers vested in Government made to the Additional Development Commissioner—Orders modified.

### (G.O. Ms. No. 1634, R. D. and L. A., dated 5th August 1964)

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் சில பிரிவுகளில் சோதனையாளரின் (Inspector) அதிகாரங்களை பிரயோகிக்கவும், மற்றும் காரியங்களைச் செய்யவும், கிராம அபிவிருத்தி கமிஷனர், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1334, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 3202 ஆகியவைகளில் நியமனம் செய்யப்பட்டார். கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1335-ல், அரசாங்கம் தன்னிடமுள்ள சில அதிகாரங்களை கிராம அபிவிருத்தி கமிஷனருக்கு அளித்துள்ளது. கிராம அபிவிருத்தி கமிஷனரின் பதவி 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி மாலையுடன் எடுக்கப்பட்டு, அந்த இடத்தில் கூட்டு அபிவிருத்தி கமிஷனர் நியமனம் செய்யப்பட்டுள்ளதால், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1334-க்கும், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 3202-க்கும் பகுதி-திருத்தமாக, கூட்டு அபிவிருத்தி கமிஷனரை, சோதனையாளரின் அதிகாரங்களை பிரயோகிக்கவும், மற்றும் காரியங்களைச் செய்யவும், சோதனையாளராக அரசாங்கம் நியமிக்கிறது.

குறிப்பு.—கூட்டு அபிவிருத்திக் கமிஷனருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இவ்வாணையின் இணைப்பு I, II-ல் கூறப்பட்டுள்ளன. இவ்வாணை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், எல்லா துறைத் தலைவர்களுக்கும், எல்லா ரெவின்யூ கோட்ட அதிகாரிகளுக்கும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் தலைவர்கள் மூலமாக எல்லா பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 5—8—64 தேதியிட்ட அரசாங்க ஆணை 1634-ன் சுருக்கம்.)

---

## 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டத்தின்படி அரசாங்கத்திடமுள்ள சில அதிகாரங்களை கூட்டு அபிவிருத்திக் கமிஷனருக்கு அளிப்பது பற்றிய உத்தரவின் சுருக்கம்.

## Delegation—Madras Panchayat Act, 1958—Certain powers vested in Government—Made to Joint Development Commissioner—Ordered.

### (G.O. Ms. No. 1654, R. D. and L. A., dated 7th August 1964)

பொதுத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1351, 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை 6703 ஆகியவைகளில், கிராம அபிவிருத்தி கமிஷனர் பதவியை 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி மாலையுடன் எடுத்து விட்டு, அந்தப் பதவிக்குப் பதிலாக கூட்டு அபிவிருத்திக் கமிஷனர் என்ற பதவியை நியமன மான தேதியிலிருந்து ஓராண்டிற்கு, கிராம நல-தல நிர்வாகத் துறையில் ஏற்படுத்தி, அரசாங்கம் ஆணை வெளியிட்டுள்ளது.

2. 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டத்தின் பிரிவு 44(1)-ன் கீழ், பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களை நியமிக்கும் அதிகாரங்கள் —1960-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் தேதியிட்ட கிராம அபிவிருத்தித்துறை அரசாங்க ஆணை 1056-ன் படி—கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கு கொடுக்கப்பட்டிருந்ததானது, இனி கிராம நல-தல நிர்வாகத் துறையில் உள்ள கூட்டு அபிவிருத்தி கமிஷனருக்கு கொடுக்கப்படுகிறது என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1654-ன் சுருக்கம்.)

---

## மாநில சமூக நல போர்டுக்குத் தலைவர், அங்கத்தினர்கள், ஆகியவர்கள் புதிய நியமனத்திற்கான உத்தரவு.

## State Social Welfare Board, Madras—Reconstitution—Ordered.

### (G. O. Ms. No. 1939, R.D., and L.A., dated 23rd September 1964.)

கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1951-ன்படி ஏற்படுத்தப்பட்ட மாநில சமூக நல போர்டின் பதவிக்காலம் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதியோடு முடிவடைகிறது. ஆகவே மாநில சமூக நல போர்டைப் புதிதாக அமைப்பது பற்றி, அதன் தலைவரின் சிபாரிசுகளை, புதுடில்லி மத்திய சமூக நல போர்டோடு, அரசாங்கம் ஆலோசனை செய்தது.

(2) மாநில சமூக நல போர்டு, கீழ்க்கண்டவாறு புதிதாக அமைக்கப்படுகிறது என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

தலைவர்.

1. திருமதி சரோஜினி வரதப்பன், சென்னை.

அங்கத்தினர்கள்.

2. திருமதி அம்ருதா ராமசுப்ரமணியம், சென்னை.
3. திருமதி டி. என். அனந்தநாயகி, சென்னை.
4. ,, எம். சி. ஜதாவ், சென்னை.
5. ,, மந்தா கிருஷ்ணமூர்த்தி, சென்னை.
6. ,, பார்வதி சீனிவாசன், செங்கற்பட்டு.
7. ,, பங்கஜம் வெங்கடாச்சாரி, வட ஆர்க்காடு.
8. ,, அன்னபூர்ணி வீரப்பன், இராமனுதபுரம்.
9 ,, லக்ஷ்மி நாராயண ரெட்டியார், தென் ஆர்க்காடு.
10. ,, லக்ஷ்மி காந்தம்மா, எம்.எல்.ஏ., மதுரை.
11. ,, வி. செல்லம்மாள், தஞ்சாவூர்.
12. ,, கமலா ஆர். சாரி, திருச்சிராப்பள்ளி.
13. திருமதி ராஜாத்திகுஞ்சிதபாதம் எம்.எல்.ஏ. திருநெல்வேலி.
14. ,, நிர்மலா சீதாராமன், கன்யாகுமரி.
15. ,, சாவித்திரி சண்முகம், கோயம்புத்தூர்.
16. ,, அக்கம்மா தேவி, நீலகிரி.
17. ,, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி, சேலம்.
18. கூட்டு அபிவிருத்தி கமிஷனர், சென்னை.
19. கூட்டுக் காரியதரிசி, நிதித்துறை, தமிழ்நாடு அரசாங்கம்.
20. துணைக் காரியதரிசி (கல்வி) கல்வி, பொதுச் சுகாதாரத் துறை தமிழ்நாடு அரசாங்கம்.
21. மாநில குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி, சென்னை.

காரியதரிசி.

மாதர் நல இலாகா இயக்குநர், சென்னை.

(3) இந்தப் போர்டின் பதவிக் காலம் இவ்வாணையின் தேதியிலிருந்து, மூன்று ஆண்டுகளாகும்.

(4) இப்போர்டின் தலைமையிடம் சென்னையிலிருக்கும். உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினர்களுக்கான பயணப் படி, கிராக்கிப்படிகளைப் பொருத்தவரை இந்தப் போர்டு முதல் தர கமிட்டியாகக் கருதப்படும். உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களின் பயணப்படி, தினப்படி ஆகியவைகளுக்கான செலவினங்கள் "39, Miscellaneous—Social and Developmental Organisations—e. Miscellaneous—A. Department of Women's Welfare" என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1939.)

---

## கிராம சேவக்குகளை விவசாய சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்துதல் பற்றிய விளக்கங்கள்.

## Gramasevaks—Utilising them exclusively for agricultural work—Clarification regarding loan enquiry work—Issued.

### (Memorandum No. 123890, R. D. and L. A., dated 3rd August 1964.)

கிராம சேவக்குகள் விவசாய சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 949-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. இவ்வாணையின் காரணமாக, கிராம சேவக்குகள் கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 574-ல் ஒப்படைக்கப் பட்டுள்ளவாறு, கடன் விசாரணை வேலைகளை செய்யலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

2. இந்தக் கடன் விசாரணை வேலைகளை கிராம சேவக்குகளிடம் ஒப்படைத்திருப்பதின் முக்கிய காரணமே, விவசாய முன்னேற்றத்தில் தங்கள் கருத்துக்களை செயலில் கொண்டு வருவதற்காகவும், விவசாயிகளின் கடன் தேவைகளை நிர்ணயிப்பதற்காகவுமே ஆகும். "நில சீர்திருத்தம் மற்றும் விவசாயக்கடன் சட்டத்"தின் கீழ் ரயத்துக்களுக்கு கொடுக்கப்படும் கடன்கள் விவசாய முன்னேற்றத்திற்கேயாகும். ஆகவே, இந்த கடன் விசாரணை வேலைகளும் விவசாய வேலைகளில் ஒன்றுகவே கருதப்பட்டு, கிராம சேவக்குகளால் தொடர்ந்து செய்யப்பட்டு வரவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை : 123890.)

## பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள் தங்கள் சுற்றுப் பிரயாணத்தில் சிப்பந்திகளை அழைத்துச் செல்லுதல் பற்றிய அறிக்கையின் சுருக்கம்.

## Establishment – Panchayat Union Councils—Personal peons to Chairmen—Travelling Allowance—Clarification.

### (Memorandum No. 1783, R.D. and L.A., dated 27th July 1964.)

பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள், தங்கள் சுற்றுப் பிரயாணத்தின்போது, தங்களுடன் சிப்பந்திகளை அழைத்துச் செல்லவும், பயணப் படியை பெறவும் அனுமதிக்கப்படலாமா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்தது. அப்பரிசீலனையின் பேரில், எல்லா பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களும் தங்கள் சுற்றுப் பிரயாணத்தில் சிப்பந்திகளை அழைத்து செல்வது மிகவும் குறைக்கப்பட்டு அவர்களின் தேவை மிகவும் அத்தியாவசியமாக இருந்தால்தான் அழைத்துச் செல்லப்பட வேண்டும் என்று எல்லா பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கும் கூறும்படி எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கூறப்படுகிறது.

மேலும் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள் தங்கள் சுற்றுப் பிரயாணத்தில் சிப்பந்திகளை அழைத்துச் செல்வதை அனுமதிக்கத் தேவையில்லை என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசாங்கம் தெரிவிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 1783-ன் சுருக்கம்.)

---

## தனிப்பட்டவர்களால் கம்போஸ்ட் தயாரிக்கப்படுதலை ஊக்குவித்தல், அவர்களுக்கு ஆதரவுத் தொகை அளித்தல் பற்றிய அறிக்கை.

## Agriculture—Composting—Utilisation of Agricultural grant for promotion of composting by individuals—Payment of subsidy to individuals—Further instructions–Issued.

### (Memorandum No. 199451, R. D. and L. A., dated 1st July 1964.)

கிராம-நல-தல நிர்வாகத் துறையின் *1961*-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல், (அதன் இணைப்பு ஒன்று, பிரிவு இரண்டில் நான்காவதாக கண்டுள்ள, தனிப்பட்டவர்களுக்கு) கம்போஸ்ட் தயாரித்தலை ஊக்குவிக்க ரூ. 6,000 ஈடு மானியமல்லாத விவசாய மானியத் தொகை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. விவசாயிகளுக்கு மேலும் உற்சாகத்தை ஏற்படுத்தி, இந்த ஆதரவுத் தொகை திட்டத்தை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளவும், கம்போஸ்ட் தயாரிப்பதை அதிக அளவில் பெருக்கவும், இப்போது புது குழிகளுக்காக மட்டும் தனிப்பட்டவர்களுக்கு கொடுக்கப்படும் ரூபாய் 6-ஐ, ஒவ்வொரு ஆண்டும் தனிப்பட்டவர்களால் நிரப்பப்படும் ஒவ்வொரு குழிக்கும் ரூ. 3 விகிதத்தில், கொடுக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது.

2. விவசாயத் துறை இயக்குநருடன் மேற்கண்ட கருத்து பரிசீலிக்கப்பட்டது. அதற்கு அவர், தனிப்பட்டவர்கள் ஆதரவுத் தொகைகளைப் பெறுவதற்காக, ஒவ்வொரு தடவையும் ஒரு புதுக்குழியை வெட்டும்படி வலியுறுத்தத் தேவையில்லை என்று கருத்துத் தெரிவித்துள்ளார். என்றாலும், இலாக்கா ஊழியர்களால் உத்திரவாதம் செய்யப்பட்டு, ஒவ்வொரு தடவையும் நிரப்பப்படுகிற பழைய குழிகளில் ஒரு குழிக்கு ரூ. 3 வீதம் நிர்ணயிக்கப்படலாமென்றும், புதிதாக வெட்டப்பட்டு நிரப்பப்படுகிற ஒவ்வொரு புதுக் குழிக்கும் இப்போது அளிக்கப்பட்டு வரும் ரூ. 6 தொடரலாம் என்று விவாசயத்துறை இயக்குநர் கூறியுள்ளார்.

3. அரசாங்கம், விவசாயத்துறை இயக்குநரின் மேற்கண்ட கருத்தை ஏற்றுக்கொண்டு, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ல் [அதன் இணைப்பு ஒன்று, பிரிவு இரண்டில், நான்காவதாக கண்டுள்ளவர்களுக்கு] ஆதரவுத் தொகை அளிப்பது, மேற்கண்ட பாரா இரண்டில் கண்டுள்ளபடி, கீழ்கண்டுள்ள வரம்புகளுக்கு உட்பட்டு தளர்த்தப்படுகிறது என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. அந்த வரம்புகளாவன: கம்போஸ்ட்டுக்காக வெட்டப்படும் குழிகள் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதும், ஆதரவுத் தொகைகளை அளிப்பதில் தவறுகளைத் தவிர்க்கவும் ஆதரவுத் தொகைகளை பெறவும், இலாக்கா ஊழியர்களிடமிருந்து தகுந்த அத்தாக்ஷி பெற்று வருதல், வலியுறுத்தப்படவேண்டும் என்பதேயாகும்.

4. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460, மேற்கண்ட பாரா 3-ல் கண்டுள்ள அளவுக்கு திருத்தப்படுகிறது.

(கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 1–ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 199451.)

---

## கதர் திட்டங்களை மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் புனராலோசனை செய்வது பற்றிய விளக்கங்கள்.

## Community Development Programme—Khadi Schemes—Review by the District development Councils—Instructions—Issued.

### (Memorandum No. 191661, R.D. and L.A., dated 6th July 1964.)

கதர் திட்டத்தின் நடைமுறை பற்றிய ஒரு மாதாந்திர அறிக்கையை பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட கதர் அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அதை அவர், கதரின் அபிவிருத்தி பற்றி பரிசீலனை செய்து தன்னுடைய அறிக்கையை கதர் இயக்குநருக்கும், அதன் நகல்களை மாவட்ட ஆட்சிதலைவருக்கும், மாவட்ட அபிவிருத்தி மன்ற காரியதரிசிக்கும், மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் முன் அந்த அறிக்கையை வைக்க அனுப்பப்படவேண்டும் என்றும் கிராம நல-தல நிர்வாகத் துறையின் 20—8—1963 தேதியிட்ட அரசாங்க ஆணை 1859-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்தது.

2. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஜூன் 16-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 1694-ல் உள்ளபடியும், 1964-ம் ஆண்டு மே மாதம் 14-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1126-ல் கண்டுள்ளபடியும், பஞ்சாயத்து யூனியன்களின் உற்பத்தி திட்டங்களின் பேரிலான மாவட்ட ஆட்சித்தலைவர்களின் அறிக்கைகள் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் முன், அதன் புனராலோசனைக்காக கீழ்க்கண்டவாறு வைக்கப்பட வேண்டும்.

பிப்ரவரி மாதக் கூட்டம்.—செப்டம்பர், டிசம்பர் மாதங்களுடன் முடிவடையும் காலாண்டுகளுக்கான பரிசீலனை.

ஆகஸ்டு மாதக் கூட்டம்.—மார்ச்சு, ஜூன் மாதங்களுடன் முடிவடையும் காலாண்டுகளுக்கான பரிசீலனை.

கதர் திட்டமும், உற்பத்தித் திட்டங்களின் கீழ் வருவதால், அவைகளும், மற்றத் திட்டங்களைப் போல், மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் பிப்ரவரி, ஆகஸ்ட் மாதக் கூட்டங்களில் வைக்கப்பட கன்யாகுமரி, ராமனுதபுரம், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்.

3. இவ்விஷயத்தை அரசாங்கம் பரிசீலித்து, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 1859-க்கு பகுதி திருத்தமாக, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கிறது: மாவட்ட கதர் அதிகாரிகள் மாதாந்திர பரிசீலனை அறிக்கை நகல்களை மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும், சம்பந்தப்பட்ட மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் காரியதரிசிக்கும் அனுப்பத் தேவையில்லை. ஆனல் மார்ச்சு, ஜூன், செப்டம்பர், டிசம்பர் மாதங்களோடு முடிவடையும் காலாண்டுகளுக்கான பரிசீலனை அறிக்கைகளை, குறிப்பிட்ட காலாண்டு முடிந்து, தொடருகிற மறுமாதத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அனுப்பவேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மார்ச்சு, ஜூன் மாதங்களுடன் முடிவடையும் காலாண்டுகளுக்கான தங்கள் பரிசீலனை அறிக்கைகளை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் ஆகஸ்டு மாதத்திய கூட்டத்திலும், செப்டம்பர், டிசம்பர் மாதங்களுடன் முடிவடையும் காலாண்டுகளுக்கான மேற்கண்ட அறிக்கைகளை பிப்ரவரி மாதத்திய கூட்டத்திலும், இதர உற்பத்தி திட்டத்திற்கான தங்கள் பரிசீலனை அறிக்கைகளுடன் இவைகளையும் சேர்த்து மன்றத்தின் முன் வைக்க வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 6—7—1964 தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 191661.)

---

## பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கணக்குகள் நிர்வகிப்பு—பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் தன் பெயரிலேயே பாங்க் உண்டியல்கள் (Cheques) மூலம் தலநிதி கணக்கு (Local fund Deposit Account No. I) லிருந்து ரூ. 300-க்கு மேல் பெறுவது பற்றி மேலும் சில விளக்கங்கள்.

## Panchayat Union Councils—Maintenance of accounts—Drawal of Self—Cheques by the Commissioner on L.F. Deposit Account No. I for sums exceeding Rs. 300—further instructions.

### (Memorandum No. 64195, R.D. and L.A., dated 25th June 1964.)

தல நிர்வாகத் துறையின் 1960-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதியிட்ட அறிக்கை எண் 160974 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ம் தேதியிட்ட அறிக்கை எண் 139424 ஆகியவற்றில் கண்டுள்ள விளக்கங்கள்படி, அவைகளில் கண்டுள்ள எட்டு விதங்களைத் தவிர மற்றவற்றில், தலநிதி

▼

டெபாஸிட் கணக்கு I-லிருந்து, தன் பெயரிலேயே பாங்க் உண்டியல் மூலம் ரூ. 300-க்குமேல் எடுக்க முடியாது. ஆனால் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களினால் உத்தரவாதம் செய்யப்பட்ட முன் பணத் தொகையை எடுக்க, மேற்சொன்ன வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகள், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 251743-ல் தளர்த்தப்பட்டு விளக்கங்கள் அளிக்கப்பட்டது.

2. விவசாய உற்பத்தித் திட்டத்தின்கீழ், திருப்பி அளிக்கப்படும் செலவினங்களான தனிப்பட்ட நபர்களால் கம்போஸ்ட் தயாரித்தலை ஊக்குவித்தல். கிராம சகாயக் பணி நிர்வகிப்பு,பரீக்ஷார்த்த வயல்களை அமைத்தலும் (Demonstration Plots) பரீக்ஷார்த்த பண்ணைகளை நடத்துதலும் ஆகியவற்றிற்கான தொகுப்பு படிகளை (Bills) தயார் செய்யும் போது, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் ரூ. 300-க்கும் அதிகமான தொகைகளுக்கு தன் பெயரிலேயே உண்டியல்கள் எழுதவேண்டியிருக்கிறது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேலும் ரூ. 300-க்கு மேல் தல நிதி டெபாஸிட் கணக்கு I-லிருந்து தன் பெயரிலேயே உண்டியல்கள் எழுதக்கூடாது என்றிருக்கும் கட்டுப்பாட்டை, மேற்கண்ட திருப்பி அளிக்கப்படும் செலவினங்களுக்காக, தளர்த்தப்படலாம் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

(3) அரசாங்கம் இது விஷயத்தை தல நிதிக் கணக்கு ஆய்வாளருடன் பரிசீலனை செய்து, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள், தல நிதி டெபாஸிட் கணக்கு I-லிருந்து ரூ. 300 வரைதான் தன் பெயரிலேயே உண்டியல்கள் எழுதலாம் என்று வரையறுக்கப்பட்டிருந்ததை கீழ்க்கண்டவைகளுக்காகவும் தளர்த்தப்படுகின்றன என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(1) தனிப்பட்டவர்களால் கம்போஸ்ட் தயாரித்தலை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், கம்போஸ்ட் குழிகள் வெட்டியவர்களுக்கு ஆதரவுத் தொகை அளித்தல்.

(2) பரீக்ஷார்த்த வயல்களை அமைத்தல், (Laying of Demonstration Plots) பரீக்ஷார்த்த பண்ணைகளை நடத்துதலுக்கான செலவுகள்.

(3) கிராம சகாயக் பணி நிர்வகிப்பின்கீழ் கிராம சகாயக்குகளுக்கு ஆதரவுத் தொகை அளித்தல்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 64195).

---

## தகுதிவாய்ந்த கிராம சேவக்குகள், கிராமியப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற உபகாரச் சம்பளம் அளிப்பது பற்றி உத்தரவு.

## Committee—Scheme for the grant of scholarships to meritorious Gramasevaks for advanced courses of training in the Rural Institutions—Committee for selection of Grama sevaks—Constitution—Ordered.

### G.O. Ms. No. 1639, R. D. and L. A., dated 6th Auguts 1964.

தகுதி வாய்ந்த கிராம சேவக்குகள், கிராமிய பயிற்சி நிலையங்களில், உயர்ந்த ரக பயிற்சி பெறுதற்கு உபகாரச் சம்பளம் அளிக்க, இந்திய அரசாங்க, சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகம் ஒரு திட்டத்தை அதன் 1961-ம் ஆண்டு மார்ச்சு 29-ம் தேதியிட்ட கடிதத்தில் உத்தரவிட்டது. அத்திட்டத்தின்படி, தமிழ்நாடு அரசாங்கம், கிராம சேவக்குகளிடமிருந்து மனுக்களைக் கோரி, இம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள உபகாரச் சம்பள எண்ணிக்கையில் 5 மடங்கு கிராமச் சேவக்குகளின் பெயர்களை பொறுக்கி எடுத்து, எந்த கிராமிய பயிற்சி நிலையத்தில் வாய்மொழித் தேர்வும், பரீக்ஷை தேர்வும் நடத்தி, கிராம சேவக்குகள் பயிற்சிக்காக அனுப்பப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளதோ, அங்கு, அவர்களின் பெயர்களை அனுப்பவேண்டும். 1962-63-ல் மாவட்ட ஆட்சி தலைவர்களால் ஆரம்ப அளவில் தெரிந்தெடுக்கப்பட்ட கிராமச் சேவக்குகளிலிருந்து, மதுரை மாவட்டக் காந்தி கிராமத்திலுள்ள கிராமிய பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறவேண்டி, கிராம சேவக்குகள் முடிவாக தேர்ந்தெடுக்கப்பட ஒரு குழுவை, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் தேதி அரசாங்க ஆணை எண் 1270லும் அதேபோன்று 1963-64 ஆண்டுக்காக ஒரு குழுவை கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1344-லிலும் அரசாங்கம் அமைத்தது.

2. 1964-65-ம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள கிராமிய பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற, 16 உபகார சம்பளங்களை, இம்மாநிலத்திற்கு இந்திய அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. மேற்கண்ட பயிற்சி நிலையத்தில், உயர்ந்த ரக பயிற்சி பெற, கிராம சேவக்கு

களை முடிவாக தேர்ந்தெடுக்க, கீழ்க்கண்டவர்களைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

தலைவர் *(1)* கூட்டு அபிவிருத்தி கமிஷனர்.

அங்கத்தினர்கள் *(2)* விவசாயத் துறை இயக்குநர், சென்னை அல்லது அவரின் பிரதிநிதி.

*(3)* கோயம்புத்தூர் மாவட்டத்தில், பெரிய நாயக்கன் பாளையத்தில் உள்ள கிராமீய பயிற்சி நிலையத்தின் முதல்வர்.

மாவட்ட ஆட்சி தலைவர்களால் ஆரம்ப அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம சேவக்குகளை, மேற்கண்ட குழு நேர்முகத் தேர்வு நடத்தி, கிராம சேவக்குகளை முடிவாக தேர்ந்தெடுக்கும்.)

*3.* பெரியநாயக்கன் பாளையத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்குச் செல்லும் கிராம சேவக்குகள் சென்னை பயணப்படி விதிகளின்படி, பயணப்படியை பெற தகுதியாவார்கள். ஆனால், அவர்களுக்குண்டான நிர்ணய பயணப்படியிலிருந்து, தகுதியான அளவில் பயணப்படி பிடித்துக்கொள்ளப்படும். இந் நேர்முகத் தேர்வுக்குச் செல்லும் கிராமச் சேவக்குகளுக்கான பயணப்படி, தினப்படி செலவினங்கள், அவர்கள் ஊதியமும், படியும் பெறும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படவேண்டும்.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 6—8—1964 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1639.)

---

## கிராமப் பஞ்சாயத்துக்களின் கணக்குகளை நல்ல முறையில் எழுதுதல், காலாண்டு தணிக்கை செய்தல் ரசீதுகளை சோதனை செய்தல் ஆகியவற்றைப் பொறுத்து உத்திரவு.

## Panchayat—Village Panchayats—further improvements in maintenance of Accounts and prescription of quarterly Audit—Audit of Vouchers—Orders—issued.

## [G.O.Ms. No. 1154, R.D. and L.A., dated 20th May 1964.]

ஒரு உபக் குழுவிலுள்ள பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்துக்களின் காலாண்டு கணக்குச் சுருக்கங்கள் (Abstract) ஒவ்வொரு மாதமும் தயாரிக்கப் பட்டு, அவை பஞ்சாயத்து தலைவரால் ஆமோதிக்கப்பட்டபின், அந்தச் சுருக்கங்களின் அடிப்படையில் பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி தணிக்கையினை மேற்கொள்ளவேண்டும் என்பது கிராம நல-தல நிர்வாகத் துறையின் *1962*-ம் ஆண்டு நவம்பர் மாதம் *12*-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் *2446*-ல் உள்ள உத்தரவாகும். இந்த உத்தரவின் பிரகாரம், வரவு-செலவு கணக்குகளின் சுருக்கங்கள் மட்டுமே பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரிக்கு அனுப்பப்படுகிறதென்றும், பல தடவைகளில் அவை 'மட்டுமே பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியால் தன்னுடைய தலைமையிடத்திலிருந்தபடியே தணிக்கை செய்யப்படுகிறதென்றும் தெரிகிறது. மேலும் அதிக அளவில் பணம் எடுக்கப்பட்டிருந்தாலும், அல்லது செலவழித்திருந்தாலும் தான், பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரி பஞ்சாயத்துக்களுக்குச் சென்று ரசீதுகளைச் சோதிக்கிறார். இல்லாவிடில், அவை அத்துடன் முடிந்துவிடுகின்றன. மேற்சொன்ன முறையில் கணக்குகளைத் தணிக்கை செய்வதில், அதிகப்படி செலவினங்கள் கவனத்துக்கு வருவதோடு மட்டுமல்லாமல், கிராம பஞ்சாயத்து கணக்குகள் நாளது தேதி வரையில் சரியாக எழுதி வைக்கப்பட ஏதுவானாலும், அந்த ரசீதுகளையே சோதித்து, தணிக்கை செய்யும் அளவுக்கு ஒரு கட்டுப்பாடாக இல்லை. ஆகவே கிராம நல-தல நிர்வாகத் துறையின் *1962*-ம் ஆண்டு நவம்பர் மாதம் *12*-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் *2446*-ல் வரையறுக்கப்பட்ட காலாண்டு கணக்குச் சுருக்க தணிக்கைகள் அதிக ஆக்கத்தைப் பெற, பஞ்சாயத்துக்களால் பணம் கொடுக்கப்பட்ட ரசீதுகளின் காலாண்டு தணிக்கைகளும் அப்போதைக்கப்போது செய்யப்படவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. அதற்காக காலாண்டு கணக்குச் சுருக்கங்கள் தணிக்கையானது, பஞ்சாயத்துக்களால் பணம் கொடுக்கப்பட்ட ரசீதுகளின் காலாண்டு தணிக்கையும் சேர்ந்ததாகும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. ஆகவே எல்லா கிராம பஞ்சாயத்துத் தலைவர்களும் இனிமேல் காலாண்டுக்கான கணக்குச் சுருக்கங்களைக் கிராம நல-தல நிர்வாகத் துறையின் *1962*-ம் ஆண்டு நவம்பர் மாதம் *12*-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் *2446*-ன்படி பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியால் தணிக்கை செய்யப்பட அனுப்பும்போது, அந்த காலாண்டுக்கான பணம் கொடுக்கப்பட்ட ரசீதுகளையும் சேர்த்து அனுப்பவேண்டும். எந்தக் காலாண்டுக்கு ரசீதுகள் தணிக்கை செய்ய அனுப்பப்படுகிறதோ, அந்தக் காலாண்டுக்கான ரசீதுகளுடன், பணம் கொடுக்கப்பட்டவைகளின் விவரமும் (ரசீது எண்களோடு) ஒவ்வொரு மாதத்திற்கான தொகையும் கொண்ட ஒரு ஜாபிதா உடன் அனுப்பப்பட வேண்டும்.

*(2)* இந்த உத்தரவில் கண்டுள்ளவைகளை தங்கள் வரம்பிலுள்ள கிராம பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளுக்கு தெரிவிக்கும்படி சென்னை, கன்னியாகுமரி தவிர்த்து மற்ற எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு மே மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1154.)

**சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், பயிற்சி நிலையங்களிலுள்ள, பயிற்சி அளிப்பவர்கள், பயிற்சி பெறுபவர்களுக்கு முறையே பாதுகாப்புத் தொகை (Security Deposit), எச்சரிக்கைத் தொகை (Caution Deposit)களை வரையறுத்தல்.**

**Community Development Programme—Village Industries—Implementation by the Panchayat Unions—Instructors in Training Centre—Prescribing of security deposits—Caution deposit for trainees—Order passed.**

**(G. O. Ms. No. 1552, R. D. and L. A., dated 28th July 1964)**

பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படும் தொழிற்கூடங்களில் பயிற்சி அளிப்பவர்கள் (Instructors) போன்ற பொறுப்பாளியாக உள்ளவர்களிடமிருந்து பாதுகாப்புத் தொகைகளும், பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுபவர்களிடமிருந்து எச்சரிக்கை தொகைகளும் வசூலிக்கப்படவில்லை என்று திருவெள்ளூர் வட்டாரக் கணக்குகளை தணிக்கை செய்யும்போது மாநில கணக்காய்வுத் தலைவர் (Accountant-General) கண்டுள்ளார். ஆகவே, மாநில கதர், கிராம கைத்தொழில் போர்டின், காரியதரிசியுடன் கலந்தாலோசித்து, மேற்கண்ட பாதுகாப்புத் தொகைகளும், எச்சரிக்கைத் தொகைகளும் நிர்ணயிக்க, தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தணிக்கையில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மாநில கதர், கிராம கைத்தொழில் போர்டின் காரியதரிசியும், தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பாரா 1-ல் கண்டுள்ள கருத்துக்களை கவனமாக பரிசீலனை செய்தபின், அரசாங்கம் கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கிறது.

கிராமத் தொழில்கள் திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள அதிகாரி அல்லது பணியாளர் இவர்களிடமிருந்து பஞ்சாயத்து யூனியன் மன்றம் அவசியமானது என்று கருதும் அளவுக்கு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் பாதுகாப்புத் தொகைகளை கோரலாம். ஆனால், அவ்வாறு கோரும் பாதுகாப்பு தொகைகள், அந்த அதிகாரி, அல்லது பணியாளரால், கையாளப்படும், அல்லது கையாளக்கூடும் பொருள்களுக்கான பண மதிப்புகளின் தொகைகளுக்கு மிகுதியாக இருக்கக்கூடாது. ஆனால் போர்டின் அலுவலர்கள், பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் ஆகியவர்களுக்கிடையே சீரான கொள்கையை அனுசரிக்க, பயிற்சி அளிப்பவர்கள் போன்றவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பாதுகாப்புத் தொகைகள் ஏற்படுத்தப்படலாம் என்று பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அரசாங்கம் கருத்துத் தெரிவிக்கிறது.

ரூபாய் 70, அதற்குக் குறைவாக ஊதியம் பெறுபவர்களுக்கு ரூ. 250.

ரூபாய் 90, ஆனால் ரூ. 125-க்கு கீழ் ஊதியம் பெறுபவர்களுக்கு ரூ. 500.

ரூபாய் 125, அதற்குமேல் ரூ. 750.

இத்தொகை ரொக்கமாக வேலைக்கு நியமனமாகும் போது மொத்தமாக செலுத்தப்படவேண்டும். தவிர, இப்போது அலுவலில் உள்ளவர்களிடமிருந்து, ரொக்கமாக பாதுகாப்புத் தொகை சேர்ப்பிக்கப்படும் வரை, உறுதிமொழி பத்திரங்களை (Fidelity Bonds) ஏற்றுக்கொள்ளலாம் என்றும் அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. மேலும் இப்போது அலுவலில் உள்ளவர்களிடமிருந்து, மொத்தத் தொகையில், முதன்முதலாக 25 சதவீதம் வசூலிக்கப்படவேண்டும். மீதித் தொகை 16 முதல் 20 மாதத் தவணைகளாக வசூலிக்கப்படவேண்டும்.

4. சமூகத்தில் கீழ் நிலையிலுள்ள தனிப்பட்டவர்கள், தொழிலாளர்களே பயிற்சி பெற சேர்த்துக்கொள்ளப்படுவதாலும், ஊதியமாக அவர்களுக்கு மிகக் குறைந்த தொகையே அளிக்கப்படுவதாலும், எச்சரிக்கை தொகைகளை பயிற்சி பெறுபவர்களிடமிருந்து வலியுறுத்தத் தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

5. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் மேற்கண்டவற்றை தவறுயல் பின்பற்றவேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத்துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1552.)

---

**தமிழ்நாடு மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் சட்டம் 1958-ன் கீழ், வருடாந்திர அறிக்கைகளை சமர்ப்பிக்கும் முறையும், காலமும் பற்றிய உத்திரவின் சுருக்கம்.**

**Rules—Madras District Development Councils Act, 1958—Annual Report—Form for the report and time for submissions issued—**

**(G.O. Ms. No. 1192, R. D. & L. A., dated 30th May 1964.)**

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதிக்குப் பிறகு, கூடியவரை சீக்கிரமாகவே மாவட்ட அபிவிருத்தி மன்ற தலைவர், மன்றத்தின் முந்தைய ஆண்டின் உண்மையான, முழுமையான, ஒரு வருடாந்திர அறிக்கையை கீழ்க்கண்ட முறைப்படி தயாரிக்கவேண்டும்.

2. அவ்வறிக்கை அரசாங்கத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 15-ம் தேதி சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அறிக்கையை அனுப்பும் முறை

............மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின்..........வருடத்திற்கான ஆண்டறிக்கை

1 வரம்பும் (Jurisdiction), அமைப்பும்.

(அ) வரம்பு.

(1) 31-3-19—ல் அபிவிருத்தி மன்றத்தின் பரப்பு.

(2) இவ்வருடத்தில் வரம்பில் ஏதாவது மாறுதலிருந்தால் அவை.

(3) சென்ற மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை.

(4) இப்பரப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன்களின் எண்ணிக்கைகளும் பெயர்களும்.

(b) அமைப்பு

(1) இவ்வாண்டு அறிக்கையின் ஆரம்பக் காலத்தில் இருந்த தலைவர், உத்தியோக உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினர்களின் பெயர்கள்.

(2) பிறகு ஏற்பட்ட மாற்றங்கள் (ஏதாவது இருந்தால்.)

(3) விசேஷமாக அழைக்கப்பட்டவர்களின் பெயர்கள்.

II கூட்டங்கள்.

(1) இவ்வாண்டில் நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை.

(2) கூட்டம் நடத்தியதின் முறை.

(3) கூட்டங்களில் கலந்து கொண்ட அங்கத்தினர்களின் எண்ணிக்கை.

(4) ஒத்திப்போடப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கையும் அதற்கான காரணங்களும்.

(5) மொத்த எண்ணிக்கையில் வகுப்புவாரியாக ஆஜரான அங்கத்தினர்களின் சராசரி சதவீதம்.

(6) ஒழுங்குமுறை விதிகளின் நடப்பு.

III கூட்டங்களில் நடைபெற்ற அலுவல்கள்.

A. அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டவை.

(1) பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய பரிசீலனை.

(அ) உற்பத்தி திட்டங்கள்.

(இ) சமூக நல திட்டங்கள்.

(உ) நிர்வாகம், வேலை திட்டங்கள்.

(2) அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு கூட்டங்களில் நடைபெற்ற இதர காரியங்கள்.

B. அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படாத கூட்டங்களில் நடைபெற்ற இதர அலுவல்கள்.

(கூட்டங்களில் செய்யப்பட்ட முக்கியமான சிபாரிசுகளும், அவை அமுலாக்கப்பட்டதும் பற்றிய விபரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.)

IV குழுக்கள்.

(1) அமைக்கப்பட்ட குழுக்கள் பற்றிய விபரங்கள்.

(2) குழுக்களால் ஆன காரியங்கள்:—முக்கியமாக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை, குறைவெண் (quorum) இல்லாததால் ஒத்திப் போடப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை, கூட்டங்களில் விவாதிக்கப்பட்ட முக்கிய பிரச்னைகள்.

V மற்ற குறிப்புகள் (ஏதாவது இருந்தால்)

(கிராமநல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மே மாதம் 30-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1192-ன் சுருக்கம்.)

---

## வாழ்க்கை நிலை, வேலையுடைமை, விவசாயத்தில் அபிவிருத்தி சாதனங்களின் உபயோகம் ஆகியவற்றில் திட்டங்களின் ஆக்கங்களை அறிதல் பற்றிய அரசாங்க ஆணையின் சுருக்கம்.

## Planning and Development—Study of Impact of Plan—Programmes on levels of consumption, living and employment and use of improved methods in agriculture—Orders issued. [G.O. Ms. No. 917, Finance dated 21st July 1964.]

திட்டக் கமிஷனின் விருப்பப்படி, நுகர்வு, வாழ்க்கை நிலை, வேலையுடைமை, விவசாயத்தில் அபிவிருத்தி சாதனங்களின் உபயோகம் ஆகியவற்றில் திட்டங்களின் ஆக்கங்களை அறிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(2) சென்னை புள்ளி விவர இயக்குநரால் நடத்தப்படும் இந்த ஆய்வானது மூன்று பிரிவுகளாக அமைக்கப்படும்.

(அ) முதல் பிரிவு நிர்வாக விவரங்களை அடிப்படையாகக் கொண்டது.

(இ) இரண்டாவது பிரிவு 18-வது தேசிய மாதிரி சர்வேயில் கண்டுள்ளவைகளில் முக்கியமாக நுகர்வு, வேலையுடைமை, நிலவுடைமையையும், ரிஸர்வ் பாங்க் சர்வே செய்த கிராமியக் கடன் ஆகியவற்றையும் அடிப்படையாகக் கொண்டது.

(உ) மூன்றுவது பிரிவில் கீழ்க்கண்டவைகள் புதிதாக சர்வே செய்யப்பட்டு, சேர்த்துக்கொள்ளப்படும்.

(1) தரமான விதைகள், உரங்கள், செடிகளின் பாதுகாப்பு, நவீன விவசாயக் கருவிகள் போன்றவைகளை சேர்த்துக்கொண்டு உபயோகப்படுத்துதல்.

(2) நீர்ப்பாசன வசதிகளையும். அமைப்பையும் பயன்படுத்திக்கொள்ளுதல்.

(3) கல்வி, குடிநீர், மற்ற கிராமாந்திர வசதிகள்.

(4) மண் பாதுகாப்பு.

(5) கிராமங்களில் மின்சார வசதி.

(3) மேற்கண்ட ஆய்வுகளில் முதல் பிரிவு 1964-ம் ஆண்டு ஆகஸ்ட்–செப்டம்பர் மாதங்களிலும் இரண்டாவது பிரிவு 1964-ம் ஆண்டு டிசம்பர் முடிவு அல்லது 1965-ம் ஆண்டு ஜனவரியிலும் மூன்றுவது பிரிவும் (இந்த மூன்று பிரிவுகளும் சேர்ந்து) 1965-ம் ஆண்டு பிப்ரவரி முதல் மார்ச் வரைக் குள்ளாகவும் முடிக்கப்பட வேண்டும் என்று திட்டக் கமிஷன் காலவரையறை செய்துள்ளது.

(4) இம்மூன்று பிரிவுகளையும் கொண்ட இம்முழுமையான அறிக்கையில், பல்வேறு திட்டங்களின்மொத்த வளர்ச்சி, பல பிராந்தியங்களில் அந்த வளர்ச்சியின் பயன், சமூக பொருளாதார மக்கள் பகுதிகளைக் கொண்ட ஒரு குறியீடு சேர்க்கப்பட்டிருக்கும். இவ்விஷயங்கள் சராசரிக்கும் குறைவாக எந்தெந்த இடங்கள் பின்தங்கி உள்ளன என்றும், அவைகள் அதிக கவனத்தை பெறவேண்டும் என்றும் தெரிந்துகொள்ள பயன்படும். பல்வேறு பிராந்தியங்களின் ஏற்றத்தாழ்வான முன்னேற்றங்களின் பரிசீலனையும், அவை பற்றிய தீர்மானங்களும், சமூக-பொருளாதார மக்கள் பிரிவுகளும், இந்த அறிக்கையில் இடம் பெறும். இதன் மூலம் ஒரு துறையில் தனிப்பட்டு பின்தங்கியிருக்கும் பகுதி, திட்டத்திலுள்ள அந்தத் துறையிலிருந்து அந்த பிராந்தியம் அதிக கவனத்தைப் பெறும்.

(நிதித் துறையின் 21—7—64 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 917-ன் சுருக்கம்.)

## தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வானூர் வட்டாரத்தின் தலைமையிடத்தை திருச்சிற்றம்பலத்துக்கு மாற்றுதல் பற்றிய உத்தரவு.

## Panchayat Development—South Arcot District—Vanur Block—Fixation of Headquarters at Thiruchitrambalam—Orders passed.

### (G. O. Ms. No. 1640, R. D. and L. A., dated 6th August 1964)

அரசாங்கம், தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவருடன் ஆலோசனை செய்து,

1. தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வானூர் வட்டாரத்தின் தலைமையிடம், திருச்சிற்றம்பலம் கிராமத்தில் இருக்கவேண்டும் என்றும்;

2. திருச்சிற்றம்பலம் கிராமத்தில் அலுவலகக் கட்டிடங்கள், அலுவலர்கள் குடியிருப்புக்கள் கட்டி முடியும் வரை, வானூர் வட்டார தற்காலிக தலைமையிடம், வானூரிலேயே தொடர்ந்து இருக்கவேண்டும் என்றும்;

3. திருச்சிற்றம்பலம் கிராமத்தில் அலுவலக கட்டிடங்கள், அலுவலர்கள் குடியிருப்புக்கள் கட்டி முடிந்தவுடன், அந்த கிராமத்திற்கு தலைமையிடம் மாற்றப்படவேண்டும் என்றும்;

அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1640.)

---

## கிராமப் பஞ்சாயத்து தொகுப்பு படிவங்கள் (Village Panchayat Consolidated Forms) இலவசமாக விநியோகித்தல் பற்றிய உத்தரவு.

## Panchayat Unions—Supply of forms and registers—Village Panchayat Consolidated forms—Supply Free of Cost—Instructions—Issued.

### (G.O. Ms. No. 1393 R.D. and L.A., dated 2nd July 1964.)

இவ்விணைப்பில் கண்டுள்ள கிராமப் பஞ்சாயத்து தொகுப்புப் படிவங்கள் பஞ்சாயத்து யூனியன்களின் உபயோகத்திற்காக ஏற்பட்டவைகள். அவைகளில் பாரங்கள் 2-ம், 10-ம் எழுதுபொருள் அச்சுக்கூட இயக்குநரால் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களுக்கு இலவசமாக வினியோகிக்கப்படுகின்றன. மற்றப் படிவங்கள் சென்னை ஹோ & கோவினரால் இப்போது அனுப்பப்படுகின்றன.

(2) ஹோ & கோவினரால் அனுப்பப்படும் கிராமப் பஞ்சாயத்து தொகுப்புபடிவம் 2-ஐத் தவிர, பாரங்களுக்கு ஆகும் செலவு உதவி மானியமாக திருப்பித்தரப்படுமா என்று மாதனூர் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். கிராமநல-தல நிர்வாகத்துறையின் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2333-ன் பார்வைப்படி, கிராமப் பஞ்சாயத்து தொகுப்பு படிவங்களும், எழுதுபொருள், அச்சுக்கூட இயக்குநரால் வினியோகிக்கப்படுபவைகளில் சேர்த்துக் கொள்ளலாம் என்று வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(3) அரசாங்கம், மாதனூர் பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், ஆகியவர்களின் கருத்துக்களை ஆலோசித்து கீழ்க்கண்ட ஆணையைப் பிறப்பிக்கிறது:—

(அ) தேவையான படிவங்களுக்கு ஏற்கனவே, பணமும் உத்தரவுகளும் ஹோ & கோவினருக்கு கொடுத்துவிட்டபடியால், கிராம பஞ்சாயத்து தொகுப்பு பாரங்களுக்கான, தொகையை உதவி மானியமாக திருப்பி அளிக்கவேண்டிய அவசியம் தோன்றவில்லை.

(இ) கிராமப் பஞ்சாயத்து தொகுப்பு படிவங்கள், பஞ்சாயத்தின் பாங்க் கணக்குகளை வைத்திருக்க மட்டுமே தேவைப்படுவதாலும், அவைகள் இல்லாவிட்டால் இக்கணக்குகள் நடைமுறையில் அரசாங்க கஜானுக்களே வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதாலும், இப்படிவங்கள் அச்சிடப்பட்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு இலவசமாக அளிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள கிராமப் பஞ்சாயத்து தொகுப்பு படிவங்கள், இனிமேல் அச்சிடப்பட்டு, இலவசமாக பஞ்சாயத்து யூனியன்களுக்கு அளிக்கும்படி, எழுதுபொருள், அச்சுக்கூட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2333-ன் பிரகாரம், எல்லா பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களும் தங்களுக்கு வேண்டிய கிராமப் பஞ்சாயத்து தொகுப்பு பாரங்களின் எண்ணிக்கையைத் தங்களின் வருடாந்திர தேவையோடு சேர்த்துக்கொள்ளவேண்டும். இத் தேவைகள் 1964—65 முதற்கொண்டு இருக்கலாம்.

(4) உண்டியல் புத்தகம் (Cheque Books) வினியோகம் பற்றிய உத்தரவுகள், இந்தப் பாரங்களின் விலையைப் பற்றியதற்கும் பொருந்தும்.

### இணைப்பு.

| வரிசை எண். | படிவங்களின் வகை. |
|---|---|
| 1 | வி.பி.சி. 1 |
| 2 | வி.பி.சி. 2 |
| 3 | வி.பி.சி. 3 |
| 4 | வி.பி.சி. 4 |
| 5 | வி.பி.சி. 5 |
| 6 | வி.பி.சி. 6 |
| 7 | வி.பி.சி. 7 |
| 8 | வி.பி.சி. 8 |
| 9 | வி.பி.சி. 9 |
| 10 | வி.பி.சி. 10 |
| 11 | வி.பி.சி. 11 |
| 12 | வி.பி.சி. 12 |

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1393.)

---

## துறைத் தலைவர்கள் தவிர்த்து மற்ற அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளுக்கும், பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கும் இடையே கடிதப் போக்குவரத்து முறைபற்றி உத்தரவு.

## Office Procedure—Panchayat Union Councils—Correspondence between Gazetted Officers other than Heads of Departments and Panchayat Union Councils—Instructions—Issued.

### (G.O. Ms. No. 1081, R.D. and L.A., dated 8th May 1964.)

பஞ்சாயத்துக்களின் நிர்வாக அதிகாரிகள் என்ற முறையில், எல்லா அரசாங்கத் துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர்களும், ரெவினியூ கோட்ட அதிகாரிகளும், கோட்ட பஞ்சாயத்து அதிகாரிகளும், பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிகளுடன் நடத்தும் கடிதப் போக்குவரத்தில் 'குறிப்பு' (Memorandum) முறையைப் பயன்படுத்தலாம் என்றும், வட்டார வளர்ச்சி அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் உள்பட மற்ற எல்லா அலுவலர்களும், பஞ்சாயத்துக்களின் நிர்வாக அலுவலருடன் 'கடித முறை'யில் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளலாம் என்றும் கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2623-ல் அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. இதுபோலவே, இனிமேல், அரசாங்கத் துறைகளின் தலைவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள், ரெவினியூ கோட்ட அதிகாரிகளைத் தவிர்த்து மற்ற எல்லா அலுவலர்களிடம், பஞ்சாயத்து யூனியன் மன்றத்திடமும், அல்லது அதன் நிர்வாக அதிகாரிகளுடனும் நடத்தும் கடிதப் போக்குவரத்தில் 'கடிதமுறை'யை பயன்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் இப்போது ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு மே மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1081.)

---

## பஞ்சாயத்து யூனியன் மன்ற நிதி கணக்குகள் மேற்பார்வை குறித்து அரசாங்க அறிக்கையின் சுருக்கம்.

## Panchayat Union Councils—Financial and accounting aspects—Review of—Instructions—Issued.

### (Memorandum No. 95209 R. D. and L.A., dated 6th June 1964.)

பஞ்சாயத்து யூனியன்களின் நிதி நிலைமை, அவைகளுக்கான வழிவகைகள் ஆகியவற்றின் பேரில், ஆய்வாளர்கள், மேற்பார்வை அதிகாரிகள் போன்றவர்களின் தகுந்த கட்டுப்பாடும், கண்காணிப்பும் இருப்பதற்காக, கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 540, 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 14-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 573 ஆகியவற்றில் சில அறிக்கைகள் (Periodical) பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்களால், ரெவினியூ கோட்ட அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கும் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் வரையறுத்தது.

மேலும் இவ்வறிக்கைகளை ரெவினியூ கோட்ட அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சோதனை நோக்குடன் ஆராயவேண்டும் என்றும், அதன் நகல்களை அரசாங்கத்திற்கு மேற்கண்டவர்கள் அனுப்பவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். இவைகள் தவிர, பஞ்சாயத்து யூனியன் மன்ற அலுவலகங்களில் உள்ள கணக்குகளின் நிர்வகிப்பை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆண்டுக்கொருமுறை ஆராயவேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

(2) மேற்கண்டவற்றின் பயனாக, பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் கணக்குகளை வைத்திருக்கும் முறையில் சிறு முன்னேற்றம் காணப்படுகிறது. இருப்பினும், மேலும் இவைகளை அபிவிருத்தி செய்ய நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. அது ரெவினியூ கோட்ட அதிகாரிகள், மாதாந்திர அலுவலர் கூட்டங்களில் தங்கள் தனிப்பட்ட முறையில், கவனத்தை செலுத்தி அவர்கள் பஞ்சாயத்து யூனியன்களின் நிதி நிலை, அவைகளின் வழிவகைகள் போன்றவைகளை தீவிரமாக ஆராய்ந்தும், மேலும் முக்கியமாக, தல நிதி கணக்கு ஆய்வாளருக்கு மாதாந்திர கணக்குகள் சரியானபடி அனுப்பும் விஷயத்திலும், தங்களுக்கும், மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது குறித்தும் தங்கள் கவனத்தை செலுத்தினால் திறம்படச் செய்யமுடியும்.

மேலும் முக்கியமான விஷயங்களில், ரெவினியூ கோட்ட அதிகாரிகளின் கவனத்தைக் கவருவதற்காக அரசாங்கம் ஒரு கேள்வித்தாள் (அது இங்கு கொடுக்கப்படவில்லை) ஒன்றை தயாரித்துள்ளது; பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மாதாந்திர

அலுவலர் கூட்டங்களில் கலந்துகொள்ளும்போது மேற்கண்ட கேள்வித்தாளுக்கு பதிலுரைக்கத் தேவையான எல்லா விஷயங்களேயும் உடன் எடுத்து வரவேண்டும். தங்கள் பகுதியிலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனின் நிதி நிலைமையையும். கேள்வித்தாளில் கண்டுள்ள முறைப்படி ரெவினியூ கோட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்து, அப் பரிசீலனையின்போது தங்கள் கவனத்திற்குவந்துள்ள குறைகளை நிவர்த்திக்க அவர்கள் எடுத்துக்கொண்ட வழி முறைகளையும் அதில் குறிப்பிட்டு, அதன் நகல் ஒன்றை மறு மாதம் 20-ம் தேதி அல்லது அதற்கு முன்பாகவோ மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பவேண்டும்.

(3) இவ்விதமான பரிசீலனைகள், மாவட்ட ஆட்சி தலைவர்களை அடைந்தவுடன், அவர்கள் அவைகளை சோதனை நோக்குடன் ஆராய்ந்து, இன்னொரு கேள்வித் தாளில் கண்டுள்ளபடி (அதுவும் இங்கு கொடுக்கப்படவில்லை), அதன் நகல் ஒன்றை, அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டும். இவ்வாறு பஞ்சாயத்து யூனியனின் நிதி வழிவகைகளை ஆராய்வதற்கு தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாதம் ரூ. 20,000 முடிவுத் தொகைகளைக்கொண்ட பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக்கொள்ளலாம். பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சேர வேண்டிய மானியங்கள், உள்ளூர் வரி (Local Cess) போன்ற நிர்ணயிக்கப்பட்ட வருவாய்கள் கணக்கில் சரிசெய்யப்படவேண்டியது இருந்து, சரி செய்யப் படாமலிருந்தால், மாவட்ட ஆட்சித்தலைவர்களால் உடனே அந்த மானியங்களும், வருவாய்களும் சரி செய்யப்படவேண்டும். ஏதாவதொரு பஞ்சாயத்து யூனியனுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட வேண்டியிருப்பின், அந்தப் பஞ்சாயத்தின் நிதி நிலைமையை நன்கு ஆராய்ந்து அதற்கென உள்ள ஒரு பாரத்தில், தங்களுடைய சிபாரிசையும் எழுதி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 95209-ன் சுருக்கம்.)

---

## இந்த இதழில்....


| | பக்கம் |
|---|---|
| சுதந்திரச் சூத்திரம் .. .. | 3 |
| ஆக்கப்பணிபுரியும் தொண்டர்கள் .. | 4 |
| மனிதனும் மிருகமும் .. .. | 9 |
| விடுதலைக்கு வித்திட்ட வீரர்கள் .. | 15 |
| தூய்மையான சமுதாயம் அமைப்போம். | 17 |
| நகரமன்றத் தலைவர்கள் மகாநாடு .. | 20 |
| வீரர்களை உருவாக்கும் கல்விக்கூடம் .. | 28 |


## அடுத்த இதழில்....

சகோதரி நிவேதிதை

சேலம் விஜயராகவாச்சாரியார்

வானொலியின் சேவை

வறுமையின் கொடுமை (நாடகம்)

நேருஜியும்—குழந்தைகளும்
(விசேஷக் கட்டுரைகள்)

புதிய பஞ்சாயத்து ஆட்சியும்—கணக்குகள் பராமரிப்பும்.

திரும்பிப்பார் ! (விசேஷப் பகுதி)

---


கிராம நலம்: ஆண்டு சந்தா ரூ. 1-50.

வெளியிடுபவர் :
திரு. என். அனந்தபத்மநாபன், ஐ.ஏ.எஸ்.

ஆசிரியர் :
திரு. எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras. Wrapper printed at Screen Designs, Madras-2.



1

## கிராமங்களில்

## சத்துணவுத் திட்டம்



2



3

**1. பொ**து சுகாதாரத் துறை
இயக்குநர் திருமதி ஷர்மா,
பஞ்சாயத்து யூனியன்
அதிகாரிகளுடன்
கலந்தாலோசிக்கிறார்.
(படம்: ஆரணி வட்டாரம்)

**2. மா**தர்களுக்கான
சத்துணவைத் தயாரித்து,
மாதர் நலக்குழுவின்
விநியோகிக்கும் பணியை,
தலைவியர் உற்சாகத்தோடு
செய்து வருகின்றனர்.

(படம்: திருவிடைமருதூர் வட்டாரம்)

**3. மா**தர் சங்க உறுப்பினர்கள்,
கைக்குத்தல் அரிசி உணவு,
தயிர், கீரை, முளைவிட்ட மொச்சை ஆகிய
சத்துணவைத் தயாரித்து,
பள்ளிக் குழந்தைகளுக்கு
அளிக்கின்றனர்.

**4. ச**த்துள்ள உணவைத் தக்க முறையில்
தயாரிக்கும் விதங்களை,
கிராம மாதர்களுக்கு, முக்கிய
சேவிகைகள் சொல்லித் தருகின்றனர்.

(படம்: கிருஷ்ணகிரி வட்டாரம்)



4

WRAPPER PRINTED BY SCREEN DESIGNS, MADRAS-2.

REGD. NO. M.7277
©
தமிழ்நாடு அரசாங்கம்
1964

# அன்னையின் நாமம் வாழ்க!

"அறச் செல்வர் வள்ளுவனார் அன்புருவாம் வாசுகியோ !
மறை புகழும் வசிட்டமுனி மனைச்செல்வி அருந்ததியோ !
பொறை மிகுந்த தாய்க்குலத்தின் புகழ்மணக்கும் திருவுருவோ !
மறுவில்சீர் பாரதத்தின் மணிச்சுடராம் கஸ்தூர்பா !"



